68

# ஜகன் மோகினி

துன்முகி ளு மார்கழி 1—1—57

## நக்ஷத்ர மண்டலம்

செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரம்.

68 பேசுகிருர்.

மலர் 3 இதழ் 1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - APR 1957
MADRAS



JL
1M2237
M57·341,
183204



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீர்ராகவ கவி

ஜனவரி 1957. மலர் 34, இதழ் 1. துன்முகிஸு மார்கழிமீ

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வாழ்க நற்றமிழ், புத்தாண்டு புதுமெருகுகள் —V. K. பார்த்தஸாரதி | 1 |
| பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி | 7 |
| பக்த விலோசனம் திருக்கண்ணபுரம்- —ஸ்ரீநிவாஸ அய்யங்கா | 9 |
| கண்ணன் என் காதலன் —சின்ன ரங்கா | 14 |
| எங்களது இன்பச் செல்வு —T. S. ராஜகோபாலன் | 16 |
| நான் கண்ட அமெரிக்கா —ஆநூரி | 20 |
| காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி | 25 |
| மனப் புயல் —P. S. அரவிந்தா | 28 |
| நக்ஷத்ர மண்டலம் செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரம் பேசுகிருர் —ஸாரக்ராகி | 37 |
| ஆபத் சகாயம் —புஜலா | 41 |
| என்னருமைத் தந்தை —வை. மு. விஜயலக்ஷ்மி | 46 |
| வை. மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் -வை. மு. விஜயலக்ஷ்மி | 129-144 |





வாசக அன்பர்களுக்கு, நமஸ்காரம். கடவுள் கிருபையாலும், உங்கள் எல்லோருடைய ஆசியினுலும், ஆதரவினுலும் மோகினி முப்பத்தினுலாவது வயதுடன் புதிய விஷயங்களைத் தாங்கிக்கொண்டு காட்சி அளிக்கிருள். அவளுடைய பொங்கல் வாழ்த்துக்கள் யாவருக்கும் உரித்தாகுக.

எல்லோருடைய மனையிலும் கடவுளின் கருணையால் பொங்கல் பொங்கி ஆனந்தம் தாண்டவமாட வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ. வி.கே. பார்த்தசாரதி அய்யங்கார், B.A., B.L.

# வாழ்க நற்றமிழ்; புத்தாண்டுப் புது மெருகுகள்

**வாழ்க நற்றமிழ்.**

ஜகன் மோகினி, முப்பத்தி மூன்ருமாண்டு முடித்து, முப்பத்தி நான்காம் மலர், மலர்கின்றது. தமிழ்மணம் வீசி, ஞான வெளிச்சம் பரவிடப் பிரார்த்தித்து, புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறி, மலர்மகள் மணுளன் மலரடியிட்டுப் புதுமலரை வழங்குகிருேம். வாழ்க நற்றமிழ்.

**தேசிய பஞ்சாங்கம்.**

23-10-1956 ல் வெளிவந்த அதிகார அறிக்கைப்படி, 22-3-1957 முதல், 'ஒரு சீர்த் தேசிய பஞ்சாங்கம்',—(Uniform National calender)—, எல்லா மாகாணங்களிலும் அமுலுக்கு வரப்போகிறதாம். சென்னை மாகாண கஜெட்டுக்களும், அகில இந்தியா ரேடியோவும், இனி, இந்தப் புதுப் பஞ்சாங்கப்படிக்கான தேதிகளையும் அறிவுறுத்துமாம் :- நமது தமிழ் வருஷப்பிறப்பு, இனி, எப்பொழுதும் போல ஏப்ரல்மாதம் 14 தேதி சுமாருக்குவராது. மார்ச்சுமாதம் 22 தேதிக்கே வருவதாகும். விஷு புண்ய காலவிரதத்தை, திதிக் கணக்காக அனுஷ்டிக்க வேண்டியதை மறந்து, இனி, அரசாங்கப் புண்ய காலமாகக் கொண்டாடவேண்டும். பண்டைய கொடுங்கோல் மதவெறியாளர் ஆட்சியாவது, ஈசன் தாள்களில் மக்கள் மனம் அடிமைப்பட்டிட அமைந்திருந்தது. ஆனுல், இன்றைய குடியரசிலோ, அந்தச் சர்வேச்வரனையே மறந்து, மதப்பற்றற்ற புது மெருகுதரும் சமதர்ம சமூகம் தேடுகிருேம்!

**புதுமெருகு மணல்.**

நவயுக மனு என்ற பிருது பெற்ற அம்பேட்காரும், ஹிந்துமதம் வெறுத்து, நவயான புத்தமதம் கோரிப் பௌத்தமதம் தழுவிய இரண்டு மாதத்திற்குள்ளேயே, 6-12-56ல், மண் நீத்து, விண் ஏறிவிட்டார். அவர் சவத்தின்மீது, தெய்வீகப் புத்தர் சிலைவைத்து, ஊர்வலம் வந்தார்கள்!— இதுதான் நவயான புத்தமதம் போலும்!— அம்பேட்காரது சவச் சாம்பல், இண்டோ யூனிய மாகாணங்களுக் கெல்லாமும், பௌத்த மடாலயங்களுக் கெல்லாமும் விநியோகிக்கப்படுமாம்—. புது மெருகு மணல் போலும்!

**நவயுகமனு ஸ்ம்ருதி.**

விவாக சம்ஸ்காரத்தைச் சட்டமாக்கி, சொத்துரிமை நெறிகளையும் உருத்தெரியாது மாற்றியாகிவிட்டது. சாஸ்திர விதிப்படிக்கான சுவீகார சம்ஸ்காரத்தையும் இப்பொழுது ராஜாங்கம் சுவீகரித்து விட்டது. பிதுர்க்கள் சிரார்தத்திற்காக, வம்ச விருத்திவேண்டி, ஆண் பிள்ளை

களைச் சுவிகாரஞ் செய்துகொள்ள, நமது சாஸ்திரங்கள் அனுமதித்தன—இனிச் சிரார்த்தங்கள் செய்வதே பிசகென்றுதான் அம்பேட்காரே சொல்லிவிட்டாரே. அவருக்கும் முந்திக்கொண்டு, ஹிந்துசமூக கனதனவான்களும், திதிப்படிக்குச் சிரார்த்தம் செய்வதைக் கைவிட்டு, பெற்றோர் இறந்ததேதிப்படிக்குப்பத்திரிகைகளில் போட்டோ போட்டு ஞாபக மொழிகள் பிரசுரிப்பதையே சமூக தர்மமாக்கி வருகின்றனர். தவிர, வம்சவிருத்திக்கு, ஆண்மகனோடு பெண்மகவும் அவசியந்தானே என்ற ஆராய்ச்சி முடிவு காரணமாகப் போலும், நமது பிரதிநிதிகளான சட்டசபையாளர்களும், பெண்களையும், எவரும், இச்சைப்படிக்குத் தத்து எடுத்துக் கொள்ளலாமென்ற, 'ஹிந்து சுவீகார, ஜீவனும்ச'—, மசோதாவைச் சட்டமாக்கிவிட்டனர்—என்ன கருணை!—இத்துடன், நவயுக மனு ஆரம்பித்த 'ஹிந்து கோட்'—, பூர்த்தியாகி விட்டதாம். டாக்டர் அம்பேத்கார் ஆத்மாவாவது சாந்தியடையட்டும்!

**புதுத்தேர்தல்கள்.**

புதுத் தேர்தல்களை முன்னிட்டு, வாக்காளர் வாக்குறுதி பரித்திட, புதுப்புதுச் சட்டங்களெல்லாம், மக்களது புது நலன் என்ற போர்வையில், அவசர அவசரமாக வெளிவருகின்றன. புதுத் தேர்தல்கள், 25-2-57முதல் 12-3-57க்குள் முடிந்தேறி, 31-3-57க்குள் முடிவுகளும் பிரசுரப்படுவதாகும். 31-1-57ல், பிரதமர் நேருஜி, சென்னை வந்து காங்கிரஸ் கட்சிக்காதரவாகத் தேர்தல் பிரசாரத் துவக்கஞ் செய்துத் தென்னாட்டுப் பிரசாரப் பிரயாணமுஞ் செய்து முடித்து டில்லி திரும்புவார். இதற்காகத்தான், இப்புது வருஷத்தில், எதற்கும் ஓர் புதுமெருகு ஏறிவருகிறது.

**புதுவரிவசூல் திட்டங்கள்.**

மத்திய நிதி மந்திரி, தனது புது வரிவசூல் திட்டங்கள் இரண்டைச் சட்டமாக்கிக் கொண்டுவிட்டார். தொழில் முதல் கொண்டுபெறும் லாபங்களின் மீது புதுவரி—புது நிதியமைப்பில், 16 கோடி அதிக வருமானம் காட்டியுள்ளாராம். முன் போன்ற பத்தாக்குறை நிதியமைப்பு இனிக் கைவிடப்பட வேண்டுமாம்—வாக்காளர்களை வசீகரிக்கவே செய்யப்படும் இவ்வளவும் தனிப்பட்டோர் தொழில்களின் கழுத்தைத் திருகிப்பணமுடக்குகளும், சமூக கஷ்ட நஷ்டங்களுமுண்டாக்கத்தான் போகிறதென்பது இவரது எதிர்ப்பாளர் பிரசாரம்!—ராமனாண்டாலென்ன—ராவணனாண்டாலென்ன—எல்லாப் புது திட்டக் கட்டுப்பாடுகளும், நமது புதுப்புது நல்ன்கள் திறந்திடும் மார்க்கந்தானே யென்ற தீர்க்க தரிசனத்துடன் கள்ள மார்க்கெட்டுக் காரர்களும், இடைச் சுரண்டல் வழிப்பரியாளர்களும், லஞ்சம் பெருகிச்

183204

சுயலாபக்கியாதி தேடுபவர்களுமாக, முன்னறிவு திட்டங்கள் போட்டுவர மும்முறங்கொண்டு வருகிறார்கள்.

**நயாபைசா.**

1-4-57 முதல் புதிய தசவிதை அளவைக்கணக்கு அமுலுக்கு வரப்போகிறது. காலே அரைக்காலே வீசங்களை மறந்து, அணா, பைசா பழகிவந்த காலமும்போய், நயா பைசா பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் இனி—காலணாவுக்கு இரண்டு நயா பைசா—நூறு நயா பைசா கொண்டது ஒரு ரூபாய்—ஞாபகமிருக்கட்டும்.

**குதிரை நொண்டியானாலும்,—......**

சென்னை மாகாணத்திலும், சென்னை நிதி மந்திரியும் இடைக்கால நிதியமைப்பு தயார்செய்து, பத்தாக்குறை பட்ஜெட்டே நாட்டின் நலத்திற் காவதெனத் தமிழில்பேசி, முடியாது நிற்கும் திட்டங்களைப் பூர்த்தி செய்துகொள்ள, 5.06 கோடி ரூபாய் பத்தாக்குறை காட்டும் நிதியமைப்பை நிறைவேற்றிக் கொண்டுவிட்டார். குதிரை நொண்டியானாலும் கொள்ளு தின்பதில் குறைவில்லை யென்பதுபோல, மாகாணம் மிகச் சுருங்கினாலும், வரித்தேவை மிகமிக அதிகப்பட்டுதான் வருகிறது!—

**விவசாய அபிவிருத்தி மசோதா.**

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில், விவசாய அபிவிருத்திகோரி, குடிகளது ஸ்தாவர சொத்துக்களைக் கட்டாயக் குத்தகைகளுக்காகப் பரிமுதல் செய்திட அனுமதிக்கும் மசோதாவும் புதுச்சபை வருமுன் சட்டமாகிவிட்டது.

**சர்வோதய கிராம வாழ்க்கை.**

ஆசார்ய வினோபாவுக்குக் கிராமதானமாகக் கிடைத்துள்ள கிராமங்களின் வாசிகள், காந்தீஜியின் சர்வோதய லக்ஷியப்படிக்கான கிராம அபிவிருத்தி முறை வேண்டி, அரசாங்கத்தார் உதவிகேட்பதால், அதற்கான சட்டதிட்ட நிர்மாணங்களும் சீக்கிரத்திலேயே செய்யப்படுமென்று மதுரை கலெக்டர் முன்னறிவித்துள்ளார்—சர்வோதய கிராம வாழ்க்கையும் ராஜீயமாய்விட்டால்—,......

**ஜாதி, குல, ஞாபகம் இனி இல்லை.**

இதன் மத்தியில், தஸ்தாவேஜிகளில் ஜாதிமதப் பெயர்கள் குறிக்கப்படலாகாதென்ற சட்டமும் சீக்கிரத்திலேயே நிறைவேறப் போகிறது. பத்திரங்கள் மூலமாவது ஜாதி, குல ஞாபகம் பின்னோர்க்கு இருக்கக்கூடிய சந்தர்ப்பமும் போய்விட்டால், இனி வரப்போகும் தலைமுறையில், ஹிந்துக்கள், தம்மை ஹிந்துக்களென மதித்திடவுமாகூடும்? இந்தப் புதமெருகும், மதப்பற்றற்ற சமதர்ம சமூக அமைப்பின் அடிகோலிபோலும்-—.

**வெல்லப்பிள்ளையாரைக் கிள்ளி,—......**

எல்லா அவசரப் புதுச் சட்டங்களும், விலைவாசிகளைக் குறைத்து, பொது மக்களுக்குப் புதுநலன்கள் பெருக்கத்

தானும்—. ஆனல், விலைகள் மட்டும் ரேஷன் காலத்தி லிருந்ததைவிட அதிகமாகவே பறந்தேறித்தான் போகிறது—. அரிசி படி 1 ரூ 2 அணு, நல்லெண்ணை வீசை 3 ரூ; நெய் 8 ரூ; ஏழை மக்களது தினசரித் தேவைகளான உப்பும், புளியும், மிளகாயும் உயர் நிதானத்திலேயே நிலைத்து நிற்கிறது—.கத்திரிக்காய் கெட்டகேடு என்று அலக்ஷியமாகச் சொல்வார்கள்—அதுவும் 1 ரூ. விற்றுவந்தது—.

இந் நிலையில், வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி, வெல்லப் பிள்ளையாருக்கே நைவேத்தியஞ் செய்வதுபோல, குடிமக்களை வருத்தி வரிவசூலித்துக் குடிமக்களுக்குப் புதுநலன்கள் தரப்போகிறேமென ஆசைகாட்டிக் கொண்டே பழைய ஊழல்களுக்குப் புதுமெருகிட்டுப் போனல், வெல்லமும் மறைந்து, நைவேத்தியத்திற்குப் பிள்ளையாருங்கூட இல்லாது போகும் நெருக்கடி யல்லவோ நேர்ந்திடும்!

அதை மறைக்கத்தான் போலும் பொருளாதார நிபுணர் கமிட்டிகள், இக்கால அகோர அசாதாரண விலைவாசி உயர்வு காரணம், உலக தேசீய தடுமாற்றங்களே யென்றும் எவ்வித இடைக்கால அவசரச் சட்டதிட்டங்களாலும், அதனைக் கீழிறக்கக் கூடாததுவே யென்றும், ரிபோர்ட்டுக்கள் எழுதித்தள்ளிச் சம்பளம் வாங்கிப் போகின்றனர்—. இவர்கள் உணர்த்தும் தேசீயத் தடுமாற்றங்கள் யாவை?— அவற்றிற்குப் பொருப்பாளிகள் யார்?

**ஆப்ரோ ஏஷியன்குரூப்.**

ஐ. நா. சபையின் உலக தேசீய சமாதான முயற்சிகளெல்லாம் தடுமாற்றம் தீர்க்காது, ஏமாற்றமே தந்து வருகிறது. ஹங்கேரியர் சுதந்திரக் கிளர்ச்சியை ஸோவியத் ருஷ்யா அங்கீகரியாது, பூடாபெஸ்த் தெருக்களையெல்லாம் கலக அரங்காகவும் பிணக்காடாகவும் ஆக்கிப் போகிறது. ஸோவியத் படை வாபீஸ்வாங்கப்படும்வரை, ஐ. நா. மத்தியஸ்தம் பயனற்றதேயென்றும், உலகப்போர் பீதி, ஆசிய ஐரோப்பா கண்டங்களில் உறுமிக்கொண்டேதானிருக்குமென்றும், இந்தியாவின் பஞ்சசீலப் பிரயத்தனங்களெல்லாம் வீணே யென்றும், ஸ்ரீ வி. கே வி.மேனனும் பிரதமர் நேருஜீயும், ஐ. நா. சபையிலும், இந்திய பார்லிமெண்டு சபைகளிலும் சங்கையற முறையிட்டுள்ளார்கள். தனது செயலும் பேச்சும் திருப்திகரமாயில்லாவிட்டால், தனது பதவியை ராஜினமா செய்வதாகவும் ஸ்ரீ வி. கே. கி. மேனன் சொல்லிவிட்டார்—.இதனிடையே, தென் ஆப்பிரிக்காவில், நிறபேத பாரபக்ஷ அட்டூழியங்கள், உள்நாட்டுக்கலகம் பெருக்கிப்போவதோடு கூட, உலக நாடுகளின் கவனத்தையும் கலக்கம் மிகுத்துக் கவர்ந்து வருகிறது. ஐ. நா. வில்,

'ஆப்ரோ ஏஷியன் குரூப்'—; என்ற கக்ஷிப் பிளவு பலப்பட்டு, அமைதி குலைக்கிறது.

**சூயஸ் நிலைமை.**

சூ. எஸ். கால்வாய் பிரதேசத்தினின்றும் ஆங்கிலப் பிரஞ்சு படைகள் வாபீசுவாங்கித் தலை வணங்கியது, ஐ. நா. வெற்றிதான் என்கிறார்கள் ஒரு கக்ஷியார்.—இல்லையில்லை. சூ. எஸ். வழியிலேற்பட்ட அநிஷ்டங்களைச் சீர்ப்படுத்துவதிலேயே பரஸ்பர சந்தேகமும், குற்றச் சாட்டுகளும் ஏற்படுகிறதே!—முடிவில் நிரந்தரப் பாதுகாப்புப் பொறுப்புப் பிரச்னையும், எகிப்திற்கு ஈடு கொடுக்கும் கட்டமும் எழுங்கால், ஆங்கிலப் பிரஞ்சு ராஜதந்திரச் சுயரூபம் வெளிப்படும், என்று எச்சரிக்கிறார்கள் சந்தேகப் பிராணிகள்.—

**இந்தியாவின் உள்நாட்டு நிலை என்ன?**

வெளிதேசத் தடுமாற்றங்கள் இப்படியிருக்க, இந்தியாவின் உள்நாட்டு நிலையென்ன?—

காஷ்மீரப் பிரச்னை தீர்ந்ததென்று நினைத்தும், தீராத் தொல்லை தந்துதான் வருகிறது. காஷ்மீரத்திலும் ஐ. நா. படையணி பாதுகாப்பு கோருகிறார்கள் சில பாகிஸ்தானிய அதிகாரிகள். இதெல்லாம் அரசாங்க அனுமதி பெற்ற பிரசாரமல்லவென்றும், வெளிநாடுகளில் பாகிஸ்தான் அடைந்துவரும் தோல்விகளை மறைத்துப் பிரஜைகளுக்கு ஆசுவாசமுண்டாக்க, அமெரிக்க உதவிக்கனவு கண்டு வெளிப்படும் வீண் பிரசாரங்களேயென்பதுவும் இதர அதிகாரிகளது அபிப்பிராயம். புலியைப் பார்த்து பூனையும்சூடிட்டுக் கொண்ட கதைதான் இந்த ஐ.நா. படைப்பித்து. பூர்வீக உடன்படிக்கைப்படி, பாகிஸ்தானிய காஷ்மீரம் காலி செய்யப்படத்தான் வேண்டுமென நேருஜீ கூறிவிட்டார்.

காமன்வெல்த் விலக்குப் பிரசாரகர்களை கண்டித்த வகையில், 'பல நாடுகளைப் பிணைத்து இணைத்து நிற்கும் பாலத்தைப்போல நாம் காமன்வெல்த்துக்குள்ளேயே யிருந்துஉதவி உழைக்கவேண்டுமேயொழிய, வெளிவந்து பாலமுடைக்கும் பாதகர்களாகக் கூடாது'—என்று நேருஜீ உறுதி கூறிவிட்டார்.

**நேருஜீயின் மேனாட்டுவிஜயம்.**

பாலம் இணைக்கும் பிரசாரக் கருவியுடன், பஞ்சசீலக் கவசமணிந்து, 14-12-56ல் பறந்தோடி, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஐஸன் ஹவரையும், ஆங்கில ஸர் ஆந்தனி ஈடனையும் கனடா ஜெர்மனி அதிகாரிகளையுங்கண்டு பேசி 28-12-56ல் இந்தியா திரும்பி விட்டார். சூ. எஸ். பிரச்னையும், ஹங்கேரி பிரச்னையும் சீனத்தகராறுகளும் திருப்திகரமாகவே பேசிமுடிந்து மத்திய ஆசியா பிரச்னை முடிந்து, உலகப்போர் பீதி மறையுங்காலமும் புது மெருகு கொள்ளுமென்றும் நேருஜீ உறுதி கூறுகிறார்.

**கலாசாரப் புதுமெருகு.**

நமது ஆத்ம பலத்தை நாமே மறந்திட, நம்மவர்களே செய்தாலும், யூனெஸ்கோவின் ஒன்பதாவது மாநாட்டில் மேலே நாடுகளும் கீழை நாடுகளும் கலாசார உணர்ச்சி, முறைகளில் ஒன்று படப் பிரார்த்தனை யெழுந்து, இந்தியாவின் அளவிலாச் சகிப்புத்தன்மையையும், அதியத் புத ஹிம்ஸை வெறுப்பையும், அபரிமித சமதர்மப் பிரேமையையும் போற்றி, இந்தியாவையே வழிகாட்டியாகக் கொண்டு, இதர நாடுகள் ஒழுகிக் கலாசாரம் பெருக்கிட, வேண்டுதல் விடுபட்டுள்ளது. இது ஓர் கலாசாரப் புது மெருகு!

**தமிழ்பாஷை ஆட்சிமொழி.**

சென்னை மாகாணத்தில், இனித் தமிழே ராஜபாஷையாகி, படிப்படியாக ஆங்கிலத்தை ஒதுக்கவேண்டுமென்ற திட்டமும் அவசரச் சட்டமாகக்கலையப்போகும் சபைகளில் நமது நிதிமந்திரியால் கொணரப்பட்டு நிறைவேறி நிற்கிற புத்தாண்டு புதுமெருகில், தமிழ்ப் பாஷை ஆட்சி மொழியாகி, நாம் பாஷைச் சுதந்திர வெற்றி பெற்றது, பெருத்த ஆறுதல் தருகிறது—வாழ்க நற்றமிழர்!—.

★



# பகவத்கீதைக் குறிப்புகள்

ஸ்ரீராஜாஜி

## ஒன்பதாவது அத்தியாயம்.

**சுலோகங்கள் : 1-10**

இந்த அத்தியாயத்தில் முதலில் கீதாசாரியன இயற்கையின் தன்மையையும் அதற்கும் ஈசுவரனுக்குமுள்ள சம்பந்தத்தையும் விளக்குகிருன். அனைத்தும் ஈசன்; அனைத்திலும் ஈசன் புகுந்து நிற்கிருன். அனைத்தும் அவனுடைய வேலை. ஆயினும் அது ஜீவன்களுக்குத் தெரிய மாட்டாது. எல்லாம் இயற்கை விதியின்படி நடைபெறுகிறது. எல்லாப் பிராணிகளும் தாம் சுதந்திரமாக நடந்துகொள்ளுவதாகவே எண்ணும்படி ஈசனுடைய மாயை அமைந்திருக்கிறது. இயற்கை என்பது ஈசனுடைய அமைப்பு. அந்த இயற்கையின் வழியாக ஈசனுடைய நியமம் நடந்துவருகிறது. 'இயற்கைக்குமேல் கடவுள் என்னத்துக்கு, இயற்கை விதிகளின்படியே எல்லாம் நடக்கிறது' என்று எண்ணலாம். ஆனல், "இயற்கை என்பது கடவுளுக்குச் சம்பந்தப்படாத ஒரு தனி சுயராஜ்யம் அல்ல. அதுவே கடவுளின் நியதி. அது ஒரு தனித் தெய்வம் அல்ல.

இதைப் பகவான் முதலில் இந்த அத்தியாயத்தில் விளக்குகிருன.

"அனைத்தையும் தாங்குகிறேன். ஆயினும் நான் அவற்றைப் பற்றிக்கொண்டு நிற்பதில்லை. அவை தாமாகவே இஷ்டப்படி நடந்துகொண்டு சுதந்திரம் அனுபவிப்பதுபோல் விட்டிருக்கிறேன்!" என்கிருன் பகவான்.

இயற்கை நியதிகள் பகவானுடைய ஆணை; அவற்றின்படி எல்லாம் நடக்கின்றன; பகவானுடைய சங்கற்பம் இயற்கையாக நமக்குத் தோன்றுகிறது.

"காற்று சுதந்திரமாக இங்கும் அங்கும் வீசுகிறது. ஆனலும் அது ஆகாய வெளிக்குள் நின்றுதான் வீசுகிறது. அதைவிட்டு வெளியில் செல்ல இயலாது. அதைப் போலவே என் ஆதிக்கத்திற்குள் இயற்கை விதிகள் நடைபெறுகின்றன" என்கிருன்.

சுதந்திர உணர்ச்சி ஒரு மாயை என்பதை அறிந்து, எல்லாம் பகவானுடைய ஆக்ஞை என்பதை உணர்ந்துகொண்டு மக்கள் பகவானை ஆராதிக்கவேண்டும்.

இதற்குமேல் இந்த அத்தியாயத்தில் அனைத்தும் தானே என்பதைப் பிரித்துப் பிரித்து விளக்குகிருன்.

**சுலோகங்கள் : 15–21**

எல்லாவித வழிபாடுகளும் எல்லா யக்ஞங்களும் பரம்பொருளைச் சேருகின்றன. பூஜை முறைகளில் உள்ள வேறுபாடுகளைக் கண்டு குழப்பம் வேண்டாம் என்று மறுபடியும் வற்புறுத்திக் காட்டுகிருன். "பழைய முறைகளை விட்டுவிட்டு என்னையே நம்பி என்னையே தியானித்து வருகிறவர்களை நான் காப்பாற்றி வரு

வேன்" என்றும் பக்தர்களுக்கு இருபத்திரண்டாவது சுலோகத்தில் உறுதி கூறுகிறுன்.

**சுலோகங்கள் : 26-34**

"எந்த வழியிலாவது என்னைப் பூஜிக்கலாம். முறை வேறுபாட்டினுல் ஏற்றத் தாழ்வு இல்லை!" என்று இருபத்தாருவது சுலோகத்தில் உறுதி சொல்கிருன். எந்த முறையில் பூஜை செய்தாலும், எந்த விதமான தானம் செய்தாலும், எந்தத் தவம் செய்தாலும், எந்தக் காரியம் செய்துவந்த போதிலும், எனக்கு அர்ப்பணம் என்று செய்துவிட்டால் அவன் மோக்ஷம் அடைவான், கர்ம பந்தத்தில் சிக்கிக்கொள்ளமாட்டான் என்று முந்திச் சொன்னதை ஊர்ஜிதமாகச் சொல்லுகிருன். எந்தப் பாவம் செய்தவனுயினும் அவனுக்கு இந்த வழியில் நற்கதி ஏற்படும் என்று பிரமாணம் செய்து வாக்குறுதி தருகிருன். இதையே கீதை உபதேசத்தின் முடிவிலும் சரம சுலோகமாகப் பிரமாணம் செய்து "துயரப் படாதே" என்கிருன்.

எந்தக் காரியம் செய்தாலும் பற்றுகள் உண்டாக்கிக் கொள்ளாமல் சமுதாய நன்மைக்காகக் சுயநலமற்றுச் செய்துகொண்டு போனுல், அதுவே கர்ம மார்க்கம் என்கிருன். அதைப் போலவே எந்த விரதம், எந்தப் பூஜை எந்த வேள்வி செய்தாலும் அது பகவானுக்கு அர்ப்பணம் என்று செய்துவிடு என்கிருன்.

இதுவே கண்ணன் உபதேசித்த ஆராதன முறை.



# பத்தவிலோசனம்

பண்டித ரத்னம். ஸ்ரீமான், திருக்கண்ணபுரம் ஸ்ரீநிவாஸய்யங்கார்.

"வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசி
லுண்ணும்போது ஈதென்று, பார்த்திருந்து
நெடுநோக்குக் கொள்ளும்—பத்தவிலோசனத்
துய்த்திடுமின்"

என்பது ஆண்டாள் பாசுரம்—"பத்தவிலோசனம்" ஓரிடம்.

இதைப்பற்றிய வரலாறு ஸ்ரீபாகவதம் பத்தாவது ஸ்கந்தம் 23-வது அத்தியாயத்தில் காணப்படுகிறது.

ஒரு நாள் கண்ணன், அதி காலையில் தனது தோழர்களுடன் ஆநிரையை ஓட்டிச் சென்றான். பசுக்கள் ப்ருந்தாவனத்தில் வெகு தூரம் சென்று விட்டன. கோடையாகையால் வெய்யிலின் கொடுமை அதிகமாயிருந்தது. ஆங்காங்கு மரங்கள் இவர்களுக்கு நிழலைக் கொடுத்து உதவி செய்தன. ஸுதாமன், வ்ருஷபன் ஸுபலன் முதலிய தோழர்கள் அருகிலிருந்தனர். அவர்களைக் குறித்துக்கண்ணன் கூறலானான். "ஓ! தோழர்களே! இம்மரங்கள், குடைகள் போல் கவிந்து நமக்கு நிழலை அளிக்கின்றன. இவை மிகப் பாக்கியம் வாய்ந்தவை; பிறர்க்காகவே உயிர்பெற்று வாழ்கின்றன. காற்று, மழை, பனி, வெய்யில் முதலியவற்றைத் தாம் பொறுத்துக்கொண்டு தம் நிழலை வந்தடைந்தவர்கட்கு, அவற்றால் வரும் துன்பங்களை நீக்குகின்றன. ஸகல ஜீவராசிகளுக்கும் உபகாரம் செய்யும் இவற்றின் பிறவி, மிகச் சிறந்ததல்லவா? உலகில் சிறந்த புருஷனைக் கிட்டினவனைப் போலவே இவற்றைக் கிட்டிப் பயனைப்பெறாது செல்லுமவன் ஒருவனுமில்லை. இவை, தம் தம் இலை, புஷ்பம், பழம், தளிர், நிழல், பட்டை, வேர், பிசின், நறுமணம், முதலியவற்றைக் கிட்டுமவன் விருப்பப்படியே அளிக்கின்றன. ஸகல ஜீவராசிகளும் சரீரத்தைப் பெறுவதற்குப் பயனும் இவையே. தனது சரீரத்தாலும் மனத்தாலும் வாக்கினாலும் பொருளாலும் பிறர்க்கு உதவிசெய்யும் பிறவியே சிறந்த பிறவியாகும்."

இவ்வாறு கண்ணன் அவற்றைப் புகழ்ந்து, தளிரும் முறியும் பூங்கொத்துகளும் பழங்களும் செறிந்து வணங்கி நிற்கும் மரங்களின் நடுவு வழியாகவே மெல்ல யமுனைக் கரையை அடைந்தான். ஆங்கு விடாய்த்த பசுக்களை நீரூட்டி, நிழலிலே மறைத்து நிறுத்தினான். தானும் தோழர்களுடன் தெளிந்து குளிர்ந்த யமுனையின் நீரைப் பருகிக், கரையில் மரத்தின் நிழலிலே இளைப்பாறினான்.

கோபாலர்கள் அன்று பகலுணவு கையில் கொண்டுவரவில்லை. நெடுந் தூரம் அலைந்தபடியால் பசியால் வருந்தினர். அவர்கள் கண்ணனையும் பலராமனையும் பார்த்து, "தோழர்களே! எங்களைப் பசி மிகவும் நலியாநின்றது. எங்கள் சத்துருக்களைச் சமனம் செய்யுமாபோலே இப்பசிப் பிணியையும் நீங்களே சமனம் செய்யவேண்டும்" என வேண்டினர்,

அப்பொழுது கண்ணனும் உலகுக்கு ஆதியாய தன்னை எப்பொழுதும் சிந்தித்துப் பக்திசெய்யும் ருஷி பத்நிகளை இந்த வ்யாஜத்தாலே அநுக்ரஹம் செய்ய நினைத்தான். "கோபாலர்களே! பரம்பொருளை நன்கறிந்த சிறந்த அந்தணர்கள், ஸமீபத்திலேயே தேவர்களைக் குறித்து ஆங்கிரஸ ஸத்ரம் என்னும் யாகம் செய்கின்றனர். அங்கு நீங்கள் சென்று என்னுடையவும் என் அண்ணனுடையவும் பெயரைக் குறிப்பிட்டுப் பசிக்கு உணவு வேண்டினால், அன்னம் வேண்டிய அளவு கிடைக்கும்" என்று கூறினான்.

கோபர்களும் யாகம் நடக்குமிடம் சென்று, ருஷிகளை தண்டனிட்டனர். "ப்ராஹ்மணோத்தமர்களே! நாங்கள் கண்ணன், பலராமன் இருவருடையவும் ஆணைப்படி இங்குவந்தோம். எங்களுடன் பசுக்களை மேய்த்துக்களைப்பெய்திய அவ்விருவரும் பசியால் வாட்டமுற்று அன்னத்தை விரும்பி உங்களிடம் எங்களை வரக் காட்டினர். உங்களுக்கு ச்ரத்தையுண்டாகில் எங்கள் எல்லோருக்கும் அன்னம் அளியுங்கள். அக்நீஷோமீயம் என்னும் யாகம்முடிந்துவிட்டால் தீக்ஷை பெற்றவர்களின் அன்னத்தைப் புஜிப்பதுகுற்றமன்று என்றவதுவும் நீங்கள் அறிந்த விஷயமே" என்றனர்.

ஆனல் அவ்வந்தணர்கள் தங்களை யாசிப்பவன், "பகவாகிய கண்ணனே" என உணர்ந்தும் அவ்வார்த்தைகளைக் செவி ஏற்கவில்லை. ஏனெனில், அவர்கள் அம்பலமாய் அழிவுள்ளவைகளான ஸ்வர்க்காதி பலன்களையே விரும்புமவர் மிகக் கஷ்டப்பட்டுச் செய்யவேண்டும் கருமங்களையே மேலாக நினைத்துச் செய்யுமவர்; தாங்களே முதிர்ந்த ஞானமுடையவர் என நினைக்கும் அறிவிலிகள். தேசம், காலம், மந்த்ரம், தந்த்ரம், ருத்விக்குகள், அக்நி, தேவதை, யஜமானன், யாகம், தர்மம், முதலியன எவன் இட்ட வழக்கோ, கண் முதலிய வெளிப் புலன்களுக்குப் புலப்படாத ஸாக்ஷாத் பரப்ரஹ்மமும் எவனோ, அத்தகைய கண்ணனைச் சாதாரண மானிடனாகவே மதித்தனர். எனவே அவர்கள் ஒன்றும் கூறாதிருந்தனர்.

கோபாலர்களும் சிறிது தாமதித்தும், பதில் ஒன்றும் கிடைக்காமையால் ஆசையை இழந்து, கண்ணன்பால் சென்று நடந்த வரலாற்றைக் கூறினர். அப்பொழுது கண்ணன் புன்முறுவலுடன் தோழர்களே! உலகில் யாசிப்பவன் அவமதிப்புக்கு உள்ளாவது இயல்பே. அதை நீங்கள் நெஞ்சில் கொள்ள வேண்டாம். ஆனல் நீங்கள் அந்த மகரிஷிகளின் பத்னிகள் இருக்கும் பத்நீ சாலைக்குச் செல்லுங்கள். நானும் எனது அண்ணனும் இங்கு வந்திருப்பதை அவர்களுக்கு அறிவித்து, உணவைக் கேளுங்கள். அவர்கள் எப்பொழுதும் என்னிடம் வைக்கப்பட்ட மனதை உடையவர். எங்களிடம் மிக அன்புள்ளவர்; ஆதலால் வேண்டிய உணவை அளிப்பார்கள்" எனக் கூறினான்.

உடனே மறுபடியும் புறப்பட்டுக் கோபர்கள் பத்நீ சாலைக்குச் சென்றனர். அங்கு ருஷி பத்நிகளைக் கண்டு வணங்கி "ருஷி பத்நிகளே! ஸமீபத்தில் யமுனைக் கரையில் கண்ணன் பலராமனுடன் இருக்கின்றான். நாங்களெல்லோரும் பசுக்களை மேய்த்துக்

கொண்டு வெகு தூரம் வந்துவிட்டோம். பசியால் வாடி வருந்துகின்றோம். கண்ணனது ஆணைப்படி உங்களிடம் உணவுவேண்டி வந்தோம்'' எனக் கூறினர்.

நெடுநாளாய்க் கண்ணனை நேரில் பார்க்கவேண்டுமென்று விருப்பங் கொண்டிருக்கும் அந்த ருஷி பத்நிகளும், ஸமீபத்தில் வந்திருக்கும் அச்சுதனை (ஆச்ரயித்தவர்களை நழுவவிடாதவனை) காண விழைந்தனர். அவனிடத்துச் சென்ற மனத்தினராய் பாத்திரங்களில்நாலுவித அன்ன வகைகளையும் எடுத்துக்கொண்டு கண்ணனிருக்குமிடம் சென்றனர். தந்தையர், கணவன்மார், புத்திரர், உடன்பிறந்தோர் முதலியோர் அவர்களைத் தடுத்தும், அவர்கள் நிற்கவில்லை. அவர்களுக்குள் ஒரு ருஷி பத்னி தனது கணவன் நிர்ப்பந்தித்துத் தடுத்து நிறுத்தவே, ஆங்குக் கண்ணனிடம் சென்ற மனத்தினளாய் அவனையே த்யானித்து வந்த ஆனந்தத்தால் புண்ணியத்தை நீக்கியும், தான் எண்ணியபடி அவனை யடைய முடியாமையால் வந்த, மஹாதுஃகத்தாற் பாபங்களைக் கழித்தும், அவனையே நினைந்து சரீரத்தைவிட்டு முக்தையானாள்.

மற்றை ருஷிபத்நிகள் யமுனைக் கரையிலுள்ள உத்யானத்தில் அசோக மரத்தினடியில் எழுந்தருளியிருந்த கண்ணனைக் கண்ணுற்றனர். அவ்விடம் புதிய அசோகின் மலர்களாலும் தளிர்களாலும் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. தோழர்கள் நாற்புறமும் கண்ணனைச் சூழ்ந்திருந்தனர். அவன் நிறம் நன்னீர் முகில் போன்றிருந்தது. இடையில்சாத்திய பீதாம்பரம், மின்னைப்போன்றிருந்தது. காட்டுப் புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மாலை இரு மார்பை அலங்கரித்திருந்தது. மயிர்க்கொண்டை, மயில் தோகைகளால் பொலிவுற்றது. கருநெய்தல் மலர்கள் காதுகளை எழிலுறச்செய்தன. அலகங்கள் முன்னெற்றியை சோபிக்கச்செய்தன. அவன் ஒரு நடனைப்போல் தோற்றமளித்தான். ஒரு கையை தனது தோழனது தோளில் வைத்துக் கொண்டிருந்தான். மற்றொருகையில் மலர்ந்த தாமரைப் புஷ்பத்தை வைத்துச் சுற்றிக் கொண்டிருந்தான்; புன்முறுவல் பூத்து முகத்தில் பொலிவுடன் விளங்கினான். பல் முறை கண்ணனுடைய பெருமையைக் காதால் கேட்டு அதையே காதணியாகக் கொண்ட ருஷிபத்னிகள் கீழே கூறிய வேஷத்தோடு கண்ணனை தங்கள் புறக் கண்களாலும் கண்டு களித்தனர். இமையாத கண்ணினராய் கண்ணனது அவ்வுருவை நெஞ்சில் தேக்கி, மனத்தினால் அணைந்து, தம் மனத்திருந்த தாபங்களை நீக்கிக்கொண்டனர்.

அப்பொழுது மற்றைப் பற்றுகளை விட்டுத் தன்னைக் காண வேண்டி வருமவர்களது உள்ளத்தை உள்ளேயே நின்று அறியும் கண்ணனும் புன்முறுவலுடன், "ருஷிபத்னிகளே! வாருங்கள். உட்காருங்கள். உங்கள் வரவு நல்வரவாகுக. நாங்கள் உங்கட்குச் செய்ய வேண்டுவது என்ன? என்னைப் பார்க்க நீங்கள் தேடிவந்தது சரியே. எல்லோருக்கும் அந்தராத்மாவாகவும் ப்ரியனுமாகிய என்னிடம், தன் ப்ரயோஜனத்தை விரும்பும் விவேகமுள்ளவர்கள் உண்மையான பக்தியைச் செய்கின்றனர்; அதா

வது ஒரு பயனை விரும்பாததும் நிரந்தரமுமான பக்தியாகும். உலகில், ப்ராணன், புத்தி, மனது, பந்துக்கள், பெண்டிர், கணவர், புதல்வர், த்ரவ்யம் முதலியவை எவனுடைய (ஆத்மாவாகிய பகவானுடைய) ஸங்கல்பத்தினாலேயே ப்ரீதியை விளைவிப்பன ஆகின்றனவோ அவனைவிட ப்ரியமான பொருள் ஒன்று உலகில் உண்டோ? நீங்கள் உங்கள் அபிப்பிரயப்படியே நேரில் என்னைப் பார்த்து த்ருப்தி அடைந்தீர்கள். இனி உங்கள் கணவன்மார் இருக்கும் யாகசாலைக்குச் செல்லுங்கள். ருஷிகள் யாகத்தின் பாக்கியாகிய பாகத்தை உங்களை வைத்துகொண்டே நடத்த வேண்டிய (க்ருஹமேதிகள்) க்ருஹஸ்தர்களல்லவா?, அவர்களை அநுகிரஹிக்க நீங்கள் அங்குச் செல்லவேண்டியது அவசியமாகும்'' எனக் கூறினன்.

ருஷிபத்நிகளும், "ஸ்வாமி! தேவரீரை நாடி வந்த எங்களைக் கொடுமையுடன் இப்படி நியமனம் செய்யக்கூடாது. தேவரீருடைய "நமேபக்த: ப்ரணச்யதி" (எனது பக்தன் நாசமடைய மாட்டான்) என்ற ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றியருளவேண்டும். ஸகல பந்துக்களையும் காற்கடைகொண்டு உமது பாதத்தையே விரும்பி வந்தவர்கள், நாங்கள். தேவரீர் திருத்துழாய் மாலையை திருவடிகளால் அவமதிப்புடன் அளித்தாலும் எங்கள் சிரங்களால் சுமக்க விரும்பும் அடியரோமாவோம். எனவே தேவரீரது அடிமையிலேயே எங்களை நிலைநிறுத்தவேணும். இனி, எங்களை "கணவன்மார், தகப்பன்மார், புத்திரர் முதலியோரும் விரும்பமாட்டார்கள். மற்றையோரைப் பற்றியிருந்துதான் யாது பயன்? சத்ருக்களை அழிக்குமவனே' உன்திருவடிகளில் விழுந்த எங்கட்கு வேறு கதி யுண்டோ? அடிமையை ஏற்று அருளவேண்டும்'' என்று கூறினர்.

கண்ணனும், "ருஷிபத்நிகளே! உங்களைக் கணவன்மார் முதலிய உற்றுர் அவமதிக்கமாட்டார்கள். உங்களுக்குச் சிறந்த உலகங்களும் என்னால் அநுமதிக்கப்பட்டன. எனது வார்த்தையை தேவர்கள் அநுமோதிப்பதையும் நீங்கள் காணலாம். சரீரஸம்பந்தமானது மனிதர்களுக்குப்போல, பக்தர்களுக்கு ஸுகத்தையோ, ஸ்நேஹத்தின் வ்ருத்தியையோ, செய்யாது. ஆதலால் நீங்கள் என்னிடத்தில் வைத்த மனத்தினராய் சீக்கிரமாகஎன்னை அடையக் கடவீர்கள். என்னைப்பற்றிக்கேட்பதாலும், என்னைப் பார்ப்பதாலும், த்யாநம் செய்வதாலும், கீர்த்தனம் செய்வதாலும் எவ்வாறு ஒருவனது மனது என்னைப்பற்றி நிற்குமோ, அவ்வாறு ஸமீபத்திலிருப்பதால் அவனுக்கு மனப்பற்று உண்டாகாது. ஆதலால் நீங்கள் உங்களது யாகசாலைகளுக்குத் திரும்புங்கள்'' எனக் கூறினன். இவ்வாறு கூறப்பட்ட அவர்களும், தாங்கள் கொண்டு வந்த பலவகை அன்னங்களையும் கண்ணனுக்கு அளித்து, அவனை வெகுநேரம் ஸேவித்துத் தங்கள் யாகசாலைக்குத் திரும்பினர். அவர்கள் பந்துக்களும் கணவன்மார்களும் அவர்களிடம் த்வேஷம் கொள்ளவில்லை. அவர்களுடன் கூடியிருந்து யாகத்தை முடித்தனர். கண்ணனும் பலராமனுடனும் தோழர்களுடனும், ருஷிபத்நிகள் மிகுந்த ஆதரவுடன் அளித்த உணவு வகைகளை, மிகவும் ப்ரீதியோடு அமுதுசெய்தான்.

அந்த ருஷிகள் மாத்திரம் கண்ணன்பால் குற்றஞ்செய்தவர்களாகையால், தாங்கள் செய்ததை நினைந்து வருந்தினர். "நாம் வேதங்களைக் கற்றுணர்ந்து, வைதிக க்ரியைகளையும் நன்கு அனுஷ்டிக்கின்றோம் என்றும், ப்ருஹ்மத்தை யறிந்தவர்களென்றும், அகங்காரத்தையடைந்தோம். மநுஷ்யபாவனையை யடைந்து யாசித்த கண்ணனுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யப்பெற்றிலோம். கீழ்க்கூறிய குணலேசமுமில்லாத பெண்டிரும் பரமாத்வாவாகிய கண்ணனிடம் அலௌகிக பக்தியைச் செய்தனர். நேரில் அவனை ஸாக்ஷாத்கரித்துப் பயன்பெற்றனர். கண்ணன் இறைவனது அவதாரம் என்பதைக் கேட்டுமிருக்கிறோம். ஆயினும் ஸ்திரீகளுக்கு உண்டாகிய பக்தி நமக்கு உண்டாகாமல் போயிற்றே! குலத்தாலும் ஒழுக்கத்தாலும் வைதிக க்ரியைகளாலும் ஞானத்தாலும் யாது பயன்? தேசம், காலம், த்ரவ்யம், தேவதை,யாகம்,முதலியன எவனுக்கு அதீனமோ, அவனைவிட்டு க்ரியை முதலியவற்றைப் பெரிதாக நினைத்தோமே" என்றும் பலவாறு சிந்தித்தனர். "மழுங்காத மதியையுடைய பகவானே! ஆதிபுருஷனாகிய உனது மாயையினாலேயே உனது ப்ரபாவத்தை மறந்தோம். அதனாலேயே மோஹித்துக் கர்ம மார்க்கத்தில் சுழல்கின்றோம். கண்ணனே! நீ எங்களுடைய அதிக்ரமத்தைப் பொறுத்தருளவேணும்" என ப்ரார்த்தித்தனர். இதுதான் வரலாறு.

ஆண்டாள் பாசுரமும் அதன் பொருளும்.

**கார்த்தண் முகிலும் கருவிளையும்**
**காயா மலரும் கமலப் பூவும்**
**ஈர்த்திடு கின்றன என்னை வந்திட்டு**
**இருடீகேசன் பக்கல் போகே யென்று**
**வேர்த்துப் பசித்து வயிற சைந்து**
**வேண்டடிசி லுண்ணும் போது, ஈதென்று**
**பார்த்தி ருந்து நெடு நோக்குக் கொள்ளும்**
**பத்த விலோசனத் துய்த்திடுமின்.**

—"மற்றிருந்தீர்" பதிகம் 6-வது பாசுரம்.

ஆண்டாள் பக்தியின் மிகுதியால் தளர்ந்து கண்ணனை நேரில் அநுபவிக்க ஆசைப்பட்டாள். அது காலாந்தரமென்பதை உணர்ந்தஅவள்,கண்ணன் கிரீடை செய்த இடங்களுக்காவது சென்று தரிசிக்கநினைத்தாள். அதற்கும்கால்நடை தாராமையால் தன் பக்கத்திலிருப்பவர்களைக் குறித்து அவன்அவதரித்து லீலை புரிந்த மதுரை முதலிய இடங்களுக்கு என்னைக் கொண்டு சேருங்கள் என ப்ரார்த்திக்கும் இடங்களுள் இந்த பத்தவிலோசநம் என்பதுவும் ஒன்றாகும்.

இந்தப் பாட்டின் பொருள் : கறுத்துக் குளிர்ந்த நீருண்ட மேகமும், கருவிளைப்பூவும், காயாம்பூவும், தாமரைப்பூவும், "உன்னுடைய இந்த்ரியங்களைக் கொள்ளைகொண்ட கண்ணனிடத்து நீ போகமாட்டாயோ" என்று என்னைப் பற்றி இழுக்கின்றன. முதல் மூன்றும் தனித்தனியே அவன் திருமேனிக்கு ஒப்பன்று என்று

(15-ம் பக்கம் பார்க்க)

பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு குறிப்பு

# "கண்ணன் என் காதலன்"

ஸ்ரீமதி சின்ன ரங்கா

நானும் என் தங்கை ஆண்டாளும் எங்கள் ஆப்த தோழி சகுந்தலாவைப் பார்க்க பாரதியார் வீட்டை அடைந்தோம். படிஏறும் பொழுதே சிரித்த முகத்துடன் செல்லம்மா எங்களை வரவேற்றார். சகுந்தலா பலமான படுக்கை போட்டுப் பிழைத்த சந்தோஷத்திற்காக அன்று எங்களுக்கு அவர்கள் வீட்டில்தான் சாப்பாடு. எங்களைப் பார்த்த சகுந்தலா சந்தோஷ மிகுதியால் ஓடிவந்து எங்கள் இருவரையும் அணைத்துக்கொண்டு சமயல் அறைக்கு இழுத்துச் சென்றாள். பாரதியார் "வாருங்கள் கிளிகளே உங்களுக்காகத்தான் காத்து இருக்கிறேன்" என்று உள்ளே வந்தார். எல்லோரும் கும்மாளம் அடித்தவாறு புசித்து எழுந்தோம்.

பிறகு, விச்ராந்தி பெற மாடி வராண்டாவுக்குச் சென்றோம். விளையாடிக்கொண்டு இருக்கும் போது ஆண்டாள், "சகுந்தலா எதற்காக உனக்கு ஜுரம் வந்தது?" என்று கேட்டாள்.

முகத்தில் ஏக்கம் படர "இல்லை ஆண்டாள். உங்க அக்கா எனக்கு கொடுத்த கண்ணன் விக்ரகம் துலைந்துவிட்டது. அந்த ஏக்கத்தில் ஜுரம் வந்தது."

"பாவம்! நீ படுக்கையில் இருக்கும்பொழுது உன் அப்பா அம்மா சாப்பாடுகூட இல்லாது பக்கத்தோடு கிடந்தார்கள். நீ படுத்த பிறகு என்ன நடந்தது என்று எல்லாம் உனக்குத் தெரியுமா?"

எங்கள் சம்பாஷணையை கவனித்த பாரதி "ரங்கா! பாப்பா படுத்த பிறகு நடந்ததை எல்லாம் நான் "கண்ணன் என் காதலன்" என்று பெயரிட்டு கவிகளாக கட்டி இருக்கிறேன்" என்றார்.

அவ்வளவுதான் நாங்கள் ஆனந்தம் பொங்க இப்பொழுதே பாடி காட்டுங்கள் என்று அவரை சூழ்ந்துகொண்டோம். குழந்தைகளையே தன் ஜீவனாக எண்ணும் பாரதி எங்களை பெரிய ரசிகர்களாக மதித்து கவிமாறிபொழியத் தொடங்ஙனார்.

அதற்குள் செல்லம்மாவும் எங்களுடன் கலந்துகொண்டார். பாரதி தன் கம்பீரமான கண்டத்துடன்:—

**தூண்டிற் புழுவினைப்**
**போல்—வெளியே**
**சுடர் விளக்கினைப் போல்**
**நீண்ட பொழுதாக—எனது**
**நெஞ்சம் துடித்ததடி**
**கூண்டிற் கிளியினைப்**
**போல்—தனிமை**
**கொண்டு மிகவும் நொந்தேன்**
**வேண்டும் பொருளை எல்லாம்—**
**மனது வெறுத்து விட்டதடி**

என்று ப்ரம்மானந்தமாய் மெய் மறந்துபாடிக்கொண்டிருந்தார். அந்த சமயம் வீதிக் கதவை யாரோ தட தடவென்று தட்டும் ஓசைக் கேட்டு செல்லம்மா எழுந்து ஓடினார். வந்தவர் வேறு யாரும் இல்லை. எங்கள் தாயார்தான். சகுந்தலாவை பார்க்க வந்தார். செல்லம்மாவும் அவளும் உள் அறையில்

அளவளாவிக் கொண்டு இருந்தார்கள். ஸ்வாரஸ்யமாய் கேட்டுக் கொண்டு இருந்த பாட்டு நின்றதில் பொறுமை இழந்த நாங்கள் "நீரும் ஐயர் கதை எழுதுவதுபோல் பாதியில் நிறுத்தி விட்டீரோ? சகுந்தலா குணமான பிறகு என்ன என்று சொல்லவேண்டாமா?" என்று கேட்டேன். என் தாயாரை பார்க்க சென்ற சகுந்தலா ஆனந்தக் கூத்தாடியவாறு முகமெல்லாம் பூரிக்க "இதோ பார் அப்பா! என்கெட்டுப் போன கிருஷ்ணன் விக்ரகம் போலவே இவாத்து மாமி கொடுத்தார்" என்று பாரதியிடம் கொடுத்தாள். அவருக்கு ஏற்பட்ட ஆச்சர்யத்துக்கு அளவே இல்லை. உடனே :—

**உச்சிகுளிர்ந்ததடி—மெய்யே**
**உடம்பு நோகாச்சு**
**மச்சிலும் வீடுமெல்லாம்—**
**மூலைப்போல்**
**மணக்கத் தததடி.**

என்று பாட்டை பூர்த்தி செய்து எங்களுடன் களித்தார். அந்த "கண்ணன் என் காதலன்" என்ற அச்சிட்ட பாட்டு புஸ்தகத்தில் "அன்பு பரிசு" என்று எழுதி அவர் கை எழுத்திட்டு கொடுத்த புஸ்தகத்தை இன்றும் நான் மாணிக்கமாய் போற்றி வருகின்றேன்.

---

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றையு மெடுத்தது. தாமரை என்றது அவயங்களுக்குப் போலியாகக் கொள்ளப்பட்டது. இப்படி வடிவையும் அவயவங்களையும் நினைப்பூட்டி நலிகின்றன இவை. கண்ணன் பசுக்களை காதம், இருகாதம் செல்லவிட்டு, அதன் பின்னே திரிந்து மிகப் பசியினால் வருந்தி, பசிக்குஉணவு வேண்டி ரிஷிகளிடம் கோபர்களை அனுப்பி எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். அவர்கள் கருமங்களைப் பெரியதாக நினைக்குமவர்களாகையாலே, உபேக்ஷித்திருக்க, கோபர்கள் வ்யர்த்தமே திரும்பலுற்று, மறுபடியும் கண்ணனது வார்த்தைகளைக் கேட்டு அவர்களுடைய பத்நிகளிடம் அடிசிலை யாசிக்கும். அவர்கள் வேண்டியிட்ட அடிசிலை அதன் வரவு பார்த்து வியர்த்துப் புசித்துத் தடுமாறிநின்று உண்ணுமளவிலே இதுவென்று பார்த்து அவன் பூர்ணகடாக்ஷம் பண்ணும் "பத்தவிலோசன"த்திலே என்னைக் கொண்டு விடுங்கள், என்கிறாள் ஆண்டாள். ஒரு பட்டை சோற்றைக்கொண்டு போயாகிலும் கண்ணனைக் கிட்டலாமோ என்பது ஆண்டாள் நினைவு. "பத்தவிலோசனம்" பக்தம் என்னும் ஸம்ஸ்க்ருத பதத்தின் மரூஉ மொழி. பக்தம்-சோறுவிலோசனம் -கண் ஆக. கண்ணனும் கோபர்களும் பசியால் வருந்தி ருஷிபத்நிகள் யாகசாலையிலிருந்து கொண்டுவரும் சோற்றை எதிர்பார்த்திருந்தவிடம். "பத்தவிலோசனம்" எனக் கூறப்பட்டதாகும்.

ருஷிபத்நிகள் வேண்டியிட்ட அடிசிலை உண்ணும்போதிலே "ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக்கொள்ளும்" அவர்களைக் கடாக்ஷிக்க வேண்டிய தருணம் இதுவே என்று பூர்ணகடாக்ஷம் செய்யும்" எனவும்அல்லது கண்ணன் வேண்டிய அடிசிலை உண்ணும் போதினிலே - கண்ணன் திருவுருவை நன்கு ஸேவிக்கும் தருணம் இதுவே என்று ருஷிபத்னிகள் இமைப்பின்றியே நெடு நேரம் கண்டுகளிக்கும் பத்தவிலோசனம் எனவும் பொருள்படும்.

# எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான், டி. ஸ். ராஜகோபாலன், பி. ஏ., எல். டி.,

ஹிந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

மறுநாள் சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். இள ஞாயிறின் வெள்ளிக் கிரணங்கள் நகரம் முழுதுஞ் சூழ்ந்து, அதன் எழிலைப் பன்மடங்கு அதிகமாக்கியது. இதற்குள்ளேயே சாலைகளிலும் தெருக்களிலும் மாந்தரின் நடமாட்டம் ஓங்கிவிட்டது. வியாபாரிகள், தொழிலாளிகள், கம்பனிகளில் வேலைசெய்வோர் முதலியோர் ரஸ்தாக்களில் விரைந்து கொண்டிருந்தனர். "இரண்டு-தல பஸ்கள்" (double-deckers) ஒன்றன்பின் ஒன்றாய் இடையறாது விரைந்துகொண்டிருந்தன ;- இவையாவும் நிரம்பியே யிருந்தன. பம்பாய் நகரை "city of ditsances" என்பர். காரியாலயங்களும் தொழிற்சாலைகளும் வெகு தொலைவிலிருப்பதால், மக்கள் வீட்டிலிருந்து காலையில் 7-30 அல்லது 8 மணிக்குப் புறப்பட்டால்தான் சரியான காலத்திற்கு வேலைக்குச் செல்ல இயலும்; ஆதலால் அவர்கள் அதி காலையிலேயே ஆகாரத்தை முடித்துக்கொண்டு கிளம்பிவிடுகிறார்கள். இரவு திரும்புவதற்கு 8 மணியாவது ஆகும். வியாபாரிகள் வீடு திரும்ப இன்னும் அதிக நேரம் ஆகும்.

இந்த நகரத்தில் வாழும் மாந்தர், பாரதத்தின் பல பிரிவுகளிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் வந்தவர்கள். தெருக்களில் வங்காளியர், பஞ்சாபியர், தென்னாட்டினர், குஜராத்தியர், மராத்தியர், மஹம்மதியர், யூதர், ஆங்கிலேயர், அமெரிக்கர் முதலியோரை நாம் காணலாம். இவர்களது உடையும் வாழ்க்கையும் வேறுபட்டுள்ளனவாயினும், இவர்கள் யாவரும் ஒருமனதுடன் வாழ்வதும், பெருமகிழ்ச்சியுடன் அன்பளாவுவதும் போற்றுதற்குரியன. பெண்மக்களின் உடை, அவரவர்களது கூட்டத்திற்கேற்ப பலபடிப் பட்டதாகும். பார்சியப் பெண்மணிகள், கண்ணைக் கவரும் முறையில், நவீன நாகரீக முறையில், மெல்லிய பட்டாடைகள் அணிந்துள்ளனர். மஹாராஷ்டிரப் பெண்பாலர், கச்சமும் கொய்சகமுமாகப் புடவை கட்டிக்கொள்கின்றனர். மார்வாரியப் பெண்பாலர், பலவகை வர்ணங்களில் சேலைகளை அணிந்து தலையில் முக்காடுடனும், காலில் வெள்ளிக் காப்பு, தண்டை முதலியன "ஜலீர்! ஜலீர்!" என்றொலிக்க அசைந்து செல்லுகின்றனர். சௌராஷ்டிரப் பெண்டிர், பாவாடையும், "சோலி" என்ற ஒரு வகைக் கச்சும் தாவணியும் அணிந்துள்ளனர்; கையிலும் காலிலும் அவர்கள் அணிந்த அணிகலன்கள் பல.

**பன்னி றத்த வண்ண மேவு மென்மை யுற்ற பூந்துகில்**
**பொன்னி றத்த மேனி கொண்ட பார்சி மாதர் போர்த்துளர்,**
**மின்னி கர்த்த கூறை யேந்து மாரு வாரிக் கோதையர்**
**மைந்நி றத்த கேச மேருக் கூட விட்டொ ளித்துளர்.**

[மாருவாரிக் கோதையர்—மார்வார் பெண்டிர், குக்கூடல் முட்டாக்கு.]

**வரைசெறிந்த தேசமாமராட்ட ரின்று வந்தவர்**
**உரைகழிந்த வாளையொத்த ஒண்கண் மாதர் கொண்டுளர்**
**புரைகழிந்த வேலையேற்ற பொன்னிறத்த கூறையில்**
**அருகணைந்த கச்சமோடு (அ)டுக்கி வைத்த கொய்சகம்.**

[வரை செறிந்த...வந்தவர்—மலைகள் நிறைந்த மஹாராஷ்டிரத்திலிருந்து வந்தவர், புரைகழிந்த - ஒப்பற்ற, கூறை-புடவை, வேலை - கைவேலைப்பாடு, அருகணைந்த கச்சம் - அருகில் மடித்து மடித்து ஆக்கப்பெற்ற கச்சம்.]

நாங்கள் சுமார் 9 மணிக்கு **போரி பந்தர்** (Bori Bunder) வழியே **ஃப்ளோரா பவுண்டன்** (Flora Fountain) வந்து சேர்ந்தோம். அருகிலுள்ள இடங்களில் வெகு நேரம் சுற்றிப் பார்த்தோம். அந்த இடத்திலிருந்து பல திசைகளிலும் சாலைகள் செல்லுகின்றன ; சாலைகளின் அருகுகளில் உயர்ந்த கட்டிடங்கள் திகழ்கின்றன ; தெற்கு திசையில் சர்வகலாசாலைக் கட்டிடமும், பழைய செக்ரட்டரியேட் கட்டிடமும் ஓங்கி நிற்கின்றன; கிழக்கில் **ஸெண்ட் தாமஸ் கதீட்ரல்** (St. Thomas cathedral), **டவுன் ஹால்** (Town Hall) முதலியன உள்ளன; இவ்வாறு எங்கும் வானோங்குங் கட்டிடங்கள் பல பல. கடை வீதிகளில் எப்போதும் "ஜே! ஜே!" என்ற கூட்டம். எங்களுள் சிலர் கடைகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு பம்பாய் வாயில் துணியும், எவர் சில்வர் பாத்திரங்களும் வாங்கிக் கொண்டோம்.

பின்னர் *11* மணிக்குக் **கண்காட்சிச் சாலை** (Prince of Wales Museum) பார்க்கச்சென்றோம். கட்டிடம் மிகப்பெரியது. அதன்மேலுள்ள அரைக்கோள வடிவமுள்ள கோபுரம், 1[illegible]-வது நூற்றாண்டு முறையில் அமைந்துள்ளது. கட்டிடத்தைச் சுற்றிலுமுள்ள பூங்கா, நன்கு பராமரிக்கப்பெற்றுவருகிறது. மதராஸிலுள்ள மியூசியத்தில்போல் இங்கும் பல பிரிவுகள் உள்ளன. இவற்றுள் விலங்குகளைப் பற்றிய பிரிவில் செய்யப்பெற்றுள்ளவை போற்றுதற்குரியன. விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் சூழ்நிலை, திரையில் ஓவியமாகக் காட்டப்பெற்று, மனதைக் கவரும் நிலையில் அமைந்துள்ளது. ஓரிடத்தில் ஆண் சிங்கமொன்று, தன் குகையினருகில் படுத்திருப்பதுபோல் காட்டப்பெற்றிருக்கிறது; குகை கல்லால் ஆயது; சிங்கம், பஞ்சு திணித்தது (stuffed); பின்னேயுள்ள திரையில் காடுபோல் தீட்டப்பெற்றிருக்கிறது. வேறோரிடத்தில் பதினறடி வேங்கையொன்று மூங்கில் புதரிலிருந்து வெகுண்டு பாய்வது போலுள்ளது; மூங்கிலின் பச்சிலைகளும், அருகிலுள்ள புதர்களும் இயற்கையில் போலேயே அமைந்துள்ளன. நாம் சிறிது மெய் மறந்து நின்றால் புலி நம்மேல் பாயுமெனவே நினைந்து பயந்துவிடவுங் கூடும். பின்னுமோரிடத்தில் பெரியதொரு குளத்தினருகில் செங்கால் நாரைகள் தங்களது பரிவாரங்கள் சூழ நிற்பனபோலுள்ளது. குளமும், அதிலுள்ள தாமரை யிலைகளும் மலர்களும், அருகிலுள்ள மணற்பாங்கான கரையும் ஓவியத்தில் திகழ்கின்றன;

நாரைகளின் இனம், பஞ்சு திணிக்கப்பெற்ற சடலங்கள் கொண்டது. மானின் வகைகள், நரி, ஓநாய், மலைப் பாம்புகள், நல்ல பாம்புகள், ராஜாளி, கழுகு, முதலிய பலவகை விலங்குகளும், பறவைகளும், ஊர்வனவும் விசித்திரமாக அதனதன் சூழ்நிலையில் காட்டப்பெற்றிருப்பது, இங்குள்ள புதுமையாகும்.

பம்பாய் நகரில் அவசியம் பார்க்கவேண்டியவற்றுள் ஒன்று "நீர்வாழ்வன - நிலயம்" (அக்வேரியம்); இது நேதாஜி சுபாஷ் சாலையிலுள்ளது; தரபோர் வாலா அக்வேரியம் (Taraporevala Aquarium) என்ற பெயர்கொண்டது. உவர் நீரில் வாழ்வனவும், சுத்த ஜலத்தில் வாழ்வனவும் இங்குக் கண்ணாடித் தொட்டிகளில் வைக்கப்பெற்றுள்ளன. இந்தத் தொட்டிகளில் தண்ணீர் நிலையாக இருப்பதுபோல் தோன்றும்; எனினும் இரவும் பகலும் நொடிக்கு நொடி, புதுத் தண்ணீர் பாய்ந்து, மாசுற்ற நீர் கழிந்துகொண்டேயிருக்கும். மீன்கள் சுவாசிப்பதற்கு சுத்தமான காற்று அவசியம்; ஆதலால் இந்தத் தொட்டிகளில் சுத்தமான காற்று எப்போதும் இறக்கப் பெறுவதைக் காணலாம். இங்குள்ள தொட்டிகளுள் ஒன்றில் கடல் நண்டுகள் (crabs lobsters) அங்கு மிங்கும் ஓடித் திரிகின்றன; இவற்றின் மாமிசம் போற்றத்தக்க சுவையுள்ளதென்பர்; ஆதலால் இத்தொட்டியிலுள்ளவை அதிருஷ்டமுள்ளவை யென்றே சொல்லவேண்டும். அடுத்த தொட்டியில் நீர்க் குதிரைகள் (sea-hor es) என்றமீன்கள் உள்ளன; இவற்றின் முகம், குதிரையின் முகத்தைப் போன்றது. நடுவிலுள்ள புதரிலுள்ள இலைகளை இவை, தம் வாலால் பற்றிக்கொண்டு, ஆணும் பெண்ணுமாகச் செருக்குடன் தலை நிமிர்ந்து எதிரெதிராக நிற்பது நேர்த்தியாகவுள்ளது இவற்றுள் பெண் மீன் இடும் முட்டைகளை ஆண் மீன், தனது வயிற்றிலுள்ள பையிலேற்று வளர்ப்பது, இறைவ னிட்ட கட்டளைகளுள் மிகவும் வி க்கத்தக்க ொன்றாகும். அருகிலுள்ள தொட்டியிலுள்ள மீன ள், குதிரை, தலை வாய்ந்தவை; உடல் வெகு நீளம்; இவற்றின் பெயர் குழாய் மீன்கள் (pipe-fish s). அடுத்த தொட்டிகளில் பாம்பு மீன்களும் (eel ), கடற் பாம்புகளும் (sea-snakes) வளைந்து வளைந்து ாய்வதும், நண்டு படுப்பதும் மிகவும் வேடிக்கையானவை. இவ ாறு பலவ கயான மீன்கள் பல தொட்டிகளில் வாழ்கின்றன. இவற்றுள் மிகவும் விசித்திரமானவை நட்சத்திர மீன் (star-fish , நட்சத்திர போல் பரந்த ஐந்து உறுப்புகள் கொண்டது; கடற் ால் (sea-cuc umber) பாகற்காய் போன்ற வடிவங் கொண்டது கூனல் மீ . வாள் போன்ற செதில் கொண்ட மருத்துவ மீன் (su geon-fish); பூ னையின் தலைபோன்ற தலைகொண்ட பூனை மீன் (cat-fis ); வட்டமான மேனி



கொண்ட மதி மீன் (Moon-fish), உள்ளும் புறமும் ஒத்துள்ள கண்ணடி மீன் (glass-fish) என்பன. இவற்றுள் மிகவும் பயங்கரமானது எண்காலி (octapus) என்பதாம். இதற்கு எட்டுக் கால்கள் உள்ளன; ஒவ்வொன்றும் மிக நீளமானது; ஒவ்வொன்றிலும் இரண்டு உறிஞ்சு குழாய்கள் உள்ளன. இது தனது எதிரிகளை இக்கால்களால் வலியப் பற்றிக்கொண்டால், இந்தப் பிடியிலிருந்து விலகுவது இயலாததாகும். இவற்றுள் மிகப் பெரியன ஆழ்கடலுளுள்ளன; அவற்றின் கால்கள் 12 அடி, 16 அடி நீளமுள்ளனவாம். இந்த அக்வேரியம் முழுதும் சுற்றிப் பார்க்க எங்களுக்கு இரண்டு மணி நேரம் ஆயிற்று.

பின்னர் நாங்கள் முக்கியமான நெடுஞ் சாலைகள் வழியே சென்று, வழியில் ஆங்காங்கு உள்ள பெரிய கட்டிடங்களையும், தொழிற்சாலைகளையும், காரியாலயங்களையுங் கண்ணுற்று, மாலை 6 மணிக்குத் தமிழ்ச் சங்கம் நோக்கி விரைந்தோம். அன்றிரவு 7-30 மணிக்குப் புறப்படும் ஸௌராஷ்ட்ரா மெயிலில், நாங்கள் ராஜ்கோட்டிற்குச் செல்லவேண்டும். ஆதலால் மிகுந்த பரபரப்புடன் நாங்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு, பின்னர் போஜனத்தையும் முடித்துக்கொண்டு, எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்த மோட்டார் பஸ்ஸில் ஏறிக்கொண்டு விரைந்தோம், ரயில்வே ஸ்டேஷனைக் குறித்து. பஸ்ஸிலிருந்து இறங்கியதும், ஒருவர், "இன்னும் 5 நிமிஷ காலத்தில் ரயில் புறப்படப்போகிறது; ஓடிவந்து வண்டியில் ஏறுங்கள்!" என்று எச்சரிகை செய்தார். அப்போது மணி 7-10 தான். எனினும் வண்டி புறப்படும் நேரம் மாறிவிட்டது அன்று முதல்; இதனை நாங்கள் அறிந்து கொள்ளவில்லை. நாங்கள் யாவரும் கையிலகப்பட்ட மூட்டைகளைப் பற்றிக்கொண்டு வண்டி நிற்கும் மேடையை நோக்கி ஓடினோம்; எங்களது பெட்டியில் மூட்டைகளை எறிந்து விட்டு ஏறிக்கொண்டோம். வண்டியும் எங்களுக்காகவே காத்துக் கொண்டிருப்பதுபோல், நாங்கள் யாவரும் ஏறிக்கொண்டதும் ஊதிக்கொண்டு நகர்ந்தது. நாங்கள் மறுநாள் நடுப்பகல் ராஜ்கோட்டிலிருப்போம் என்ற பெரு மகிழ்ச்சி எங்களது மனதிலார்ந்தது. நாங்கள் பம்பாயில் தங்கிய இரண்டு நாட்களிலும் 120 மைலுக்கு மேல் பஸ்ஸில் மாத்திரம் பிரயாணஞ் செய்து சுற்றிப் பார்த்தோம். எனினும் நாங்கள் அதிகம் பார்க்கவில்லை. பார்த்த இடங்களும் எங்களுக்கு மனதில் சரியாகப் பதியவில்லை. "கற்றது கைமண்ணளவு, கல்லா துலகளவு" என்று ஔவை சொல்லியது, பம்பாயாகிய தனி உலகுக்கும் ஏற்றதாகும். பின்னும் ஒரு முறை பம்பாய் வந்து, அங்கு ஒரு வாரமாவது தங்கி, அதனையும் அதன் சுற்றுப் புறங்களையும் நன்கு பார்க்கவேண்டுமென்று முடிவு செய்துகொண்டோம், அன்றிரவு.

*

# நான் கண்ட அமெரிக்கா

ஆதூரி

“திரை கடலோடியும் திரவியம் தேடு.’— என்னும் மூதுரை பன்னெடுங்காலமாக நமது பாரதத்தில் வழங்கி வருகின்றது. தற்காலத்தில் மக்கள், திரவியத்தை விட பல மடங்கு உயர்ந்ததான அறிவுச் செல்வத்தைப் பெறுவதற்காகவேண்டியே ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் பிரயாணம் செய்கின்றனர். அம்மாதிரியாகவே கன்னியர்களும் கடல் கடந்து கல்விச் செல்வத்தை அடைய முடியும் என்று சமீபத்தில் சில பெண்கள், “பெண்களுக்கு படிப்பு அவசியமா?” என்னும் வீண் விவாதத்திலேயே இன்னும் காலம் கழித்துக் கொண்டிருக்கும் சில பழமைப் பித்தர்களுக்கு நிருபித்து, கலங்கரை விளக்குபோல் வழி காட்டியும் இருக்கின்றனர். அண்மையில் நமது அரசாங்கத்தினர் நம் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும், பெண்கள் உள்பட பலரைத் தேர்ந்தெடுத்து, அமெரிக்காவுக்கு சர்வதேச விவசாய இளைஞர் பரிவர்த்தனை பிரதி நிதிகளாக அனுப்பினர். நமது சென்னை நகரத்திலிருந்து சென்ற ஒரே பெண்மணி குமாரி டி. ஏ. பத்மாசனி அவர்கள்.

வைஷ்ணவ குலத்தில் உதித்து திருமழிசை என்னும் ஸ்தலத்தை சொந்த ஊராக கொண்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரைச் சேர்ந்தது இவரது குடும்பம். கல்வியும் பொருட்செல்வமும் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்து பிரகாசிக்காது என்பதை பொய்யாக்குவதுப்போல் இவரது குடும்பம் பல தலைமுறைகளாகவே செல்வத்திலும், உயர்ந்த அறிவிலும் தலை சிறந்து விளங்குகிறது. திருவல்லிக்கேணியில் பிரசித்திபெற்ற வக்கீலான ஸ்ரீ. டி. ஏ. சீனிவாசன் அவர்களின் புதல்வி இவர். இவரது பாட்டனார் நரசிம்மாச்சாரியார் சப்-ஜட்ஜ் ஆக பதவியை வகித்தவர். இவரது தந்தை புதுமையில் நல்லவைகளை பொறுக்கி, அதன்படி தானும், தன்னைச் சேர்ந்தவர்களையும் வாழ வைப்பவர். செழுங்கிளைத் தாங்கும் செல்வவந்தரான இவர். நாகரீகம் என்னும் பெயரில், வீண் டம்பச் செலவுகள் செய்வதை எதிர்ப்பவர். பத்மாசனி அவர்கள் தான் தந்தையின் சொல்லை என்றும் தட்டாது இருந்ததே, தனக்கு இத்தகைய பாக்கியம் கிடைத்தது என்று கருதுகிறார். இவ்விதழிலிருந்து பத்மாசனி அவர்கள் தனது கட்டுரை மூலமாக மோகினியின் வாசகர்களின் மனக்கண் முன்பு, அமெரிக்காவையும், அதன் கண்வாழ் மக்களையும் நிறுத்தப்போகின்

ளூர். மோகினி இப்புது வருட தினத்தன்று மிக்க மகிழ்ச்சி யுடன் அவரை பாராட்டுவதுடன், அவரது கட்டுரையை வர வேற்கின்றுள்.

இவர் ஆறு மாதகாலம் தமது கோஷ்டியினருடன் அமேரிக்காவில் தங்கினர். அந்த தேசத்தில் ஒவ்வொரு வரையும் அவரது குடும்ப பெயரை குறிப்பிட்டுதான் அழைப்பது வழக்கம். இவரது குடும்பத்தின் பெயர் ஆசூரி என்பதை பற்றி இவரையும் அவ்வாறே அவர்கள் குறிப் பிட்டனர். அதே பெயரிலே மோகினிக்கும் தமது கட்டு ரையை அளிக்கின்ளூர்.

T. கமலா.

* * *

கண்ணுல் கண்டதும் பொய், காதால் கேட்பதும் பொய் ஆனுல் பார்த்து அனுபவிப்பதே மெய் என்று யார் சொன்னுர் களோ அவர்கள் வாயில் சர்க்கரையைதான் போட வேண்டும்! ஏனென்றுல் நாம் அயல் நாடுகளைப்பற்றி சினிமாக்களிலோ, மற் றும் பத்திரிகையின் படங்களிலோ பார்த்து அவைகளைப்பற்றி நாமே ஒரு தீர்மானம் செய்து விடுகின்ருேம். ஆனுல் நேரில் அவர்களை கண்டு, அவர்களுடன் அளவளாவும் பொழுது ஆஹா! வேற்றுமைகள் தான் எவ்வளவு காணுகின்ருேம்.

சிறு பருவத்திலேயே கப்பற் பிரயாணம் செய்ய விரும்பிய நான், கடற் பிரயாணத்தைப் பற்றியே பலவாறு கனவு கண் டேன். கோட்டைகள் பல கட்டினேன். பெரியவர்களிடம் என் விருப்பத்தைத் தெரிவித்து நிறைவேறுமா என்று கேட்கும் பொழுது, எதிர்காலத்தை விளக்கிக் கூற யாரால் முடியும்? என்று மழுப்பி விடுவார்கள். எப்படியோ இந்த வருடம் அமெரிக்காவிற்கு புறப்பட்ட பன்னிரண்டு பெண்களில் ஒரு பெண்ணுக என்னை தேர்ந்தெடுத்தார்கள். நான் சிறுவயதில் கட்டிய கோட்டை வெறும் ம(ண ற்)னக் கோட்டையாக மாறிவிடா மல் கற்கோட்டையாக விளங்குவதைக் கண்டேன். அன்றைய தினம் என் உள்ளம் அடைந்த மகிழ்ச்சியை வர்ணிக்க நான் ஒரு கதாசிரியையாக பிறக்கவில்லையே என்றுதான் ஏங்குகிறேன், இப்பொழுதும் **அந்த தினத்தையே** எண்ணி நான் மெய் மறந்து உட்கார்ந்திருக்கிறேன். நான் ஒரு தினமேனும் பிரிந்திராத எனது அருமைப் பெற்ருேரைப் பிரியப்போவதைக் கூட அந்த நிமிடம் மறந்தேன். எனக்கு இத்தகைய பாக்கியம் கிடைத்தது எனது பெரியோர்களின் ஆசீர்வாதம்தான் என்று உறுதியாக கூறுவேன். மனிதர்கள் எங்கே வாழ்ந்தாலும் ஒரேவிதமான பண்புடையவர்கள் என்பதை அங்கு சென்ற பிறகுதான் அறிந்து கொண்டேன். எண்ணற்ற ஒற்றுமைகளை அனுபவத்தில் உணர்ந்தேன். இவ்வாறே ஒவ்வொரு தேசத்திலும் பல ஒற்றுமைகள் நிச்சயம் இருக்கதான் இருக்கும். இதை அறியாமல் நாம் படும் அல்லல்கள், சண்டைகள், மனக்கசப்புகள் இவைகள் தான் எவ்வளவு? எவ்வளவோ படித்திருந்தும் உல கம் கொந்தளிப்பது எதனுல்? மனிதனை மனிதன் புரிந்து கொள்ளாதிருப்பது எதனுல்?

மனிதர்கள் ஒருவருக்கொருவர் நன்கு அறிந்துகொண்டு, அவர்களுடைய வாழ்க்கையின் தரத்தையும் புரிந்து கொள்வதே உலக சமாதானத்திற்கு அஸ்திவாரம் என்று அமெரிக்காவி லுள்ள ஒரு குழு தீவிர நம்பிக்கை கொண்டிருக்கிறது. இதற்கு தான் **சர்வதேச விவசாய யுவர்களில் பரிவர்த்தனை** என்று பெயர். படா டோபம் இல்லாமல் தொண்டு புரிந்து வரும் இக்குழு வெற்றி அடையும் என்றே நாங்கள் யாவரும் நம்புகிறோம். இக்குழு 4-H குழுவின் ஒரு பகுதி. 4-H என்பதை ஆங்கிலத்தில் (4-H club foundation) என்று கூறுவார்கள். கிராம யுவர்களை பொறுப் பான மனிதர்களாக்க உதவும் இந்த குழு பல முக்கியமான வேலை களைச் செய்து வருகிறது. இதன் விவரத்தைப் பிறகு எழுதுகின் றேன். இதன் மூலம் ஆரம்பித்ததே இந்த யுவர் பரிவர்த்தனை.

இந்த பரிவர்த்தனையில்(International farm youth Exchange) அமெரிக்காவின் கிராம யுவர்கள் மற்ற தேசங்களுக்குப்போய் அங்குள்ள கிராம குடும்பத்தாருடன் வாழ்ந்து அவர்களைப்பற்றி தெரிந்து கொள்ளுகிறார்கள். இவ்வாறே மற்ற தேசங்களின் கிராமயுவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று அங்குள்ள பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். 1948-ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட இது ஆண்டு தோறும் மிகமிக முன்னேறியிருக் கின்றது.

இப்பரிவர்த்தனையின் முக்கிய நோக்கம் என்னவென்றால். 'உலக சமாதானத்தை, மனிதர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வதின் மூலம் அடையலாம்' என்ற தீவிரமான நம்பிக்கை தான். மேலும் கிராம யுவர்கள் மற்ற நாடுகளின் விவசாய கஷ்டங்களை அறியவும் உதவுகிறது. முக்கியமாக நாட்டின் கலா சாரங்களை அறியவேண்டும் என்றால் கிராமங்களில்தான் பழக வேண்டும். அங்குதான் கலப்பில்லாத உண்மை இருக்கிறது.

இவ்வாறு ஏற்பட்ட குழுவின் பரிவர்த்தனையின் மூலமாக தான் நாங்கள் 12 பெண்கள் சர்க்காரால் அமேரிக்காவிற்கு அனுப்பப்பட்டோம். மேலும் நாங்கள் யாவரும் குடும்ப நிர்வாக இலாகாவில் பணியாற்றி வருவதால், அமெரிக்காவில் குடும்ப நிர்வாகத்தைப் பற்றி பயிலவும் சென்றோம். எங்களுடன் 22 ஆண்களும் வந்திருந்தார்கள். விமானத்தில் ஏறும்பொழுது எப்படி இருக்குமோ, அவர்களின் பழக்க வழக்கங்கள் புதிதா யிற்றே என்ற நடுக்கத்துடன் இருந்த எங்களுக்கு ஏற்பட்ட புதிய அனுபவம்தான் எனன ?

நாங்கள் ஏப்ரல் 21-ஆம் தேதி காலையில் 2-15மணிக்குப் புறப் பட்டு மறுநாள் காலை 3-மணிக்கு ரோம் பட்டணத்தை வந்தடைந் தோம். நீங்கள் இதை 24-மணி நேர பிரயாணம் என்று நினைத் திருப்பீர்கள். அதுதான் இல்லை! கிழக்கிலிருந்து மேற்கே பிர யாணம் செய்யும்பொழுது கடிகாரத்தைத் திருப்பி வைக்க வேண் டும். உண்மையில் நாங்கள் 12-மணி நேரங்கள்தான் பிரயாணம் செய்தோம். எங்களுடன் பாகிஸ்தான் சகோதரர்கள் நால்வர் வந்தனர்.

பாஷை தெரியாத சங்கடம் இங்குதான் ஆரம்பித்தது. நான போட்டுக்கொண்டிருந்தமூக்குத்திருகு அனைவரதுகவனத்தையும் என் பக்கம் இழுத்து என்னை சங்கடத்திற்குள்ளாக்கியது. வார்த்தைகளில் சொல்ல முடியாததை சைகைகளினால் காட்டி "அது என்ன? எப்படி அங்கு ஒட்டிக் கொண்டிருக்கிறது?" என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இவர்களுக்கு பதில்சொல்லும் வுகை தெரியாமல் மெல்ல பார்வையை என் பின்பக்கம் ஓட்டினேன்? அங்கே இருந்தவர்களோ, தாங்கள் அனைவரும் ஆகாயத்தில் பறந்து கொண்டிருப்பதால் தேவர்களைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணி இருப்பதேபோல் கண்ணை கொட்ட கூட மறந்து விட்டார்கள். ஆமாம்! கண்ணை கொட்ட கூட மறந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாமல் காதையும், மூக்கையும் காட்டி ஒருவாறு அவர்களுக்கு புரிய வைத்தேன். அன்று பிற்பகல் கப்பலில் ஏறுவதற்காக காலை 8 மணிக்கு நேபில்ஸுக்கு சென்றோம். கையில் டிக்கட்டுடனும், எனது நெடுநாள் விருப்பம் நிறைவேறும் மகிழ்ச்சியால் என் உள்ளம் நிரம்பி இருக்கவும் கப்பல் ஏறினேன். எங்களுடைய கப்பலின் பெயர் கிருஸ்டபர் கொலம்பஸ். (Christofer Coloumbus.)

ஒரு சிறிய அறையில் நான்குபேர் இருக்கும்படியாக வசதி செய்துள்ளார்கள், கட்டில் மேல் கட்டில். இதை பங்க் பெட் (Bunk Bed) என்று கூறுவார்கள். கப்பல் ஏறியதுமே ஆனந்தத்துடன் சுற்றிப் பார்த்தோம். பெரிய கோஷத்துடன் கப்பலும் நேபல்ஸை விட்டு புறப்பட்டது. பசியுடன் நாங்கள் உணவருந்தும் அறைக்குச் சென்றோம். அங்குள்ள பேரர்கள் "உங்களுக்கு என்ன வேண்டும்" என்று அன்புடன் கேட்டார்கள். ஆனால் வாய்க்குதான்—முக்கியமாக சைவ உணவு சாப்பிடும் என்னைப் போன்றவர்களுக்கு ஒன்றும் எட்டவில்லை. ஆனால் எல்லா வித சௌகரியங்களும் உடையதாக இருந்தது அந்த கப்பல். மாலை வேளைகளில் மனங்கவரும்படியான வேடிக்கைகளும், விளையாட்டுகளும் இருந்தன. இரவில் ஒருநாள் ஆங்கிலப் படமும, மறுநாள் இத்தாலியப் படமும் போட்டுக் காண்பிக்கப்படும்.

அந்த கப்பல் காப்டன் மிகவும் நல்லவர். எங்களைக் கூப்பிட்டு தேநீர் விருந்து அளித்து எங்களுடன் அளவளாவினார். மறுநாள் அவர் வேண்டுகோளின் பேரில் நாங்கள் எடுத்துச் சென்ற பொருள்களைக் கொண்டு ஒரு பொருட் காட்சி நடத்தி, கப்பலிலுள்ள மற்ற தேசத்தவர்கள் நம் இந்திய கைவேலையை காண ஒரு சந்தர்ப்பம் தந்தோம். ஒரு இத்தாலிய தம்பதிகளை இந்தியர் போல அலங்கரித்து அவர்களுக்கு மேலும் விளக்கினோம். அனைவரும் அங்குள்ள பல பொருட்களை என்ன விலையானாலும் வாங்கிக் கொள்ளுவதாக கேட்க ஆரம்பித்தனர்.

இவ்வாறு 9 நாட்கள் எங்கள் கப்பல் வாழ்வு நடந்தது. வழியில் கப்பல் ஜிப்ரால்டர் என்னுமிடத்தில் நின்றது. கப்பல் நின்றவுடன் பல வியாபாரிகள் தங்கள் பொருட்களை விற்பதற்காக பல சிறிய படகுகளில் வந்தனர். கப்பலுக்கு மேலிருந்தவர்

களும், கீழே படகுகளில் இருந்தவர்களும் பேரம் பேசும்பொழுது எவ்வளவு நிசப்தமாக இருக்கும் !!! மேலிருப்பவர்கள் வேண்டும் பொருட்களை கீழே இருக்கும் வியாபாரிகள் கூடைகளில் போட்டு, கயிற்றில் கட்டி கப்பலில் ஏற்றி விடுவார்கள். அவர்களும் அதற்கான பணத்தை கூடைகளிலேயே போட்டு இறக்கி விடுவார்கள். பாஷைகள் புரியாவிட்டாலும் இவர்கள் பேசுவது வேடிக்கையாக இருந்தது.

இறுதியில் கப்பல் நியூயார்க்கை அடைந்தது. உலகத்தில் பெரிய பெயரை உடைய நியூயார்க் கட்டிடத்தை வெகுதூரத்தில் கண்டவுடன் எங்களுக்கு கனவா? அல்லது நினைவா? என்ற ஐயமே எழும்பிவிட்டது. 4-H ஆபிஸில் எங்களுக்கு தலைவராக இருப்பவர் கப்பலுக்குள் வந்து எங்களை எல்லாம் அன்புடன் வரவேற்றார். கப்பல் தளத்தில் வந்து நிலத்தைக் கண்டு ஆனந்தித்தோம். தூரத்தில் **வெற்றி தேவியின்** சிலை **(Statue of Victory)** தென்பட்டது. கார்களின் சமுத்திரத்தில் மிதந்துகொண்டு எங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோட்டலுக்கு வந்தோம். எங்கு திரும்பினாலும் ஜன ஜலம்தான் அதிகம். நம் சைனாபஜார் கூட்டம் எவ்வளவோ தேவலை.

சரியான சாப்பாடு கண்டு நாளானதால், அன்று இரவு நாங்கள் கராச்சி ஹோட்டலுக்குச் சென்றோம். நம்நாட்டு ஹோட்டல்கள் அங்கு இரண்டு இருக்கின்றன. நல்ல சாப்பாடும் கிடைக்கின்றது. ஆனால் விலைகேட்டால் மூர்ச்சை அடைவீர்கள். ஒரு பூரியின் விலை 8 அணாவிற்குமேல் !! அன்றிலிருந்துதான் எங்கள் அமெரிக்க வாழ்க்கை ஆரம்பித்தது. உலகத்திலேயே உயரமான கட்டிடம் Empire State Building. இதில் 104 மாடிகள் இருக்கின்றன. அங்குபோக Elevator இருக்கிறது. மேலே போகும்பொழுது ஏரோப்ளேனில் பறப்பது போல் உணர்ச்சி ஏற்பட்டது. மேலே இருந்து நகர்முழுவதையும்,நாங்கள்வந்த கப்பல் முதலியவைகளையும்பார்த்தோம். வானத்தைத் தொடக்கூடிய கட்டிடங்கள் எல்லாம் பெட்டியைப் போல் தென்பட்டன. பெரிய கார்கள் விளையாட்டு சாமான்கள் போலவும், மனிதர்கள் பொம்மைகள்போலவும் மொத்தத்தில் பொம்மை கொலு பார்ப்பதுபோல் இருந்தது. எங்கு திரும்பினாலும் பளிச், டளிச்சென்று வியாபாரத்திற்காக போட்டப்பட்டுள்ள விளக்குகள் மின்னின. அவைதான் எத்தனை விதம்? சில பறவை பறப்பதுபோல் இருந்தன. பெரிய துவாரத்தில் புகை வருவதேன் என்று நாம் கவனித்தால் சிகரெட்டிற்கான விளம்பரம். விளக்குகளுக்கு பஞ்சமில்லாமல் நன்கு உபயோகப் படுத்துகிறார்கள். இவ்வித காட்சி கொண்ட நியூயார்க் கிறகும், தலைநகரான வாஷிங்டனுக்கும் என்ன வித்தியாசம்? இதைப் பற்றி பிறகு எழுதுகிறேன்.

(தொடரும்)

❋

# காளிதாஸர் கனவு

## 9, மேக தர்சனம் : மேக சந்தேசம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த்தொடர்ச்சி]

RL 11 A1738
14-5-57

இப்படி அளகாபுரியின் பெருமைகளையும் அழகுகளையுங் கூறிப் பிறகுதான் மாளிகையையும் மனைவியையும் பற்றி யக்ஷன் மேகத்தினிடம் புகன்றான்; "அளகாபுரியில் குபேரனுடைய அரண்மனைக்கு வடக்குத் திசையில் என் மாளிகை இருக்கின்றது. அம் மாளிகையின் தலைவாயிலின் அழகுவான வில்லை ஒத்திருக்கும். கையாலேயே பறிக்கக் கூடிய மலர்கள் நிறைந்தது. என் மனைவியால் மகனைப்போல் வளர்க்கப்பட்ட மந்தார மரம் அந்த மாளிகையின் அருகில் இருக்கின்றது. மரகதப் படிக்கட்டுகளுடன் கூடித் தங்கத்தாமரைகளுடன் விளங்கும் ஒரு குளம் இருக்கின்றது. அங்கே விளையாடும் அன்னப் பறவைகள் மானச சரோவரத்தைக் கூட விரும்பா. என் மாளிகையின் அருகில் நீலமணிகள் பதிக்கப்பெற்ற உச்சியுடன் அழகாக விளங்கும் ஒரு சிறிய குன்று இருக்கின்றது. அந்தக் குன்றில் தங்க வாழைமரங்கள் மிகவும் நிரம்பி இருக்கின்றது. மின்னல்களால்ஒளிவீசும் உன்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் அந்தக்குன்று என் நினைவுக்கு வருகின்றது. அங்கேமருதாணிவேலியால் சூழப்பட்டகொடி மண்டபம் இருக்கின்றது. அங்கே அசோகமரம் பகுளமரம் முதலிய மரங்கள் பிரகாசிக்கின்றன. அசோக மரத்தில் மலர்கள் ஏற்படா விட்டால் என் மனைவியின் கால்பட்டவுடன் அது மலர்களுடன் விளங்கும். குரவக மரத்தில் மலர்கள் ஏற்படாவிட்டால் என் மனைவி வாயில் மதுவை நிரப்பி அதை உமிழ்ந்தால் அந்த மரம் மலர்களுடன் விளங்கும். இந்த மோகன நோம்புக்குத் தோஹதம் என்று பெயர். அந்த மரங்களுடைய நடுவில் பச்சைக்கறிகள் பதித்தப் பளிங்குமேடையில் தங்கக் கொம்பின் மேல் என் வீட்டுமயில் உன்னைக் கண்டவுடன் தன்னுடைய அழகிய தோகையை விரித்து என் மனைவியின் மதுரமான பாட்டுக்கும் தாளத்திற்கும் ஒத்து அழகாக ஆடும். நான் அளகாபுரியில் இல்லாததால் என் மாளிகை இரவில் குவிந்த தாமரையைப்போல் ஒளி இழந்திருந்தாலும் நான் கூறிய அடையாளங்களாலும் என் மாளிகையின் வாயிற் கதவில் சங்கநிதிப்பது மநிதிச்சித்தரித்திருப்பதாலும் என் மாளிகையை நீ அடையாளம் கண்டுகொள்வாய்"



183204

பின்னும் மிக ஆதரவுடன் யக்ஷன் கூறலானான்; "அங்கே நீ யானைக்குட்டியைப் போன்ற உருவத்துடன் சென்று நான் கூறிய விளையாட்டுக்குன்றில் தங்கி உன் மின்னல் விழிகளால் என் மாளிகையின் உள்ளே நோக்கு வாயாக. அங்கே பிரமதேவன் முதன்மையாக மங்கையர்க் கரசியாகப் படைத்த என் மனைவியை நீ காண்காய்; அவள் மெல்லிய உடலுடன் மங்கைப் பருவத்தின் மோகன அழகு டன் விளங்கிக் கொண்டிருப்பாள். முத்துப் போன்றப் பல் வரிசையுடனும், கோவைப்பழம் போன்ற உதடுகளுட னும், சிறுத்த இடையுடனும், வெருண்ட மான் விழியைப் பழித்த கண்களுடனும் மெல்லிய நடையுடனும் அவள் கூடி யிருப்பள். அவள் தான் என் உயிர் நிலை. நான் பிரிந் திருப்பதால் தன் கணவனை விட்டுப்பிரிந்த சுக்கிரவாகப் பெண்பறவை போலவும் பனிகாலத் தாமரை மலர் போல வும் வாடி வருந்தித் துயரமுற்றிருப்பள். என் பிரிவாற்றாமை யால் வருந்திப் பெருமூச்செறிந்து தடுவெளுத்துக் கையில் தலையைவைத்திருக்கும் அவளுடைய முகம் உன்னால் மறைக் கப்பட்டச் சந்திரனைப் போல் ஒளி மழுங்கியிருக்கும். நீ அங் கிருக்கும் போழுது அவள் கடவுளைப் பூஜை செய்து தோத் தரித்துக் கொண்டாவது, அவளைப் பிரிந்ததால் வருந்தி மெலிந்த என்னை நினைத்து நினைத்து என் ஓவியத்தைத் தீட்டிக் கொண்டாவது, கூண்டில் உட்கார்ந்துக் கொண்டு இனிமையாகப் பேசும் கிளியைப் பார்த்து, 'நாயகனை உனக்கு நினைவு இருக்கின்றதா? நீ அவருக்கு மிகவும் பிரியமல்லவா?" என்று கேட்டுக்கொண்டாவது இருப்பள். ஒரு வேளை வீணையை அழுக்கடைந்த சேலையைக் கட்டி யிருக்கும் தன் மடியில் வைத்து என் பெயரைச் சேர்த்துத் தான் அமைத்துள்ள அழகிய பாட்டுக்களைப் பாடத் தொடங்கியபொழுது என்னை நினைத்துஅழுவதால்பெருகும் கண்ணீரால் வீணையின் தந்திகள் நனைந்து போவதால் அடிக்கடி அவைகளைத் துடைத்துத் தான் துவக்கின பாட் டையும் ராகத்தையும் மறந்துத் துயரத்திலாழ்ந்திருப்பாள். எனக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு வருஷப் பிரிவை பூக்கள் வைத்து நாளெண்ணிக் கொண்டிருப்பள். என்னை மனதில் நினைத்து நினைத்து என்னைத் தழுவும் இன்பத்தை அனுப வித்துக் கொண்டிருப்பள். இப்படிப் பகற்பொழுதை அவள் ஒருவாறு போக்கினாலும் இரவில் அவளுடைய நிலை வெகு பரிதாபமாக இருக்கும். அப்பொழுது தான் நீ தயை செய்து தூது சென்று சாளரத்தருகில் நின்று துய ரத்தை ஆற்றவேண்டும். அவள் பெருமூச்செறிந்துக் கூந் தலலங்காரமின்றித் துயரத்துடன் தரையில் படுத்துத் தூக் கமற்றிருப்பள். நான் பிரிந்து போனதால் நான் முடிந்த கூந்தலை நான் திரும்பி வந்து அன்புடன் அவிழ்க்கும்வரை

யில் எண்ணெய் தடவிச் சீவி முடித்துச் சிங்காரித்துக் கொள்ளமாட்டாள். நான் கூட இருந்தபொழுது இமைப் பொழுது போல் சென்ற அறவு என் பிரிவால் மிகவும் நீண்டிருப்பதால் அவள் கண்ணீர் வடித்துக் காலைப் பொழுதில் கிழக்கே ஒளிமழுங்கினத் திங்கட் பிறையைப் போல் ஒரு பக்கமாகப் படுத்திருப்பள். நான் கூட யிருந்த பொழுது பார்த்து இன்பமடைந்த சந்திரகிரணங்களைக் கண்டவுடன் கண்களைத் திருப்பிக் கொள்வதால் நீர்மல்கி இமைமயிர்களால் மறைக்கப்பட்ட அவனுடைய கண்கள் மேகங்களால் மூடப் பட்டு இருண்டிருக்கும் நாளில் மூடாமலும் திறவாமலும் இருக்கும் தரைத் தாமரைகளை ஒத்திருக்கும். ஸ்னானம் செய்த பிறகு எண்ணெய் தடவாததால் கன்னத்தில் அலையும் கூந்தல் மயிர் அவளுடைய பெரு மூச்சால் ஆடிக் கொண்டிருக்கும். கனவில் என்னைத் தழுவும் இன்பம் கிடைக்கும் என்று கனவை அவள் விரும்பினாலும் அழுகையால் உண்டாகும் கண்ணீரால் தூக்கம் தடைபடும். ஆபரணங்களை யணியாமல் படுக்கையில் படுத்தும் உறக்கம் வராமல் வருந்தும் அவளுடைய நிலை உன்னையும் கூட நீராகிறக் கண்ணீரை வீழ்த்தும் படி செய்யும். நெஞ்சில் ஈரம் உள்ளவர்களுக்கு கருணை யிருக்குமல்லவா?

**ப்ராயஸ் ஸர்வே பவந்தி கருணா வ்நத்தி? பவந்தி**
**ரார்த்ரா ந்தராத்மா!**

(தொடரும்)

---




மனைவி: ஏன் இப்படி ஓடி வந்தேள்?....

கணவன்: சீக்கிரம் உள்ளேபோடி அவா பெண்ணைப் பார்க்கவறா.... முதலிலே உன்னை பார்த்துட்டு பெண் வேண்டாம் னுடபோறா...

சிறுகதை

P. S. அரவிந்தா

# மனப் புயல்

ஈஸிசேரில் சாய்ந்தவாறு சேகர் பேபர் படித்துக்கொண்டிருந்தான். காபியை எடுத்து வந்த சுமதி அருகிலிருக்கும் மேஜையின் மேல் வைத்தாள். காப்பியை ஒரு மூச்சு இழுத்து விட்டு மறுபேச்சின்றி டம்ளரை வைக்கவந்த ஸமயம், சுமதி, அவன் கையிலிருந்து டம்ளரை வாங்கவந்தாள். கையில் கொடுக்கச் சம்மதப்படாதவன் போல் 'டக்' என்ற சப்தத்தோடு மேஜையின்மேலேயே வைத்தான். இருந்தாலும் அன்று ஏனோ இந்தச் செய்கை சுமதியின் உள்ளத்தில் மிகவும் அதிக வேதனையை உண்டாக்கியது. கண்களில் நீர்ததும்ப டம்ளரை எடுத்துக்கொண்டு விறுவிறு என்று உள்ளேபோய் விட்டாள். பலவிதமான எண்ணங்கள் ஒன்றன்மேல் ஒன்றாய்த்தோன்றி வேதனையை இன்னும் அதிகப்படுத்தின. ஒன்றும் தோன்றாதவளாய், ஸ்வாமிபடத்தின் முன்பு சென்று.

"பகவானே! எத்தனை நாள்தான் என்னை இந்தச் சோதனையில் பொசுக்கப்போகிறாய்! பொறுத்துப் பொறுத்துப்பார்த்தும் என் இதயம் வெடித்து விடும் போல் இருக்கிறதே! நான் அழகாக இல்லாதது என் தவறா? நான் குரூபி என்று தெரிந்துதானே கல்யாணம் செய்துகொண்டார். இப்படி என்னை வதைப்பதைவிட, சீக்கிரம் உன்பாதத்தில் சேர்த்துக் கொண்டு விடு!....." என்று கண்ணீர் பெறுக வேண்டினாள்.

"டாங்! டாங்!" என்று எழு அடித்த கடியாரத்தின் ஓசையைக் கேட்டு, "ஐயோ! எட்டரைக்குள் சமயலாகவேண்டுமே" என்று அலறியவாறு பரபரப்புடன் வேலையில் இறங்கினாள். கைகள் வேலை செய்துகொண்டிருந்தாலும் மனது பூராவும் கடந்தநாள்களின் சிந்தனையில் தாவியது.

சுமதி அவள் தாய்க்கு ஒரே பெண்ணாய்ப் பிறந்து செல்வமாய் வளர்ந்தவள். ஏராளமான செல்வத்தையும் அறிவையும் கொடுத்த கடவுள் அழகைத்தான் குறைத்துவிட்டான். குள்ளமாயும் மாநிறமாக இருந்தாலும், மூக்கும் முழியுமாய் முகம் களையாயிருந்தது. குள்ளமோ, கறுப்போ, எப்படியிருந்தாலும், "காக்கைக்கு தன் குஞ்சு, பொன்குஞ்சு" என்பதுபோல், அவள் தாயார்—பார்வதி-தன் உயிர் பூராவும் சுமதியின்மேல் வைத்துக் கண் இமையால் காத்து வந்தாள். நெடுநாள் குழந்தை இல்லாது பிறந்த செல்வியை வளர்க்கும் அருமை அவள் தாய்க்கல்லவா தெரியும்!

சுமதி தகப்பனார் பெரிய காலேஜில் ப்ரொபஸராயிருந்தவர். அந்த ஊர்பூராவும் நல்ல கௌரவமும் நன்யமும் வாய்ந்தவர். சுமதிக்கு மூன்றுவயது இருக்கும்போது, திடீர் என்று மார் அடைப்பினால் இறந்து

விட்டார். பார்வதியம்மாள் தன் குழந்தையின் போஷணைக்காக கணவன் பிரிவையும் பாராட்டாது, சுமதியின் முகத்தைப் பார்த்து, தன் துக்கத்தை மறந்து, ஊசலாடும் தன் உயிரைப் பிடித்துக்கொண்டு உலாவிவந்தாள். சோதனைக்குமேல் சோதனைபோல் அவள் ஓரே தம்பியும் அவன் மனைவியும், சேகரைப் பார்வதியின் காவில் கட்டிவிட்டு, இந்த மண்ணுலகை விட்டு மறைந்தார்கள். பரதேசியாயிருந்த சேகரை பார்வதி, சுமதிக்குமேல் ஒருபடி உயர்வாகவே வைத்துப் போஷித்து வந்தாள். தான் தாய் தந்தையர் அற்ற பரதேசி என்ற எண்ணம் தவறிக்கூட சேகரின் உள்ளத்தில் எழாதவாறு, அவனுக்குச் சகல உரிமைகளையும் தந்து அன்பாய் ஆதரித்து வந்தாள். சேகரும் சுமதியும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாய் வளர்ந்தார்கள்.

சேகர் இயற்கையிலேயே சற்று துடுக்கான ஸ்வபாவம் உடையவன். பயம் என்ற பெயர் அவன் பிறந்த ஊரிலேயே பிறக்கவில்லை. ஒரு நிமிஷம் கூட அவன் உடல் ஒரு இடத்தில் பொருந்தி இருக்காது. துஷ்டத்தனத்திற்கு ஏற்றாற்போல கல்வி கல்வியான அவன் மழலைச் சொல்லும் குறுகுறுப்பான விழிகளும் அவனை அடிக்கக் கூட மனம் வாராதவாறு தடுத்து விடும். க்ருஷ்ணவிக்ரஹத்தைப் போல் அவன் வடிவழகு காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படி அமைந்திருந்தது.

சேகருக்கு நேர் எதிர் ஸ்வபாவத்தை உடையவள் சுமதி. இருக்கும் இடமே தெரியாது பூனைபோல் மௌனமாயிருப்பாள். துஷ்டத்தனம் என்பதே அவள் அறியமாட்டாள். துஷ்டனுக்கு ஏற்ற துஷ்டன் இருந்தாலே அவனை ஜெயிக்கும் வல்லமையுள்ள சேகர் கையில் சுமதி கிடைத்தால் சும்மா விடுவானா? ஸதா அவளைச் சீண்டுவதும் அடிப்பதும் உதைப்பதுமாகவே பொழுதைக் கழிப்பான். சேகரைப்பார்த்தாலே சுமதி பயந்து தாயாரிடம்போய் ஒளித்துகொள்வாள். சுமதி பொம்மை ஏதாவது கையிலெடுத்தால், உடனே இரண்டு உதை கொடுத்துப் பிடுங்கிக் கொண்டுதான் மறுகாரியம் பார்ப்பான். பாவம், சுமதி கண்ணைக் கசக்கிக் கொண்டே அழுதவண்ணம் போய்விடுவாள், பார்வதி! தன்னால் முடிந்த வரை சேகரை மிரட்டி அடித்துத்தான் அடக்குவாள். ஆனால், அவன் பயந்தால் தானே!

ஸதா உதைப்பதும் குட்டுவதுமாகவே பழகிவந்த சுமதியினிடத்தில் அவள் குட்டையாயும் கறுப்பாயும் இருக்கிறாள் என்ற காரணத்தால், சேகரனுக்கு ஒருவித அலக்ஷியமும் வெறுப்பும் உள்ளத்தில் கூடவே வளர்ந்து வந்தது. சேகர் அடித்தாலுங் கூட அவனிடம் கொஞ்சமாவது விளையாடா விட்டால் சுமதிக்கு மனது சாந்தமே அடையாது.

தன்னிடம் அவள் விளையாடவரும்போதெல்லாம் அவன் தலையில் குட்டிக் குட்டிக் கும்மா எழும்பும்படி செய்து விடுவான். பாவம்!....அத்தவலியையும் பொறுத்துக் கொண்டு சேகரோடு விளையாடுவாள் சுமதி.

ஒருநாள் சேகர் காப்பிடக்கூடச் சாப்பிடாமல் அவசர அவசரமாய் பாடம் ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். பார்வதி காபியை சுமதியிடம் கொடுத்து அனுப்பினாள் அவள் ஜீமேலை வைக்கும் போது கைதவறி 'தடார்! என்று போட்டுவிட்டாள். அருகில் இருந்த புஸ்தகங்கள், பை முதலிய எல்லாம் காபியில் நீராடி எழுந்தன! 'ஐயையோ' சேகர் என்ன சொல்வானோ?...என்று பயந்து அப்படியே நின்று விட்டாள். கேட்கவேண்டுமோ சேகரின் கோபத்திற்கு!.... கையும், வாயும் சேர்ந்து தாண்டவமாடின! இந்தச் சத்தத்தைக் கேட்டு ஓடிவந்த பார்வதி இருவரையும் அடக்கினாள்.

சேகரும் படிப்படியாக S. S. L. C. யை எட்டினான். தான் வாலிபப் பருவம் அடைந்ததின் அடையாளமாய் சுமதி தன்னோடு சதா பழகுவதும் பேசுவதுங்கூட அருவருப்பைத் தந்தது. சுமதி எதிர்பாராத விதம் ஒருநாள், "சுமதி! இதோபார்,....நீ அடிக்கடி என் ரூமில்வந்து பேசுவதும் இங்கே உன் புஸ்தகங்களை வைத்துக்கொண்டு படிப்பதும் எனக்குப் பிடிக்கவில்லை...எதனாலோ உன்னைக் கண்டாலே எனக்கு வெறுப்பும் கோபமு தான் வருகிறது...தயவு செய்து என்னுடன் பழகுவதையும் பேசுவதையும் கூட நிறுத்திக் கொண்டால் தேவலை" என்று படபடப்புடன் சொன்னான். சுமதிக்கு ஒன்றுமே புரியாமல் விழித்தாள்; வாயைத்திறக்கவில்லை. "என்ன! என்னைக்கண்டாலே வெறுப்பாயிருக்கிறதா?...நான் என்ன பார்க்கக்கூட சகியாத அவ்வளவு கோரமாகவா இருக்கிறேன்?...சேகரையே என் கணவன் என்று சிறிய போது விதைத்த விதையை வ்ருக்ஷமாக்கிக்கொண்டு வருகிறேனே!....அந்த எண்ணத்தால் அல்லவா அடித்தாலும், உதைத்தாலும் குட்டினாலும், திட்டினாலும், பரிகாஸம் செய்தாலும் எதையும் பொருட்படுத்தாது சகித்து வருகிறேன்.... அதனாலாவது என்னிடம் சேகருக்கு அன்பு வருகிறதா பார்க்கலாம்..." என்று யோசித்தவாறு சரேலென்று ரூமை விட்டு மறைந்தாள். தன்னைப் பிடித்த பீடை ஒழிந்தது என்று நினைத்தானே தவிர அவள் உள்ளத்துடிப்பை அறிந்தானா சேகர்!

அதன் பிறகு இருவரிடமும் ஒருவிதப் பேச்சு மூச்சின்றி ஒருவருஷம் உருண்டோடியது. சேகர் S. S. L. C. யை முடித்துப் பட்டணத்திற்குச் சென்று காலேஜில் சேர்ந்தான்... இண்டரில் முதல் வகுப்புக் கிடைத்தது. பி. ஏ. யில் சேர்ந்து படித்து வந்தான்

பி. ஏ. முடிந்ததுமே சேகருக்குச் சுமதியைக் கல்யாணம் செய்துவிட வேண்டும் என்று பார்வதி சகல ஏற்பாடுகளும் செய்யத் துடங்கினாள். சேகர் விடுமுறைக்கு வந்து தங்கும் சமயங்களில் அவன் கண்ணில் படாது அவன் அறையைச் சுத்தம் செய்து அவனுக்குவேண்டிய சகல வேலைகளையும் செய்து வைப்பாள் சுமதி. இதைப்பார்த்து சேகரே ஆச்சரியப்பட்டது உண்டு.

ஒருவித விக்கனமுமில்லாது சேகர் பி. ஏ. பரீக்ஷை எழுதி முடித்து ஊர்வந்து சேர்ந்தான். சேகரின் அழகையும் அறிவையும் கண்டு அத்தை பூரித்தே போனாள். ஒருநாள் காலை காப்பியை முடித்துக்கொண்டு சேகர் ஹாலில் உட்கார்ந்திருந்தான். பார்வதி, அன்பாய் அருகில் வந்து உட்கார்ந்து, "கண்ணா! பரீக்ஷை ஒருவாறு முடிந்து விட்டது. இனி கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யலாம், இல்லையா?" என்றாள். இதைக் கேட்ட சேகரைத் தூக்கிவாரிப்போட்டது. "என்ன! கல்யாணமா!....யாருக்கு?" என்றுகேட்டான். யாருக்கா? உனக்கும் சுமதிக்குந்தான். ஒன்றுமே தெரியாதுபோல் விளையாடுகிறாயே!" என்றாள் அத்தை.

"எனக்கா கல்யாணம்! சரியாய்ப் போச்சு! இதற்குள் என்ன அத்தே அவசரம்? எங்காவது ஒருவேலையாகட்டும். முதலில் பரீக்ஷைபாஸ் ஆகட்டும்; அப்புறம் யோசிக்கலாம்...." என்று இழுத்தவாறு இடத்தை விட்டே நழுவி விட்டான் சேகர். பார்வதி எத்தனை தடவை ப்ரயத்தனம் செய்தும் அதே பதில்தான் கிடைத்தது. பி. ஏ. பரீக்ஷையின் முடிவைத்தாங்கி பத்திரிகைகள் பறந்து கொண்டிருந்தது. சேகர் பத்திரிகை ஸகிதமாய் ஓடிவந்து, "அத்தை!....அத்தை!... நான் பி. ஏ. யில் முதல் வகுப்பில் பாஸ்செய்து இருக்கிறேன்" என்று ஆனந்தம் பொங்கச் சொல்லியவாறு அத்தையின் காலில் விழுந்து நமஸ்கரித்தான். பார்வதி ஆனந்தக்கண்ணீர் பெருக அவனை மனப்பூர்வமாய் ஆசீர்வாதம் செய்து, "சேகர்!....என் ஆசையில் ஒருபாதி பூர்த்தி செய்து விட்டாய். என் கண்மணி சுமதியை மணந்து பூராவும் என்னைச் சந்தோஷத்தில் ஆழ்த்தி விடு" என்று நெஞ்சு அடைக்கச் சொன்னாள். உள்ளிருந்து இதைக் கேட்ட சுமதியின் மனம் குதூகலத்தால் நிரம்பியது. ஓடிவந்து சேகருக்குப் பாராட்டுச் சொல்லலாம்போல் துள்ளிய மனம், அடுத்த நிமிஷம் சேகர் அன்று பாணம்போல் சொன்னபதங்கள் காதில் ஒலிக்கவே தடைகட்டிய நாகம்போல் நின்றுவிட்டாள். ஒருவேளை சேகரே தன்னிடம் சொல்வானோ என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தாள்.

அத்தையின் துணப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள வேலைதேடும் சாக்கைச் சொல்லிப் பட்டணம் வந்து சேர்ந்

தான். "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற படி சேகரின் பி. ஏ. பட்டமும் கம்பீரமான தோற்றமும் உடனே கோட்டையில் நல்லவேலை ஒன்று கிடைக்க உதவின. இவ்வளவுநாள் பொறுத்திருந்த பார்வதி இனியும் பொறுப் பாளா? சேகருக்கு ஒவ்வொரு கடிதத்திலும் தான் பலஹீன மாய் இருப்பதாயும், தன் மூச்சு இருக்கும்போதே கல்யா ணத்தை முடித்துவிட வேண்டும் என்றும் எழுதத் தலைப்பட் டான். கடிதத்துக்குமேல் கடிதங்கள் வந்து கொண்டிருக் கவே சேகரனுக்கு விழுங்கவும் முடியாத வேதனை உண்டு



பண்ணியது. தனக்கு இஷ்டமில்லை என்று எழுதிவிடவும் அவன் கை துடித்தது. ஆனால், அடுத்த, நிமிஷமே, "சீ! மூட ஆத்மாவே! நன்றிகெட்டவனே! தாய்தந்தையரைப் பிரிந்து அனாதையாய்—திக்கதியாய்—நின்ற சமயம் அத்தை கைகொடுத்துக் காப்பாற்றியிராவிட்டால் இன்று மனி தனாய் நாலுபேர் எதிரில் நிற்கமுடியுமா? உன்னை மருமகனாக் கிக் கொள்ளத்தானே இவ்வளவு பணத்தையும் செலவு செய்து படாதபாடு பட்டுப் படிக்கவைத்தாள். நீ சிறியவய தில் ஆட்டி வைத்த ஆட்டமெல்லாம் சகித்துக் கொண்டாள். உன்னிடம் எவ்வளவு பாசம் இருந்தால் தன் குழந்தையை நீ அடித்துக் கொல்லும்போதும் பொறுத்துக் கொண்டிருப்

பான். நன்றிகெட்டவனே! பேசாதுபோய் சுமதிக்கு வாழ்வைக் கொடு. பிறகு நான் அத்தை மனம் சாந்தியடையும்" என்று அவன் மனச்சாட்சி சவுக்கால் அடித்தது. இந்த இரு யோசனைகளிடையே பித்தனைப்போல் அலைந்தான். சுமதியை மணப்பதைவிட அத்தைக்கு அவனால் ப்ரதியாக ஒன்றும் செய்யத் தெரியவில்லை. "சரி!....இவ்வளவுதான் நமக்கு ப்ராப்தம்!" என்று கடமையை எண்ணி மணத்திற்குச் சம்மதித்தான்.

பார்வதி ஆனந்தம் பொங்க ஊர்பூராவும் கூட்டி அதி வைபவமாய்க் கல்யாணத்தை நடத்தினாள். சேகர் தெம்பு என்பதே இல்லாமல் சம்மதக் குறைவாகவே சுமதியின் கழுத்தில் மூன்று முடியும் முடித்துவைத்தான்....சுமதிக்கோ சேகரை விட வேதனை இன்னும் அதிகமாய் வாட்டியது! சிறிய வயது முதலே தன்னைக்கண்டால் வெறுக்கும் சேகர் இனி வாழ்க்கையில் எப்படியிருப்பாரோ என்று நினைக்கும் போது அவள் அறியாது தலையே சுழன்றது.

ஒருவித விசேஷமுமின்றி ஒரு வருஷம் ஓடி மறைந்தது. அன்று இரவு சாப்பிட்டுவிட்டுத் தன் பெண்ணுக்குக் கணவனிடம் எப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்று புத்திமதிகளைச் சொல்லிவிட்டு நித்திரையில் ஆழ்ந்தாள், பார்வதி. மறுநாள் எழுந்ததும் திடீர் என்று மார்வலி எடுத்தது. அந்த வலியின் வேகத்தைப் பார்த்ததுமே, பார்வதி, நாம் பிழைக்கமாட்டோம்' என்று தெரிந்து கொண்டு சேகரையும்சுமதியையும்கூப்பிட்டு,'சேகர்!என்கடைசிவாக்கை நிறைவேற்றிவிடு, கருப்போ, குரூபியோ, குட்டையோ எதுவானாலும் என்குழந்தையை உன்னிடம் ஒப்படைத்தாகிவிட்டது. இனி அவளை உதாசினம் செய்யாது அன்பாய் நடத்து, அது தான் என் ஆத்மா சாந்தியடையும் வழி" என்று சொல்லியவாறே கண்ணைமூடி நிரந்தர வுலகையடைந்தாள். க்ரியைகள் எல்லாம் செவ்வனே செய்து முடித்துச் சுமதியுடன் சேகர் பட்டணத்தில் குடியேறினான்.

குடிவந்து ஒருவஷம் ஆகியும் சேகர் தவறிக்கூடச் சுமதியுடன் பேசவில்லை. அவளுக்கு உடுக்க உடையும் பசிக்கு அன்னமும் போடுவதோடு தன் கடமை முடிந்து விட்டது என்று எண்ணினான் போலும். சுமதியின் முகத்தைப் பார்த்து, 'சீ!" என்று சொல்வதில்லை; "வா!" என்று அன்பாய் அழைப்பதும் இல்லை. காலை எழுந்து காப்பிசாப்பிட்டுக் கொஞ்சநேரம் பேப்பர் வாசிப்பது; பிறகு குளித்து மௌன சாமியைப்போல் வாயைத் திறக்காது சாப்பிடுவது; ஆபீஸ் சென்றுவிடுவது; சாயங்கலாம் ஆபீஸிலிருந்து வந்து டிபன் சாப்பிட்டு பீச்சுக்குச் சென்றுவிடுவது. இரவு 9—மணிக்கு வந்து சாப்பிட்டுப் படுத்து விடுவது! இப்படியே தன் பொழுதை ஸ்வாரஸ்யமில்

லாது கழித்துக்கொண்டு வந்தான். சுமதியும் யந்திரம்போல் வேலைசெய்வதும் உறங்குவதுமாய்க் காலத்தைக் கழித்தாள். எவ்வளவுநாள்தான் இந்த மௌன வாழ்வு வாழ முடியும்? இதையே நினைத்து அழுது அழுது கவலையில் உடலும் மெலியத் துடங்கியது. துக்கம் தாங்க முடியாது அதிகமானால், பகவான் படத்தின் முன்புசென்று "பகவானே! என்னை ஏன் இந்தப் பெண்ணுருவத்தில் படைத்து எனக்கு சுகம் இல்லாது என்னைக்கைப்பிடித்தவருக்கும் சுகம் என்பதே இல்லாது இருவரையும் வாட்டி வதைக்கிறாய். பாம்போ, தேளோ கடித்தோ கொட்டியோ எனக்குச் சாவைத்தரமாட்டாயா! பூபாரமாய் என்னை வைத்து ஏன் இப்படி ஆட்டுகிறாய்..." என்றெல்லாம் வேண்டி அழுவாள். ஓரோர் தினமும் எப்படியாவது தைரியத்தை வர வழைத்துக்கொண்டு சேகர் பீச்சிலிருந்து வந்ததும் அவன் காலைபிடித்துக்கொண்டு கெஞ்சி, "எத்தனை நாள்தான் என்னை இப்படிநடத்தப்போகிறீர்கள். நான் என்ன குற்றம்செய்தேன்? என்னை இவ்விதம் தண்டிக்கிறீர்களே! என்று கேட்கத் திட்டம்போட்டுக் கொள்வாள் ஆனால், சேகரின் விழலைப் பார்க்குப்போதே பயத்தால் எல்லா எண்ணங்களும் சூரியனைக் கண்ட இருள்போல் பறந்துபோய் விடும். அவர் முகத்தை மறைவிலிருந்து பார்க்கவே நடுங்கும் சுமதியா நேரில் அவரிடம் பேசுவாள்? அதிலும் சண்டை போடுவான் இந்த கஷ்டத்தை விட பால்யத்தில் தன்னை சதா அடிப்பதும் குத்துவதுமாக இருந்த நான்களே தேவலைபோல் இருந்தது. தன்னிடம் அன்பாய்ப் பேசாவிட்டாலும் இரண்டு திட்டாவது தன் முகத்தைப் பார்த்துத் திட்டினால் கூட எவ்வளவோ மேலாயிருக்குமே என்று அவளுக்குத் தோன்றி வதைத்தது. அன்று காலை எழுந்தது முதல் வீட்டைச் சுத்தம் செய்வதிலேயே ஈடுபட்டிருந்தான் சேகர். காரணம் அறியாத சுமதி குறுக்கும் நெடுக்கும் அல்லாடிக் கொண்டிருந்தாள். சேகர், வேலைக்கார கந்தனைக் கூப்பிட்டு, "டேய், கந்தா! மெத்தையிலிருக்கும் அம்மாளின் பெட்டிகளையெல்லாம் இறக்கிக் கீழே அறையில் வைத்துக்கொள்ளச் சொல்லு. இன்று இரவு என் சிநேகிதனும் அவனு மனைவியும் வரப்போகிறார்கள். அவர்களுக்கு மெத்தைரூம் காலிசெய்து வைக்கவேண்டும். ஒருவாரம் இங்குதான் தங்கப்போகிறார்கள். வீட்டோடு இருந்து நன்றாய் கவனிக்கவேண்டும்" என்று சுமதியின் காதிலும் படும்படி உரக்கச் சொன்னான். இந்த விஷயத்தைத் தன்னிடம் நேரில் சொல்ல ப்ரியப்படாது வேலைக்காரன் மூலம் தெரிவிப்பதைப் பார்த்த சுமதியின் உள்ளம் புழுவாய்த் துடித்தது. தன் விதி அவ்வளவுதான் என்று வாயைத் திறக்காது, தன் சாமான்கள், அவர்சாமான்கள் பூராவும் கீழ் அறையில் அழகாய்ச் சரிப்படுத்திவைத்தாள். அன்று இரவு விருந்துக்குச்

செய்ய வேண்டியதையும் வேலைக்காரன் மூலமே தெரிவித்துச் செய்யச் சொன்னான்.

இரவு குறிப்பிட்ட நேரத்தில் சினேகிதன் தம்பதிசமேதம் வந்து இறங்கினான். சுமதிக்கு வரும்பெண் யரோ?... எப்படி இருப்பாளோ?...தன் கணவரின் உதாசீனத்தையும் மௌன நாடகத்தையும் பார்த்து என்ன நினைத்துக் கொள்வாளோ?...என்ற வேதனைகளே அதிகம் வாட்டின. வரும் விருந்தினர்களின எதிரிலாவது தன்னைச் சரிவர நடத்துகிறாரா?... இல்லை நித்தியப்படி வேலைக்காரியாய்த்தான் மதிக்கிறாரா?....பார்க்கலாம். ஒருவேளை வந்தவர்கள் எதிரில் ஒப்புக்காவது அன்பாய் நடப்பதாய் பாவனை செய்தால் அதையே வைத்து அவரை மடக்கித் தனக்கு விமோசனம் உண்டா இல்லையா?....என்று கேட்டுவிடலாம்..." என்றெல்லாம்பலவாறு எண்ணமிட்டான்.

(தொடரும்)




ஆபீஸ்
நிலைமை

# நக்ஷத்ர மண்டலம்

## செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரம்.

கடந்த சில மாதங்களாக மோகினியின் வாசகர்களான உங்களுடன் பழகும்படியான பாக்கியம் பெற்றுள்ள நான், இன்றைய தினத்தில் எனது புது வருட வாழ்த்துகளை உங்களனைவருக்கும் இதன் மூலம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்விதழில் எந்த நட்சத்திரம்—தனது புது வருட வாழ்த்துகளுடன் பேசப் போகிருரோ என்று நீங்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருப்பீர்கள். ஒவ்வொரு நடிகையோ, நடிகரோ சில சீசன்களில்தான் சினிமா உலகில் அமோக புகழுடன் பிரகாசிக்க முடியும் என்ற ஒரு நியதி எவராலும் விலக்க முடியாது நிரந்தரமாக நிலைபெற்றிருப்பது அனைவரும் அறிந்ததேயாம். ஆனல் அந்த நியதிக்கு விலக்காக சினிமா உலகில் சிரஞ்சீவியாகத் விளங்குபவரும்—ஜோடியாகத் தோன்றி நடித்து தனிப் பெரும் ஜோதியாக பிரகாசிப்பவருமான 'செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரம்' அவர்களே இவ்விதழில் பேசப் போகிருர் என்று எழுதும்பொழுது என் பேனு கூட பெருமிதத்தால் துள்ளுகின்றது.

இவரைக் காண நான் சென்றிருந்த பொழுது இவாது வீட்டு வாயிலில் காணப்பட்ட ரசிக கும்பலைவிட அதிகமாக—பத்திரிகைக்காரர்களும் —பல கலைஞர்களும் இவரையும், இவரது கணவரையும் காண வரவேற்புக் கூடத்தில் கூட்டமாக குழுமி இருந்தனர். நானும் அதில் கலந்து கொண்டு காத்திருப்பவரின் எண்ணிக்கையை ஏற்றினேன். இவர்களைத் தேடி வரும் நபர்களை வரவேற்று, இடம் தேடி அளித்து—(ஆம், அங்கு எப்பொழுதும் கூட்டமாகவே இருப்பதால் உட்காருவதற்காக இடம் தேடதான் வேண்டி இருக்கிறது.) மூன்று நிமிடங்களுக்கு ஒருமுறை அலறும் டெலிபோனை கவனிக்கவுமே—இவர்களைச் சேர்ந்தவர்களுக்கு நேரம் சரியாக இருக்கின்றது. வந்தவர்களுடைய சிரம பரிகாரம் தீர ஏதாகிலும் பானம் கொடுத்து உபசரித்த பிறகுதான், நமது கலைவாணரும், செந்தமிழ் விறலியும் கூப்பிய கைகளுடன் பிரவேசிக்கின்றனர். தங்களது நடிப்பினுல் ரசிகர்கள் அனைவரையும் குலுங்க நகைக்கவைக்கும் இவர்கள ஒவ்வொருவருடனும் பேசும் பொழுது அன்பையும் கூடவே குழைத்து அள்ளி அள்ளி வீசுவதால் இவர்களுடைய அபிமானிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிருர்கள். இந்த ஆதர்ச தம்பதிகளுக்கு அயல் நாட்டிலும் ஆயிரக் கணக்கான நண்பர்கள் ஏற்பட்டிருப்பதில் வியப்பே இல்லை. மிகமிகப் பெரிய ப்ரச்னைகளையும் சுலபமாக தங்களது ஹாஸ்யத்தில் புகுத்தி, அதன் மூலமாகவே பல நல்லுரைகளை போதிக்கும் இவர்கள நமது ஒரே முகமான பாராட்டுக்குரியவர்கள்.

நமது செந்தமிழ் விறலி அவர்களின் நேரத்தை பல கடமைகள் பங்கிட்டுக் கொள்கின்றன. பிரபல ஹாஸ்ய நடிகர்—டைரக்டர் — படமுதலாளி —



என்று பலவாறு அஷ்டாவதானம் செய்யும் நமது கலைவாணரின் அன்பு மனைவியான இவர் தனது கணவருக்கு ஒவ்வொரு வேலைகளிலும் உதவுகிறார். இவர் ஒரு பிரபல நடிகை என்பதன் மூலமாக கலை உலகிற்கு சேவை செய்வதையும் ஒரு கடமையாக கொண்டிருக்கிறார். தற்சமயம் பிரபலமாக விளங்கும் பல கலைஞர்களும் இவர்களை தங்கள் குருவாக கொண்டிருக்கின்றனர். நான் சென்றிருந்த சில நடிகைகளின் வீட்டில் இவர்களுடைய புகைப் படங்கள் மாட்டப்பட்டிருந்தது டன் அல்லாமல், இவர்களைப் பற்றி அவர்கள் பேசும் பொழுது கூட மிக்க மதிப்புடனும், மரியாதையுடனும் பேசுகின்றனர். ஆனால் நமது செந்தமிழ் விறலி அவர்கள் தனது கணவரையே தனக்கு குருவென கூறுகின்றார். நான் சென்றிருந்த பொழுது ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியருடன் இருவரும் ரஷியாவிலிருந்து வந்திருந்த கேஷ்டியினரின்சர்க்கஸைப் பார்ப்பதற்கு போவதாக இருந்தனர். புறப்படும் அவசரத்திலேயே என்னுடன் பேச ஆரம்பித்துவிட்டார். சில நிமிடங்கள் பேசி இருப்பார்; அதற்குள் கலைவாணர் அவர்கள் வெளியில் செல்லுவதற்காக இவரை கூப்பிடவே ஒரு கணம் கூட தாமதிக்காமல் குரல் கொடுத்துக் கொண்டே அவர் பின்னால் ஓடினார். இவர் அவரை குருவாக பாவிப்பதுடன் அல்லாமல், தெய்வமென கொண்டாடுகிறார் என்றே கூறலாம். இதைப் பற்றி கூட ஹாஸ்யமாக ஒரு படத்தில் இவர்கள் நடித்திருப்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். சமீபத்தில் வெளிவந்துள்ள அந்த படத்தின் பெயரை நான் குறிப்பிடவும் வேண்டுமோ?

—சாரக்ராகி.



அன்புக்கும் மதிப்புக்கும் உரிய "ஜகன் மோகினி" வாசகர்களுக்கு எனது வணக்கம் உரித்தாகுக.

ஆதியிலே வெறும் பொழுது போக்கு சாதனமாக மட்டும் இருந்த கலையுலகம் இன்று புத்தி புகட்டும் கல்லூரிபோன்றாகி விட்டது. இப்போதுதான் சமுதாயத்தில் கலைஞர்களுக்குத் தகுந்த மதிப்பு கிடைத்து வருகிறது. நட்புறவு கொண்ட நாடுகள் பரஸ்பரம் கலைஞர்களைத் தருவித்து தக்க மரியாதை செலுத்திக் கொள்ளுகின்றன. அண்மையில் என்னையும் என் வாழ்கைத் துணைவரையும் ரஷ்யமக்கள் வரவேற்று தங்களது சொந்த நாட்டுக் கலைஞர்களுக்கு அன்பு காட்டுவது போலவே எங்களிடமும் அன்பு காட்டினார்கள். எந்த நாட்டுப் பிரமுகரும், எந்த நாட்டுக்குப் போனாலும், கலை—கலாச்சாரம் பற்றி ஒரு வாக்கியமாவது பேசிவருவது இருபதாம் நூற்றாண்டு நாகரிகங்களுள் ஒன்றாகி விட்டது. இதையெல்லாம் எண்ணும்போது, நிஜமாகவே எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா? இந்த சகாப்தத்தில் வாழும் கலைஞர்களாகிய நாம் மகா பாக்யசாலிகளே!

பெரும்பாலும் நம் தமிழ் நாட்டில் பாக்யசாலிகள் எப்பவுமே தங்களுக்குக் கிடைத்த நல்ல பாக்கியத்தை உணருவது கிடையாது. துர்பாக்கியம் வந்துவிட்டால் மட்டும், அதைப் பற்றி

துயரப்பட ஆரம்பிப்பார்கள்—நொந்து கொள்வார்கள்—தலையில் அடித்துக் கொள்ளுவார்கள். இந்த விஷயத்தைக் கலைஞர்களுக் கெல்லாம் சற்று நினைவூட்ட விரும்புகிறேன். பெயர் மங்குகிறது என்றால் கவலையால் அசந்துபோய் காணப்படுகிறார்கள்; பெயர் பிரபலம் ஆகிறது என்றால் சந்தோஷத்தால், அப்படியே அசந்த நிலையில் இருந்துவிடுகிறார்கள்; விதிவிலக்காக என்றும் எந்நிலையிலும் தொழிலைச் சுறுசுறுப்புடனும், அக்கரையுடனும் நடத்திக் கொண்டிருக்கும் கலைஞர்களும் இன்று நம்மிடையில் இல்லாமல் இல்லை; அவர்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பதே என் ஆவல். மேலும் கலைஞர்களுக்கு எல்லாம் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், நாம் இன்று நாட்டின் முக்கியப் பிரஜைகளாகத் திகழுகிறோம்! நம்மிடமிருந்து நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் நற் காரியங்கள் அளவற்றவை! பொல்லாத புயல் வந்தாலும் நிதி திரட்ட வேண்டி யிருக்கிறது; புனிதர்களான புல்கானின்—குருஷ்சேவ், சூ-என்-லாய் போன்றவர்கள் விஜயம் செய்யும் போதும், மங்கல வரவேற்பாளர்களாக நாம்தான் முன்னின்று ஆலத்தி எடுக்கிறோம். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் நமது கடமையில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும்—பிறரைப் பாராட்டிப் பாராட்டியே பழகவேண்டும்—அனுவசியமாக அடுத்தவர்களைத் தாக்கிப் பேசுவது எப்படி என்பதை மறந்தே விடவேண்டும். என் பேற்றிலெல்லாம் சிறந்த பேறாக என் வாழ்க்கைத் துணைவரே எனக்கு குருவாக அமைந்தார். இது போன்றே ஒவ்வொரு கலைஞர்களுக்கும் ஒவ்வொரு குரு இருப்பார்கள் அல்லவா! அவர்களைக் கலைஞர்களெல்லாம் கடவுளென வணங்கி வரவேண்டும்!

கலையுலகம் பற்றிய எனது அபிப்ராயங்களைச் சொல்வதற்கு, "ஜகன் மோகினி" மூலமாகத் தக்க வாய்ப்பளித்த ஆசிரியை. வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்களுக்கு எனது அன்பான வணக்கமும், நன்றியும் உரித்தாகுக!

டி. ஏ. மதுரம்.

---



குப்பு:—டேய் உச்சிகுடுமி பிச்சி புடுவேன்....

சுப்பு:—போடா மொட்டை உன் தலையை சொட்டை யாக்கிடுவேன்.

# ஆபத் சகாயம்

*

"அம்மா இந்தாங்க! வனஜா அம்மா கொடுக்கச் சொன்னங்க" என்றவாறு ஒரு கடிதத்துடன் ஒருவன் உள்ளே நுழைந்தான்.

'என்றுமில்லாது கடந்த ஆறுமாதமாக காணமுடியாத லீவு, இன்றுதான் அபூர்வமாக தன் கணவனுக்குக் கிடைத்திருக்கிறது. அவருடன் சந்தோஷமாக இன்று சினிமாவிற்குப் போவதற்கு எந்த புடவையை உடுத்திக்கொள்ளலாம்' என்றவாறு இன்பவானில் திரிந்து கொண்டிருந்த உஷாவின் காதில் இந்த ஆளின் குரல் எங்கே கேட்கப் போகிறது?

மறுபடியும் "அம்மா" என்ற குரல் எழுந்தது. இந்த தடவைதான் காற்றில் மிதந்து வந்த ஒலி உஷாவின் காதில் விழுந்தது போலும். தன் கணவனின் குரலை எதிர்பார்த்திருந்தவளுக்கு "அம்மா" என்ற குரல் அதிசயத்தைத் தந்தது.

அவசரமாக ஓடிவந்த உஷா கடிதத்தை ஆவலுடன் பிரித்தாள். முதலில் வனஜா என்றதும் யார் என்றே புரியவில்லை. கடிதத்தை படித்ததும் அவள் முகம் சுருங்கியது.

"ஏம்பா! சிறிது நேரம் உட்கார்ந்திரு, பதில் எழுதித் தருகிறேன்" என்றவாறு உள்ளே சென்றாள். என்ன பதில் எழுதுவது? என்னடா இது? ஒரு கடிதத்தைக் கண்டதும் ஏன் இவ்வாறு குழப்பம். அதற்கு தகுந்த பதிலை எழுதுவதுதானே? என்கிறீர்களா? தகுந்த பதில் எழுததானே குழப்பம்!

வனஜாவும், உஷாவும் சிறியவயது முதல் உயிர் தோழிகள். ஒன்றாகப் படித்தவர்கள். சாப்பிடும் நேரம், உறங்கும் நேரம் தவிர பிரியாத ஊர்காரர்கள். இவர்களின் பள்ளி படிப்பு முடிவதற்கும் வனஜாவின் தகப்பனுக்கு ஊர் மாற்றலாவதற்கும் சரியாக இருந்தது. உஷாவும் காலேஜ் படிப்பிற்காக சென்னை போனாள். பிறகு ஒருவர்கொருவர் தொடர்பு அற்றுபோய் கடிதப்போக்குவரத்தும் நின்றது. உஷா மணமானதும் தன் கணவனுடன் சென்றுவிட்டாள். வனஜாவின் நினைவு அவளுக்கு அறவே மறந்தது.

அப்படிப்பட்ட சினேகிதி இன்று வருகிறேன் என்கிறாளே என்ன சொல்வது? என்றுமில்லாது இன்று அவருடன் கிளம்ப நினைத்தால் ஏன் இப்படி முட்டுக்கட்டை ஏற்

படுகிறது. வனஜா இன்று இல்லாவிடில் நாளை வரலாம் ஆனல் அவருக்கு அப்படி லீவு கிடைக்காதே. சரி இன்று வரவேண்டாம் என்று எழுதிவிடலாம். என்ற எண்ணத்துடன் கடிதத்தை எழுதி முடித்துவிட்டு அதை ஒருமுறை வாசித்தாள்.

"...மன்னிக்கவும் நான் இன்று அவசர ஜோலியாக ஒரு இடத்திற்கு போகவேண்டியிருக்கிறது. அனுதல் நீ நாளை எந்த நேரத்தில் வந்தாலும் நான் வீட்டிலேயே இருப்பேன். தவருக நினைக்காதே"...

கடிதத்தை ஆளிடம் கொடுத்துவிட்டு தன்வேலைகளை கவனிக்க உள்ளே போனுள். சிறிது நேரம் கழித்து மறுபடியும் "அம்மா" என்ற குரல் எழுந்தது. ஆனல் இவன் அப்போது வந்தவன் அல்ல, ஆபீஸ் வேலையாள்.

அவனைப் பார்த்ததுமே உஷாவின் முகம் தொங்கிவிட்டது. கடிதத்தைப் பார்த்ததும் விழுந்தேவிட்டது.
"உஷா !

கோபிக்காதே, எனக்கு இன்று ஆபீஸில் திடீரென்று ஒரு அவசரவேலை வந்துவிட்டது. இதை மறுத்துவிட்டு வர முடியாத நிலையில்நான் இருக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்த விஷயம். ஞாயிற்றுகிழமை காட்டாயம் லீவு வாங்கிக்கொண்டு போகலாம்"

தன் கணவனேடு போகவேண்டும் என்ற காரணத்தால் பலநாள்காணுத சிநேகிதிதானுகவலுவில்வருவதாகஎழுதிய வளை வேண்டாம் என்று கூறிவிட்டு காத்திருந்தவளுக்கு இப்போது எப்படி இருக்கும். தன் கணவனது நிலை தெரிந்திருந்ததினுல் கோபிக்கவும் முடியாது திண்டாடினுள்.

"ஹூம்...எப்போதும் வேலை....வேலை...வேலை...தலைவிதி ஒரு ஞாயிற்றுக்கிழமை கூட வேலையா ?...உம்....அப்படி வேலை செய்யாவிட்டால் சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட ஒரு பிரளயத்தில் தப்பித்துக் கொண்டிருக்க முடியுமா....ஏதோ ஒருபாவி காரியம்செய்ய அ[illegible] இவர் தலை யில் வந்து ஏன் வெடியவேண்டும். அதுவும் [illegible]ன் அதிர்ஷடம் தானே" இப்படி பலவாறு நொந்து பெரு மூச்சுவிட்டாள்.

திடீரென்று ஒரு யோசனைத் தோன்றியது. வனஜா விற்கு 'தான் வெளியில் போகவில்லை. நீ வரலாம் காத்திருக்கிறேன்' என்று எழுதி ஆபீஸ் ஆளிடமே அனுப்பினுள். சிறிது நேரத்தில் திரும்பிய ஆள் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

அதில் :

"....உன்னைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலால் என் வேலைகளை எல்லாம் நிறுத்திவிட்டு [illegible] எண்ணினேன்,

**ஆனால் உன் கடிதத்தைப் பார்த்ததும் நான் வெளியில் போகத் தீர்மானித்து, கிளம்பிகொண்டே இருக்கிறேன். நாளை வருகிறேன்".**

என இருந்தது. இரண்டும் இல்லாது, பொழுது போகாது திண்டாடினாள். வேலைகளும் முடிந்துவிட்டதால், பாதியில் விட்டிருந்த பூவைப்போட ஆரம்பித்தாள்.

அப்போது மாடியில் இருப்பவரின் பெண் மாலினி கையில் ஒரு புடவையுடன் அங்கு ப்ரஸன்னமானாள். வந்து கொண்டே "மாமி! எங்க அக்காவிற்கு பம்பாயிலிருந்து ஒருவர் இந்த புடவை வாங்கி வந்திருக்கிறார் நன்றாக இருக்கிறதில்லை. உங்களுக்கும் இதுமாதிரி வேண்டுமானால் வாங்கி அனுப்புகிறார்களாம்" என்றாள் மிஷின்போல்.

உஷாவிற்கு எப்போதும் மாலினியைக் கண்டால் உயிர். அதுவும் அவள் இப்போது இருந்த நிலையில் அவள் வந்தது உஷாவின் மனதிற்கு உற்சாகமாக இருந்தது. கையிலிருந்ததை கீழே வைத்துவிட்டு அப்புடவையை வாங்கிப் பார்த்தாள்.

"மாலினி! அவர் வந்ததும் கேட்டுசொல்கிறேன். புடவை ரொம்ப அழகாக இருக்கிறது என்றுசொல். சரி, நீ என்னோடு கோவிலுக்கு வருகிறாயா?" என்றாள்.

"ஓ! இதோ புடவையை வைத்துவிட்டு வருகிறேன் மாமி. நீங்கள் கட்டாயம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றவாறு மாடிக்கு ஓடினாள்.

உஷாவும் அவள் வருவதற்குள் கதவைப் பூட்டிக் கொண்டு சுவாமிக்கு வேண்டியவைகள் அடங்கிய ஒரு கூடையுடன் தயாராக நின்றாள். இருவரும் தமாஷாகப் பேசிக்கொண்டே கோவிலை அடைந்தனர்.

அவர்கள் கோவிலை அடைவதற்கும் அங்கிருந்து ஒரு கார் கிளம்புவதற்கும் சரியாக இருந்தது. அந்த காரில் உள்ளவர்களைப் பார்த்ததும் உஷாவிற்கு 'கபீர்' என்றது. அதில் அவள் சிநேகிதி வனஜாவும், வேறொரு ஆணும் இருந்தனர். மேலும் அவர்கள் கூட உஷாவின் கணவனும் அமர்ந்திருந்ததுதான் அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

'என்ன? தன் கணவனா, நம்மிடம் அவ்வளவு உத்தமனாக—இருப்பவரா.......இப்போது வனஜாவுடன் போய்க் கொண்டிருக்கிறார். தினமும் ஆபீஸில் வேலை அதிகம் என்று சொல்லி என்னை ஏமாற்றிவிட்டு, இப்படிதான் இவளுடன் திரிகிறாரா. அட துரோகமே! இப்படிபட்டவர்களுக்கு கோவில் ஒன்று இல்லாததுதான் குறை. வரட்டும் வீட்டிற்கு என்று கொதித்தது அவள் மனம். அங்கு நிற்கக்கூட முடியவில்லை. பேசாமல் வீடு திரும்பிவிடலாம்

என்றால் உடன் இருக்கும் மாலினியின் கேள்விகளுக்கு யாரால் பதில் சொல்லமுடியும்? நின்றவள் சமைத்துவிட்டாள்.

இவள் நிலையைக் கண்ணுற்ற மாலினி "மாமி! என்ன அப்படி நிற்கிறீர்கள். மாமா ஒருவேளை வீட்டிற்கு வந்திருப்பாரோ என்று." என்றாள் கேலியாக. சிறியவளான அவளுக்கு உஷாவின் மனநிலை எப்படி தெரியும்? இவள் குரல் கேட்டதும் தன் குழப்பங்களை மனத்தில் புதைத்துக் கொண்டு "ஒன்றுமில்லே....அதோ அந்த கடைக்குள்ளே போய் ஏதாவது வாங்கலாமா என்று பார்த்தேன்......" இழுத்தவாறே பேசினாள்.

"உங்கள்வீட்டிலே குழந்தையே கிடையாதே! யாருக்கு அந்த விளையாட்டு சாமான்? உங்களுக்கா....மாமாவிற்கா" என்ற மாலினியைப் பார்த்து "நீதான் இருக்கிறாயே எங்களுக்குக் குழந்தை....." என்று மாலினியை இழுத்துக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்தாள்.

கோவிலுக்குச் சென்றால் கொஞ்ச நேரத்தில் வர பிடிக்காத உஷா இன்று அங்கு நிற்கவே பிடிக்காது சீக்கிரம் வீடு திரும்பிட்டாள். ஒரு வேலையும் செய்ய பிடிக்காது பித்துபிடித்தவள் போல உட்கார்ந்திருந்தாள். மனத்தில் இருக்கும் வேதனையின் பாரத்தால் நெஞ்சு வலித்தது. அழுது அழுது கண்கள்தான் சிவந்தன.

கதவு தட்டும் சப்தம்கேட்டு எழுந்து வந்தவளை மறுபடியும் ஆபீஸ் சேவகன்தான் வரவேற்றான். கடிதத்தைப் பார்த்ததும் கோபம் பீரிட்டது. "ஹும்....இன்றுவரை இரவாவது வீடு சேர்ந்து கொண்டிருந்தார். இன்று இரவிற்கே மோசம் வந்துவிட்டது. எத்தனை பாபம் செய்து இப்படிபட்ட ஜன்மம் எடுத்தேனோ?" என்று கண்ணீர் விட்டாள். இரவு பட்டினி, அதோடு "நாளை காலை இரண்டு மூன்று விருந்தினர்களோடு வருகிறேன். விருந்து முதல் தரமாக இருக்கவேண்டும்" என்று வேறு கடிதத்திலிருந்தது. அழுகையோடு இது வேறு பாவம்.

இரவு பூராவும் புரண்டு புரண்டு காலையில் எழுந்தவள். தன் அழுகையை அடக்கிக் கொண்டு முதல்தரமான விருந்தும் சமைத்து வைத்தாள். நல்ல உடையுடுத்தி அலங்காரம் செய்துகொண்டு உட்கார்ந்திருந்தாள். 'விருந்தினர் என்றால் வனஜா அவர்களைதானோ என்னவோ....உம்... அவ்வளவு தைரியமாக அழைத்து வருவாரா பார்ப்போம்' என்ற எண்ணங்கள் அவளை உலுக்கிக் கொண்டிருந்தன.

வாயிலில் கார் வரும் ஓசைகேட்டது. காரிலிருந்து அவள் கணவனும் வனஜாவும், மற்றொருவனும், இறங்கி

வந்தனர். உஷாவும் அவர்களை மேலுக்குமலர்ந்த முகத்தோடு வரவேற்றாள். வனஜா ஒடிவந்து "உஷா! நீ இவருடைய மனைவியா. எனக்குத் தெரியவே தெரியாது. நேற்று உன் கடிதத்தைப் பார்த்தேன். நான் இன்றுமாலை உன் வீடு வரவேண்டுமென்றிருந்தால், இப்போதே வரும்படி நேர்ந்துவிட்டது" என்றாள் மகிழ்ச்சி பொங்க.

"என்ன உஷா! உனக்கு இவர்களைத் தெரியுமா! இவர் பெயர் ஆபத்சகாயம் இவர்தான் நான் அந்த பெரிய ஆபத்தில் மாட்டிக் கொண்டிருந்தபோது வெளியூரிலிருந்தே சகாயம் செய்தார். இப்போது இந்த ஊருக்கே மாற்றலாகிவிட்டது. உன் சிநேகிதிதான் இவர் மனைவி. நான் இவர்களுக்கு ஊரைச் சுற்றி காண்பித்து வருகிறேன். நேற்றுதான் கோவிலுக்குக் கூட அழைத்துப் போயிருக்தேன்."என்றான் அன்போடு.

'இவ்வளவு நல்லவனையா நாம் தவறாக எண்ணிவிட்டோம். 'பெண் புத்தி பின் புத்தி' என்பது சரியானது தான்; என்று எண்ணினாள். மனதிலிருந்த களங்கம் நீங்கியதும் அவளும் சகஜமாகப் பேச ஆரம்பித்தாள்.

"அட! பெயருக்கும் குணத்திற்கும் ரொம்பப்பொருத்தமாக இருக்கிறதே வனஜா!நீ இந்த ஊருக்குவந்த விஷயமே தெரியாது. இவரும் ஒன்றும் கூறவில்லை."—உஷா.

"வனஜா! உனக்கு இவ்வூரில் ஒரு சிநேகிதி இருக்கிறாள் என்றே என்னிடம் கூறவே இல்லையே"—வனஜாவின் கணவன்.

"எனக்கும் இவள் இவ்வூரில் இருப்பது நேற்றுதான் தெரியவந்தது. அதுவும் இவருடைய மனைவி என்பது இப்போதுதான் தெரியவந்தது'—வனஜா.

"எல்லோரும் வாருங்கள் சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்"—உஷா.

"உஷா! ஒரு நாள்கூட சந்தோஷமாக வெளியே போகவில்லை என்று இத்தனை நாள் குறைபட்டாயே, இப்போது சாப்பிட்டுவிட்டு எல்லோருமாக போகலாம்" என்றான்.

விருந்து முடிந்ததும், இருஜோடிகளும் அளவளாவியவாறு வெளிச் செல்லக் கிளம்பினர். உஷாவின் மனம் சந்தோஷ கடலில் மிதந்தது.

★



# என்னருமைத் தந்தை

குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி.

பிடாரம் கிருஷ்ணப்பா வந்த ஆச்சரியத்தையே எல்லோரும் பேசிப்பேசி மகிழ்ந்தவாறு இருந்தனராம். இப்படி இருக்கையில் என் தந்தைக்கு உபனயனம் ஏற்பாடானதால் அதன்கச்சேரிக்கு 'பெங்களூர் நாகரத்தினம்மாளை' ஏற்பாடு செய்ய பாட்டியும் தாத்தாவும் சென்றனராம். நாகரத்தினம்மாளிடம் என் பாட்டிக்கு வெகுநாளாக நெருக்கிய பழக்கமுண்டாதலால் மணிக்கணக்காக பல விஷயங்களை பேசினார்களாம். அப்போது கிருஷ்ணப்பா வந்த விஷயத்தையும் என் பாட்டி கூறினாளாம்.

அதற்கு அவர் மெல்ல சிரித்துவிட்டு, "ஓஹோ, வந்தாரா எப்படி வந்தார் தெரியுமோ" என்று கேட்டு நிறுத்தினாராம். பாட்டிக்கு இருந்த ஆவலில் வாயைத் திறக்காது அப்படியே உட்கார்ந்திருந்தாளாம். பிறகு நாகரத்தினம்மாள் "கிருஷ்ணப்பா இங்கு ஒருசமயம் வந்திருக்கும்போது நான் 'ஒரு குடும்பப்பெண் சிக்ஷையே இல்லாமல் அபார ஞானத்தோடு வெகு அழகாகப் பாடுகிறாள்" என்றேன். அவர் உடனே புறப்பட்டுவிட்டார். உன் பாட்டைக் கேட்டுவிட்டு நீ பாடின அழகை ரசித்து புகழ்ந்து விட்டுத்தான் போனார்" என்றாராம்.

பாட்டிக்கும் தாத்தாவிற்கும் ஏற்கனவே இருந்த ஆச்சரியம் அதி ஆச்சரியமாக மாறியது, "அட நாகரத்தின அம்மாவின் வேலைதானா இதெல்லாம். நீங்கள் ஏன் எனக்கு இத்தனை நாளாய்க் கூறவே இல்லை" என்றாளாம். "உன்னை ப்ரமிக்கவைக்க வேண்டும் என்றுதான் கூறவில்லை. சரி உன் பிள்ளை உபநயனத்திற்கு நான் கச்சேரி பண்ண மறுப்பேனா கட்டாயம் வருகிறேன்" என்றாளாம்.

பிறகு உபநயனக் கல்யாணமும் ஐந்து நாட்கள் மிக விமரிசையாக நடைபெற்றது. கச்சேரியும் கனஜோராக அமைந்தது. இச்சம்பவம் நடந்து சுமார் ஒருவருஷ காலம் ஓடி மறைந்ததும் என் பாட்டி, தாத்தா, தந்தை, சகிதம் பெங்களூர், மைசூர், அதன் சுற்றியுள்ள பல இடங்களைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டார்களாம். பெங்களூரில் அநேக, சிநேகிதர்களும், உறவினர்களும் இருந்தமையால் யார்வீட்டில் தங்குவதென்றே தெரியவில்லை.

அப்போது நாகரத்தினம்மாள் "நீங்கள் கிருஷ்ணப்பா வீட்டில்போய் தங்குங்கள். அவர் சமஸ்தானவித்வானாகையால் பல இடங்களையும் நன்றாகச் சுற்றிப்பார்க்க உதவுவார் நான் கடிதம் எழுதி எல்லாம் ஏறபாடு செய்து விடுகிறேன்" என்றாராம். அவர் பேச்சைத்தட்ட முடியாது ஒப்புக்கொண்டனராம்.

இவர்களோடு, சில சிநேகிதர்களும் வந்திருந்ததால் கிருஷ்ணப்பா வீட்டில் தங்க முடியாது அவர்களுடனேயே தங்க நேர்ந்தது. ஆனால் கிருஷ்ணப்பா வீட்டிற்கும் போனார்கள். அவர் என் பாட்டியின் பாட்டைக் கேட்க வீட்டிற்கு வந்ததை நினைவில்

வைத்துக்கொண்டு, இவர்களை தடபுடலாக விசாரித்தாராம். என் தந்தையையும் பார்த்து "ஏம்பா! தம்பி! என்னை உனக்கு நினைவிருக்கிறதோ நான் யார் தெரியுமா" என்றாராம்.

"ஓ! எனக்குத் தெரியுமே, நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தபோது நான்கூட பாடினேனே" என்றாராம் தலையை பலமாக ஆட்டிக் கொண்டே.

கிருஷ்ணப்பா வீட்டில் தங்காவிட்டாலும் தனக்கிருந்த சலுகையில் அவர் தமது ஆட்கள் மூலம் எல்லா இடங்களுக்கும் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தாராம். தானே நிர்மாணம் செய்துள்ள ராமமந்திரத்தில் பாட்டியைப் பாடவேண்டும் என்றதால் பாட்டியும் அப்பாவும் பாடினார்களாம். பல இடங்களை பார்த்து களித்துக்கொண்டும், கடவுளை தரிசித்துக்கொண்டும் வருகையில் திருநாராயணபுரம் வந்து சேர்ந்தனராம். அந்த ஊர் கோயிலில் நடந்த ஒரு வேடிக்கையான சம்பவத்தை என் தந்தையே 'ப்ரமித்துவிட்டோம்' என்ற தலைப்பில் எழுதியிருந்ததைப் படித்திருப்பீர்கள்.

ஆனாலும் அவர் விரிவாக எழுதியதை நான் சுருக்கமாகக் கூறுகிறேன். ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றவர்களை அங்கிருந்தவர்கள் வரவேற்று ஒவ்வொரு சன்னதியிலும் ப்ரத்யேகமாய் கடவுளை சேவிக்க வைத்தார்களாம். பிறகு அங்கு நின்ற ஒருவரைப் பார்த்து "இவர்களுக்கு ஆளுக்கு 250 தோசையும் வடையும் கொண்டுவந்து கொடு" என்றார்களாம். இவர்களுக்குத் தூக்கிவாரிப்போட்டதாம். வாயைத்திறந்து பேசவராது குழறிக்கொண்டே "எங்களால் இரண்டு தோசைகூட சாப்பிட முடியாது. ஒன்றுபோதும்" என்றனராம்.

இரவுவரை கோவிலிலேயே இருந்தார்களாம் இவர்கள். இரவு காலையில்கூறியபடி கொடுத்த, வெள்ளி ஒருரூபாய் அளவு இருந்த தோசை, வடையைப் பார்த்ததும் ஒருபக்கம் சிரிப்பும் ஒருபக்கம் ஏமாற்றமுமாக இருந்ததாம். மேலும் சில நாட்கள் அங்கு தங்கமுடியாதபடி குளிர் அதிகமாக இருந்ததால் கிளம்பி விட்டனர்.

பிறகு மைசூரிலுள்ள 'ஜகன்மோகன பாலஸ்' பார்க்கச் சென்றபோது, அதைப்பார்த்ததும் என் பிதா "அம்மா நம் வீட்டிலே ஜகன்மோகனி பத்திரிகைபோல இங்கேயும் ஜகன்மோகன பாலஸ் வந்துவிட்டதே" என்று குதித்தாராம். அங்குள்ள பாடும் கட்டிலையும் பார்த்துவிட்டு, மற்ற பல இடங்களையும் பார்த்துக்கொண்டு ஊர் திரும்பினராம்.

என் தந்தை நன்றாகப்படித்து பள்ளிப்படிப்பிலிருந்து கல்லூரி படிப்புக்கு மாறினார். ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகவேதேறி வயதுக்கு மிஞ்சியே படித்துப் பாஸ்செய்தார். அப்போது அவர் சிநேகிதர்களுடன் இதே பெங்களூர், மைசூர் போன்ற இடங்களுக்கும், கன்யாகுமரி வரையிலும் போய் வந்திருக்கிறார். அப்போது போகும்போது எண்ணற்ற, இயற்கைக் காட்சிகளும், கட்டடங்களும், கோவில்கோபுரங்களையும் புகைப்படம் பிடித்தார். அவருக்கு அந்த கலையில் ஆர்வம் மிகுதியாகையால் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து புகைப்

படங்களாகக் குவித்து வைத்திருக்கிறார். அதில் புகைப்படங்களையும், குழந்தைகள் மகாநாடு, வேஷபொருத்தம், பொங்கல் பொங்கிற்று? போன்ற பல தலைப்புகளில் சிறிய குழந்தைகளையும், சிறுவர் சிறுமியர்களையும் பெரியவர்களையும் பிடித்து ஜகன்மோகினி பொங்கல் மலரில் வெளியிட்டிருந்ததையும் வாசக அன்பர்கள் எல்லோரும் படித்து மகிழ்ந்திருப்பீர்கள். என்னை மட்டும் எடுத்தவை ஒன்று இரண்டு, என்று கணக்கிட முடியாதவை.

ஒருசமயம் இவர் எடுத்த ஒரு புகைப்படத்தை, பார்த்துவிட்டு, ஒரு புகைப்பட கம்பனிகாரரே அதை தங்களுக்கு, அளிக்கும்படியும், தங்கள் கடையில் பெரியதாக்கி மாட்டிக்கொள்வதாயும்கூட கேட்டாராம். இது ஒன்றே இவருக்கு இக்கலையில் இருக்கும் திறமையை எடுத்துக்காட்டுகிறதல்லவா!

---






அவர்கள் சரோஜாவைத் தனியே விட்டு வந்ததற்குக் காரணம் அவள் எதிரில் ஏதாவது பேசினால் அந்த விஷயம், அந்த நிமிஷமே ஊர்முழுதும் பரவிவிடும் என்பது தான்.

"அக்கா நான் இங்கு வந்ததே ரகுவைப்பற்றி பேச தான். இங்கு வந்தால் அடியும், காயமுமாக இருக்கிறது. எனக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை போ''

"என்ன தம்பி! எடுக்கும்போதே இப்படி பேசுகிறாய். ரகு என்ன செய்தான்? அவனைப்பற்றிப் பேசதான் என்றாயே! விவரமாகச் சொல்லு'

"ரகுவிற்கு ஊரில் நல்ல பெயரே இல்லை. என்னால் கேட்கவே முடியவில்லை. என் சிநேகிதர்கள் எல்லாம் என்னிடம் வந்து சொல்கிறார்கள். அவமானம் தலைகாட்ட முடியவில்லை''

"பாஸ்கர்! தலைகாட்ட முடியாமல் அவமானம் ஏற்படும்படி என்ன செய்துவிட்டான். எனக்கு ஒன்றும் தெரியவில்லையே அப்படி"

"காலேஜிலும் நல்ல பெயர் கிடையாது. நன்றாக படித்தாலும் கவலையில்லை. அதிலும் திருப்தியில்லை. அப்படி இருக்கையில் அண்ணாவின் வார்த்தையை எப்படி நிறைவேற்றுவது''

"நீ சொல்வது போல் ரகு ஒன்றும் அவ்வளவு மோசமில்லை பாஸ்கர்! கொஞ்சம் முன் கோபம் அதிகம். மேலும் விளையாட்டு புத்தி வேறு. அது தவிர அவனிடம் கெட்டப் பழக்கம் ஒன்றும் கிடையாது''

"உனக்கு என்ன தெரியும். அத்திம்பேர் இருக்கும் போதே நீ வெளியில் அதிகமாக வரமாட்டாய். இப்போது கேட்கவே வேண்டாம். வெளி விவகாரமே உனக்குத் தெரியாது. அவனது சிநேகிதர்களைக் கேட்டாலே அருவருப்பாக இருக்கிறது. ரஞ்சன் இருக்கிறான் பார்த்தாலே, அவனைப்பற்றி கேட்டாலே சந்தோஷமா யிருக்கிறது. அவனுடைய தம்பியாகிய ரகு ஏனோ இப்படி இருக்கிறான்''.

ரஞ்சனை பற்றி உயர்த்தியும், ரகுவைபற்றி தாழ்த்தியும் பேசியதைக் கேட்டதும் லக்ஷ்மிக்கு கோபம் வந்துவிட்டது. முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு "ரஞ்சனுடைய தம்பியாயிருந்தாலும் என் பிள்ளையல்லவா அவன். அதனால்தான் அப்படி இருக்கிறான்" என்றாள்.

இதற்கெல்லாம் கோபித்துக் கொள்வாள் என்று அவன் நினைக்கவே இல்லை. 'என்னடா இது எப்படி என்ன சொல்வது' என்று யோசித்தான். பிறகு "அக்கா! இதற்குள் கோபம் வந்துவிட்டதே உனக்கு. நல்லதிற்கு தானே சொன்னேன். கண்ணாலே கண்டதைத் தானே அக்கா சொன்னேன். நான் இப்போது சொல்லாவிட்டால் உனக்குத் தெரிந்திருந்தும் ஏன் நீ சொல்லவில்லை என்று பிறகு நீயே கேட்பாய். அதற்காகத்தான் தெரிவித்து விட்டேன்."

"கண்ணால் கண்டேன் என்றாயே என்னது என்று சொல்லு பார்க்கலாம்"

"அவன் காலேஜில் பெண்களும் படிக்கிறார்களே. அவர்களை சில பையன்களோடு சேர்ந்துகொண்டு கலாட்டா செய்கிறான். காலேஜிற்கு போகிறேன் என்று சொல்லிவிட்டு சினிமா உண்டா, ட்ராமா உண்டா என்று திரிகிறான். இவற்றை எல்லாம்தான் பார்த்தேன்."

"ஐயோ! அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதா? எனக்கென்ன தெரியும் தம்பி? ஏதோ தெரியாமல் கோபித்துக் கொண்டு விட்டேன். எனக்கு யார் இருக்கிறார்கள்? நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்"

"ஹூம்... கவனித்துக் கொள்ள வேண்டுமா? கவனித்து திருத்தி நம் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமே, அண்ணா தன் பெண்ணை என்னிடம் ஒப்படைத்து விட்டு போய் விட்டானே. அவன் மனதுபடி அவளை ரகுவிற்கு கொடுக்க வேண்டியது என் கடமை ஆயிற்றே"

"வீட்டிலேதான் ஏதோ விளையாட்டாகச் செய்கிறான் என்றிருந்தேன். நானும் கவனித்துக் கொள்கிறேன். நான் எதை தான் கவனிப்பேன் தம்பி. என்னால் ஒன்றும் முடியவில்லை"

"அக்கா! என்ன இருந்தாலும் நீங்களெல்லோரும் ரஞ்சனிடம் இப்படி நடந்துக் கொள்ளவே கூடாது, மற்றொருவனாய் இருந்தால் இப்படி எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு இருக்க மாட்டான். பாவம் நல்ல பையன். மேலும் சதாசிவத்தையும் விரோதித்துக்கொள்ளாதே. அவரால் எத்தனையோ நன்மைகள் இருக்கின்றன"

"தம்பி! இந்த ரகுவும், ரேவதியும் அவரை ஏதேதோ பேசுகிறார்கள். அவரும் அதனால் கோபித்துக் கொண்டு

விட்டாரோ என்னவோ. நான் அவரோடு பேசுவதே கிடையாது"

"இன்னொன்று வள்ளிக்கு குழந்தை இறந்துவிட்ட தாமே? அதுவும் ரகு அவளைத் தள்ளித்தான் இப்படியாகி விட்டதாமே. அநியாயமாக இருக்கிறதே. எல்லாம் சரோஜா சொல்லிவிட்டாள். ஆரம்பிக்கும் போதே கொலையில் ஆரம்பித்து விட்டானே. முத்து எவ்வளவு நல்லவன். எப்போதும் வேலைக்காரர்களிடம் அன்பாக இருக்க வேண்டாமா. அவர்கள் மனது மாறிவிட்டால் நம் வீட்டு ரகசிய மெல்லாம் அம்பலமாகிவிடும். சரி ஏன் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டாய். நான் கவனித்துக் கொள்கிறேன் எல்லாவற்றையும். நீ வீணுகக் கவலைப் படாதே. சரி ரகுவையும் ரேவதியையும் எங்கே வீட்டி லேயேகாணவில்லை" என்ருன்.

கொலை என்ற பதத்தைக் கேட்ட வுடனே லக்ஷ்மி அம்மாளின் வயிற்றில் இடி விழுந்தாற் போல் இருந்தது. அதை வெளிக்குக் காண்பித்துக்கொள் ளாமல் பேச ஆரம்பித்தாள்.

"ரேவதி அவள் சினேகிதிகளுடன் சினிமாவிற்குப் போயிருக்கிருள். ரகு சரோஜாவை தள்ளினனே அப் போதே போய்ப்பார்த்தேன். அவனை அறையில் காண வில்லை. எங்கு போனனே. ஒருவேளை சினிமாவிற்குப் போயிருப்பான். வந்து விடுவார்கள்."

"ரேவதியையும் கண்டிப்பான கண்காணிப்பிலேயே வைத்திரு. என்ன இருந்தாலும் அவள் அண்ணன் போல் அவள் இருக்க மாட்டாள். ரஞ்சனிடமிருந்து ஏதாவது கடி தம் வந்ததா."

"அவன் ஏன் எங்களுக்கு எழுதுகிருன். சதாசிவத் திற்கு எழுதினனும். ஏதோ சரோஜா கத்திக் கொண்டிருந் தாள். இதை ரகுவிடம் சொல்லப்போய்த்தான் இந்த அமர் களம் நடந்தது"

"உன் வீட்டைப்பற்றி நினைத்து விட்டால் எனக்கு ஒரோருசமயம் ஒன்றுமே தோன்றுவதில்லை. அத்திம்பேர் போனதிலிருந்தே குடும்பத்தின் அழகு போய்விட்டது. ரஞ்சனும் தூரதேசம் போய்விட்டான். இனிமேல் உன் சாமர்த்தியத்தில் தான் எல்லாம் நடக்க வேண்டும்"

"ஹூம்....தம்பி நேரமாயிற்று தூங்கலாம்"

"நான் நாளை போவதற்குள் ரகுவைப் பார்த்தால் நான் பேசிக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அவனை வீட்டிற்கு ஒரு நாள் வரச் சொல்லு" என்ருன்.

பிறகு இருவரும் உறங்கப் போயினர்

உறங்கப் படுத்தாளே தவிர லக்ஷ்மி அம்மாளுக்கு ஏன் தூக்கம் வருகிறது. பாஸ்கரன் தூக்கிப் போட்ட வெடியே அவள் மனதில் புகைந்து கொண்டிருந்தது. 'ரகுவை நாம் எப்படி திருத்துவது. இன்னும் இந்த ரேவதியும் வர வில்லையே. ஒருவரை ஒருவர் தோற்கடித்துவிடுவார்கள் போலிருக்கிறதே' அவளது எண்ண மடை இவ்வாறு விரிய ஆரம்பித்தது. புரண்டு புரண்டு உடம்பெல்லாம் வலித்ததே தவிர பலன் இல்லை. பாஸ்கரனும் தூங்கவில்லை.

நெடு நேரம் கழித்து ரேவதி கதவைத் தட்டினாள். அப் போது மணி பதினொன்றுக்கு மேலாகிவிட்டது. ஏதோ ஒரு வேலை ஆள் அவளைக் கொண்டுவிட்டான். கதவைத் திறந்த லக்ஷ்மி அம்மாள் சற்று கடுமையுடனேயே, "ரேவதி இப்போது மணி என்ன தெரியுமா? ஒன்பது மணிக்கு சினிமா முடிந்தும் ஏன் இவ்வளவு நேரம். கொஞ்சம் கூட நன்றாக இல்லை. இப்படி இரவில் நேரம் கழித்து வருவது" என்றாள்.

இதைச் சற்றும் ரேவதி எதிர்பார்க்கவில்லை. இருந்தா லும் தன்னை மிரட்டுவதை சகிப்பாளா? "என்ன சித்தி! ரொம்ப மிரட்டுகிறாயே? எங்கே போனேன். சினிமா முடிந் ததும் என் சிநேகிதிகளுடன் பெரிய ஹோட்டலில் டின்னர் ஏற்பாடு செய்திருந்ததால் அங்கு போய்விட்டு வருகிறேன். என் இஷ்டம். என்னை ஒன்றும் நீ மிரட்டவேண்டாம். ஜாக்கிரதை" என்றாள்.

அதற்குள் அங்கு வந்து சேர்ந்த பாஸ்கரன் "ரேவதி சித்தி சொல்வது நியாயம்தானே. பெரியவர்களை எதிர்த்து பேசலாமா? இந்தமாதிரி சுற்றுவது நல்லதல்ல நானும்தான் சொல்லுகிறேன். பி.ஏ.,யில் மூன்று வருஷம் முட்டி போட்டாகிவிட்டது. உனக்கு படிப்பில் அக்கறை இல்லை யானால் நிறுத்திவிடு. இப்படியெல்லாம் சுற்றலாமா? என் வீட்டிற்கு வா நாலுநாள் இருக்கலாம்'' என்றான்.

"நான் யார் வீட்டிற்கும் வரத் தயாராயில்லை. என் படிப்பை பற்றி என்னை பற்றி மற்றொருவர் பேசுவது அனு வச்யம்" என்றவாறு விடுவிடென்று தன் அறைக்குப் போய் விட்டாள்.

"அக்கா! பார்த்தாயா? நீ இப்போது அடக்க முடியுமா. முன்பெல்லாம் பணத்திமிரோடு ஒன்றையும் கவனிக்காது அடக்காது எல்லோரையும் விட்டுவிட்டாய். குழந்தை பழக்கம்தானே கடைசீ மட்டும் வரும். நீ இப்போது அடக் கினுயானல் இளையாள் பாடுபடுத்துகிறாள் என்ற பழிதான் வருமே தவிர, அவள் என்னவோ அடங்கமாட்டாள். ரகுவே உனக்கு அடங்காதபோது இவளை எப்படி அடக்க முடியும்.''

"என்னவோ தம்பி ரகுவோடு ரேவதியின் கவலையும் சேர்ந்துவதைக்கிறது. அவளை, எப்படி ஜாக்கிரதையாகப் பாதுகாத்து ரஞ்சனிடம் ஒப்படைக்கப் போகிறேனே?" என்றவாறு படுக்கச் சென்றாள்.

மறுநாள் காலை முத்து எழுந்ததுமே நேரே சரோஜா படுத்திருக்கும் அறைக்கு வந்தான். அப்போதுதான் விழித்த சரோஜா முத்து வருவதைப்பார்த்ததும் எழுந்து அமர்ந்தாள்.

கண்ணு! எப்படியம்மா இருக்கு வலி? குறைந்திருக் குதா?" என்றான் தடவியவாறு.

"முத்து! உன் மருந்து நல்லமருந்துதான். எனக்கு வலியே இல்லை. ராத்திரி நன்றாகத் தூங்கினேன். மாமாகூட உனக்கு ஸர்டிபிகேட் கொடுத்துவிட்டார்."

"சரிம்மா. அம்மா என்னை திட்டினாங்களா?

"ஹூஹூம். டாக்டரே இந்தமருந்து கட்டியிருப்பதே போதும்னு சொன்ன பிறகு என்ன செய்யமுடியும். மாமா வோடதான் ஏதோ பேசிக்கொண்டிருந்தாங்க"

"பாலு குடிச்சயோ. வாஸூ எங்கம்மா?

"அவனு நன்றாகத் தூங்குகிறான். முத்து! நான் மாமா கிட்டே இந்த வீட்டிலே ரஞ்சன் அண்ணு ஊருக்குப்போன பிறகு நடந்தது எல்லாவற்றையும் ஒப்பித்து விட்டேன். மாமா கூட அதைப்பற்றிதான் அம்மாவிடம் பேசினர் போலிருக்கு"

"பெரியவங்க பேசறதை நம்ம ஒட்டு கேட்கக்கூடா தும்மா" என்னும்போது லக்ஷ்மியும் பாஸகரனும் உள்ளே நுழைந்தனர். லக்ஷ்மி ஏதாவது கூறியபிறகு, தான் வெளி செல்வதை விட முன்பே சென்றுவிடலாம் என்று முத்து வெளி யேறினன்.

"சரோ! நான் போய்விட்டு பிறகு ஒரு நாள் வரு கிறேன் என்ன? சமர்த்தாக இரு" என்றான் பாஸ்கரன்.

"சரிமாமா. முதலில் ரகுவிற்கு சொல்லுங்கள் சமர்த் தாயிருக்க. அவன்தான் முரடன்."

"ஏய்! நீ பேசாமல் இரு. உன் வரை நீ பார்த்துக்கொள். பெரியவர்கள் விஷயத்தில் தலையிடாதே" என்று லக்ஷ்மி கண்டித்தாள்.

"குழந்தைதானே அக்கா" என்றவாறு வாயிலுக்குச் சென்றான் பாஸகரன். லக்ஷ்மியும் பின் தொடர்ந்தாள்.

ரகுவிற்காக எத்தனை நேரம் காத்திருப்பது? காலைவரை ரகு வீடு திரும்பவேயில்லை, அதே கவலை யால் குழம்பிக் கொண்டிருந்த லக்ஷ்மி ஒருவாறு பாஸ்க

ரணே வீட்டிற்கு அனுப்பிவிட்டு ஹாலில் வந்தமர்ந்தாள். அப்போது சாதாசிவத்தின் ஆள்வந்து "அம்மா இந்தாங்க கடுதாசி, ஐயா கொடுக்க சொன்ஞங்க" என்ருன்.

"என்ன ஐயாவா கொடுக்கச் சொன்ஞர்" என்று பதறியவாறு கடிதத்தை வாங்கிக் கொண்டாள். அந்த ஆள் தலேயை ஆட்டிவிட்டு தன் வழியே போஞன். சதாசிவத்தை பல வருஷங்களாக பழக்கமிருப்பினும் அவர் இதுவரையில் ஒரு கடிதம் அனுப்பியது கிடையாது. எதற்கும் நேரேயே வந்து பேசிவிட்டு போவார். அப்படிப் பட்டவரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்ருல் ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது என புரிந்து கொண்டாள்.



தன் அறைக்குச் சென்று கடிதத்தைப் படிக்கத் தொடங்கினள். கடிதத்தை சரியாகப் படிக்கக் கூட முடியாதவாறு கண்ணீர் திரை கட்டியது.

"அம்மா லக்ஷ்மீ!

நான் கடிதம் எழுதுவது உனக்கு வியப்பாக இருக்கலாம். நான் இதுவரை உங்கள் ஒருவருக்கும் ஒரு கடிதமும் எழுதியது கிடையாது. ஆனல் இப்போது எழுதும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. நான் கூறுவதை தவருக பழி என நினைக்காமல் கவனித்து அதற்கு வழிசெய்.

நேற்று ரகு இங்கு வந்து அவர்கள் காலேஜில் டூர் அழைத்துப்போவதாயும் அதற்கு முன்னூறு ரூபாய் வேண்டுமென்றும் கேட்டான். இந்த சமயத்தில் டூர் அழைத்து போவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. அதனல் நான் பணமும் கொடுக்கவில்லை. தாறுமாருக இரைந்து விட்டு போனன். ஷண்முகத்திற்காகவும் ரஞ்சனுக்காகவும் அவனது வேல் போன்ற வார்த்தைகளை பொறுத்துக் கொண்டேன்.

பிறகு பிரின்ஸ்பாலை விசாரித்ததில் டூர் அழைத்துப் போகவில்லை. ரகு சொன்னது பொய் என்றும், மேலும் அவனைப்பற்றி புகார்கள் பல கூறி அவன் தாயாரிடம் சொல்லி கண்டிக்கச் சொல்லுங்கள் என்ருர். அவன் தன் வேலைகளை சரியாக செய்யாத தோடில்லாமல் மாணவ மாணவிகளிடம் கலாட்டா செய்து அவர்களனைவரது தந்தைகளின் கோபத்திற்கு ஆளாகியுள்ளான். எந்த வழியில் அவனைத் திருத்துவது என்றே தெரியவில்லை? என்றும் கூறி வருத்தப்பட்டார்.

இப்படிப்பட்ட விஷயங்களை யெல்லாம் எழுதுவதற்கே எனக்கு கை நடுங்குகிறது. ரஞ்சனைப்பற்றி பேசியவாயால், இவனது தீச்செயல்களை கூற கூச்சப்பட்டே இக்கடிதத்தை எழுதினேன். இன்னும் சில தினங்களில் தனக்கு மைனர் நீங்கி விட்டது சொத்தில் என் பங்கை பிரித்து கொடுத்து விடுங்கள் என்றே கூறி விடுவான் போலிருக்கிறது....

இது படித்துக் கொண்டிருக்கையில் சரோஜா, 'அம்மா! ரேவதி உன்பின்னல் நின்றுகொண்டு எல்லாவற்றையும் படித்துக் கொண்டிருக்கிருள்" என்ருள். சடக்கென்று திரும்பிப் பார்த்தால் ரேவதி ஒன்றும் அறியாதவள்போல் ஓடி மறைந்து கொண்டிருந்தாள்.

பின்னல் நின்று கொண்டிருந்த ரேவதியால் முழுவதையும் நன்ருகப் படிக்க முடியவில்லையே தவிர அங்கங்கே படித்து விஷயத்தைப் புரிந்து கொண்டுவிட்டாள்.

பிறகு லக்ஷ்மி அம்மாள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கடிதத்தைப் பிரித்தாள்.

...ரஞ்சன் வரும் வரையிலாவது நான் சொத்தைக் காப்பாற்ற வேண்டாமா? அதற்கும் ரகு ஏதேதோ உளறினன். என் கடமை சொல்லவேண்டியதை சொல்லிவிட்டேன். நீதான் அவனை அடக்கி நன் முறைக்குக் கொண்டு வரவேண்டும். ரேவதியையும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள். என்னல் சொல்லாது இருக்கவும் முடியவில்லை.

ஒரு வெடி வெடித்தால் அதன் சப்பதத்தினல் சுற்றியுள்ள இடமெல்லாம் கிடுகிடுக்கிறது. மானத்தில் இடித்தால் அதன் ஓசை எல்லோரையும் நடுங்கி ஆடவைக்கின்றது. ஒருவன் ஒரு பிடி மண்ணைத் திருடினலும் அவன் பரம்பரைக்கும் அந்தச் செயல் மறக்காது பின்தொடர்ந்து மற்றவன் வாழ்வை பாதிக்கின்றது. அடுப்பில் ஏதாவது வறுத்தோமானல் அதன் நெடி சுற்றி இருப்பவர்களின் மூக்கைத் துளைத்து துன்பம் விளைவிக்கின்றது. ரகு செய்யும் தீச்செயல்களும், ரேவதின் போக்கும் உங்கள் குடும்பத்தின் கௌரவம் எல்லாம் அழிந்து பாழாய் போவதோடில்லாமல் பின்னல்வரப் போகிறவர்களின் வாழ்க்கைச் சக்கரத்தையும் கோணலாகச் செலுத்தி பெரியபள்ளத்தில் தள்ளிவிடும். இதையெல்லாம் நினைக்கையில்எனக்கு உலமே சுழலுவதுபோல் இருக்கிறது. இப்பொழுது நான் தெரிவிக்காது இருந்தால் ஒரு காலத்தில் ஏன் கூறவில்லை என்று நீங்கள்கேட்கக்கூடும். முன்பே அதனலேயே தெரிவித்து விட்டேன். இக்கடிதத்தைக் கண்டதும்அதற்கு வேண்டியதை செய்து தக்க பதில் அனுப்புவாய் என நம்புகிறேன்.

கடவுள் துணை.

சதாசிவம்"

பாஸ்கரன் தான் ரகுவைப்பற்றி ஒரு வெடியைத் தூக்கிப்போட்டு கலக்கினன் என்ருல் அதை ஊர்ஜிதபடுத்துவது போல் வெடிமேல் வெடியாக இருக்கிறதே.

இக்கடிதத்தைப் படித்ததும் லக்ஷ்மி அம்மாளுக்கு ஆற்று வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டு வதைத்தது.

## அத்தியாயம் 9

### கலகத்தீயின் கடித பாணம்

"ரகு! என்ன ரொம்ப சாது போல் சொகுசாய் படுத்திருக்கிறாய். இப்போதுதான்வருகையா" என்றவாறு ரேவதி ரகுவின் அறையினுள் புகுந்தாள்.

"ஆமாம். ஆமாம். களைப்பாய் இருந்தது. படுத்துக் கொண்டேன்" என்றான் ரகு படுத்தவாறே.

"ஹூம்...உன் களைப்பை எல்லாம் நான் சொல்லப் போகிற விஷயம் காற்றாய் பறக்கடிக்கப்போகிறது"

"என்ன அப்படிபட்ட விஷயம். சந்தோஷ சமாசாரமா!"

"ஆமாம். ஆமாம். உனக்கு சனி பிடித்திருக்கிறது. இனிமேல் அது உன்னை ஆட்டிவைக்கப் போகிறது."

"ரேவதி. சுற்றி வளைக்காதே சுருக்கச் சொல்."



"ஓஹோ! மகாராஜாவிடம் சுற்றிவளைக்காது 'டாண்' என்று விஷயத்தைச் சொல்லவேண்டுமோ? என்றால் அப்

படியெல்லாம் சுருக்க பேசமுடியாது. சரி நான் போகிறேன், யாரிடமாவது கேட்டு தெரிந்துகொள். பாவம் உனக்கு உதவியாயிருக்கட்டும் என்று சொல்ல வந்தால் அதிகாரம் பண்ணுகிறேயே." என்று கோபித்து முகத்தை சுளித்து கொண்டு நின்ருள்.

"ரேவதி! இதற்குள் உனக்குக் கோபம் வந்துவிட்டது. நீ சொல்லப்போகும் விஷயத்தை சீக்கிரம் அறிய ஆவலில் அப்படிச்சொன்னேன். நீ எப்போதும் என்கட்சி ஆயிற்றே நீ கூட கோபித்துக் கொள்ளலாமா. வா. இந்த நாற்காலியில் உட்கார்ந்து விஷயத்தை உன் இஷ்டப்படி நிதானமாகச் சொல்லு" என்ருன் நயமாக.

நாற்காலியில் அமர்ந்து கொண்டே, "சொல்லவேண்டியது தான்...அந்த விபூதிகிழம் இருக்கிறதே அது சித்திக்கு ஏதோ கடிதம் எழுதியிருக்கு அதைப்படித்து விட்டு சித்தி அழுது கொண்டிருக்கிருள்"

"என்ன விபூதி கிழமா? ஓஹோ! அவ்வளவு தைரியம் வந்து விட்டதா. இதோ போகிறேன்." என்று படுத்திருந்தவன் எழுந்து தடதடவென்று ஓடினுன்.

அவன் ஓடும்போது வழியில் நின்று கொண்டிருந்த சரோஜா "டேய் ரகு! மெள்ளபோ. நேற்று என்னைத் தள்ளி என் மண்டையை உடைத்தது போதும். இன்று யார் மண்டையையும் உடைத்து விடாதே" என்ருள் குறும்பாகப் பார்த்துக்கொண்டே.

ரகுவிற்கு இருக்கும் ஆத்திரத்தில்—அவன் ஓடும் வேகத்தில் காதில் இது எங்கே கேட்கப்போகிறது. நல்ல வேளை அவன் காதில் இவள் கூறியது விழாததினுல் ஒரு குட்டு மீந்தது. சரோஜா ஒரு மூலையில் நின்றவாறு எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா! என்ன அழுகை நான்சென்ஸ்" என்றவாறு உள்ளே சென்ருன் ரகு.

"எனக்கென்னப்பா அழுகை. என் வாழ்வே அழுகையாக இருக்கையில் எனக்கு அழுகை என்று தனியாக ஒன்று இருக்கிறதா?" என்று தன் அழுகையை அதிகமாக்கினுள்.

"ஆரம்பித்து விட்டாயா உன் புராணத்தை. கேட்டால் ஒரே வார்த்தையில் பதிலே சொல்லு

"ஹூம்....வயிற்றை அலம்பி மாணிக்கத்தைப் பெற்றிருக்கிறேனே. அந்த அழகிற்குதான் அழுகை. ஏன்டா ரகு ஏன் இப்படி என்னை உயிரோடு வதைக்கிருய். உன் துடுக்கு வீட்டோடு இருக்கிறது என்று நினைத்தேன். வெளியிலும் அதைக் காட்டி என் மானத்தை வாங்கு

கிருயே? நேற்று தம்பி வந்திருந்தான். அவன்தான் உன் திருவிளையாடல்களை கூறி வருத்தப்பட்டுவிட்டு போனுன். நான் அதையெல்லாம் நம்பாது சப்பைக் கட்டுகட்டி மழுப்பி னேன். சதாசிவம், நீ நேற்று அவர்கள்வீட்டிற்கு போய் செய்த அமர்களத்தை எழுதியிருக்கிருர். இப்போது என்ன சொல்வது? ரஞ்சனை உயர்த்தியும், உன்னைத் தாழ்த்தியும் ஊர் பேசுகிறதே அதைக்கேட்க உனக்கு அவமானமாயில்லையா?" இன்னும் ஏதேதோ கேட்டாள். அவள் மனத்திலிருந்த கவலையின் சாயை அப்படியே அவள் வார்த்தைகளில் தெள்ளென கண்ணுடிபோல் தெரிந்தது.

"அம்மா நீ என்னவேண்டுமானலும் சொல்லிக்கொள். நான் ஏதாவது தப்புகாரியம் செய்தால்தானே அவமானம். இப்போது என்ன தவறு செய்துவிட்டேன். அந்த ருத்திராட்சர பூனைதான் எழுதியது என்ருல் நீயும் நம்புகிருயே. ஆபத்து வரும் சமயத்தில் புத்தியை மறைத்து விடும் என்கிருர்களே. அது சரியானதுதான்"

"வந்த ஆபத்து போதாதென்று இன்னும் என்ன ஆபத்து வரப்போகிறது. எனக்கு என்ன புத்தியை மறைத்துவிட்டது? நீ நேற்று அவர் வீட்டிற்குப்போய், எதற்கு பொய் சொல்லி பணம் வாங்கப்பார்த்தாய்"

"அதைதான் புத்தியை மறைத்துவிட்டது என்றேன். உன் அழகான தம்பி பாஸ்கரனும், அந்த கிழமும் சேர்ந்து சூழ்ச்சி செய்து நம்பணத்தை எல்லாம் அபேஸ் செய்ய ஏற்பாடு நடக்கிறது. அதை அறிந்து நான் போய் கொஞ்சம் கொஞ்சமாக நம் பணத்தை யெல்லாம் வர வழைத்து விடலாம் என்று போனேன். அது தெரியாது ஏதோ உளறுகிருயே".

"என்ன? அபேஸ் செய்யவா. சீ ரகு அப்படி சொல் லாதே. நேற்று தம்பி வந்து உன்னைபற்றியும் அண்ணு பெண்ணை உனக்குக்கொடுக்கப்போவதைப்பற்றி யெல்லாம் பேசினுன். பிறகு நம் குடும்பத்தைத் தானே கவ னித்துக் கொள்வதாயும் சொன்னுன்".

"ஏன் கவனித்துக்கொள்ள மாட்டான். இதோதான் ஒரே வழியாகக் கவனித்துக்கொள்கிருனே. இங்கு யார் பெண்ணும் எனக்கு வேண்டாம். அம்மா நீ சுத்த கோழை. பணத்தின் முன்புஅக்கா ஏது....தங்கை ஏது எல்லாவற்றை யும் முடித்த பிறகு திண்டாடு. சரி அந்த கடிதம் எங்கே! கொடு இப்படி அதை" என்று லக்ஷ்மியின் கையிலிருந்த கடிதத்தை பிடுங்கி சுக்கல் நூருகக் கிழித்துப் போட்டான்.

பிறகு ஒரு காகிதம் பேனவுடன் திரும்பியவன்; "அம்மா! இந்தா பிடி. நான் சொல்கிறபடி கடிதம் எழுது"

என்று கட்டளையிட்டான். கண்ணைத் துடைத்துக் கொண்ட லக்ஷ்மி "ரகு, என்ன விளையாடுகிருயா? நான் இப்போது இருக்கும் நிலைமையில் என்னுல் ஒரு கடிதமும்



எழுத முடியாது. பிறகு தம்பியைக் கேட்டுக்கொண்டு செய்யலாம்" என்ருள்.

"ஹூம் தம்பியையா? பேஷாகக் கேட்கலாம். கட்டாயம் கேட்கவேண்டியதுதான். போம்மா நான் எழுதித் தருகிறேன். நீ கையெழுத்துப் போட்டு அனுப்பு" என்ற வாறு கடிதத்தை எழுத உட்கார்ந்தான். மூலையில் நின்றிருந்த சரோஜா இப்போது முன்னுக்கு வந்தாள். லக்ஷ்மி தலையில் அடித்துக்கொண்டே உள்ளே போனுள்

எல்லோருக்குமே ஒரு நல்ல விஷயத்தைப் பற்றியோ வேறு எதுவானுலும் அழகாக வார்த்தைகளை அமைத்து எழுதுவதானுல் கஷ்டம். ஆனுல் சுடசுட ஒரு கடிதம் எழுதுவதற்கு—அதுவும் ரகு போன்றவர்களுக்கு அது ஒரு கஷ்டமான காரியமா? மேலும் அப்போதுதான் பூனைபோல் அங்கு வந்து சேர்ந்த ரேவதியும், பலே ரகு! கடிதம் எழுத

வேண்டுமானல் உன்னிடம் கற்றுக்கொள்ளவேண்டும். உன் பிச்சைதான். இன்னும் நன்ருக எழுது. ஒரு கட்டுரை போலவே அழகாக இருக்கிறது'' என்று உற்சாக மூட்டும்போது கடிதம் இன்னும் விருவிருப்பாக அமைவதில் வியப்பென்ன?

அந்த சமயம் ரேவதியின் கணக்கற்ற சிநேகிதிகளில் சிலர் அங்கு வந்தனர், ''குட்மார்னிங் ரேவதி! நேற்று போல இன்றும் ஒரு பெரிய பார்ட்டி ஏற்பாடாகி இருக்கிறது. அதற்குக் கூப்பிடதான் வந்தோம்'' என்றனர்

''ஓ! அப்படியா, சந்தோஷம். உட்காருங்கள் இப்படி என்று வரவேற்ருள். ரகு கடிதம் எழுதுவதையும் நிறுத்திவிட்டு அவர்களைப் பார்த்து இளித்தான். இதைக் கடைக்கண்ணுல் கண்ட ரேவதி மெதுவாக ''ரகு! அவர்களைப் பார்த்து இளித்துக்கொண்டிருக்காதே. அப்போது கடிதத்தின் நடை தடைபட்டு விடும்'' என்ருள் சிரித்துக் கொண்டே.

அப்போதிருந்த சூழ்நிலையில் அவளைக் கோபிக்கவும் முடியவில்லை. கடிதம் எழுதவும் ஓடாது யோசனை செய்பவன் போல் பாவனையுடன் உட்கார்ந்திருந்தான்.

சரோஜாவால் எத்தனை நேரம்தான் பேசாமல் இருக்க முடியும்? இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நின்ருள்.

''அடே! இது யாரடா. சினிமா ஸ்டார் மாதிரி'' என்ருள்

''மாதிரி என்ன? சினிமா ஸ்டாரேதான். நான் அவர்களோடு கிளப்பிப் போகிறவரை கொஞ்சம் உன் வாயை அடக்கிக் கொண்டிரு''

''ஏன் வாயை அடக்கணும். நீ அடக்கு முதல்லே'' என்று கூறிவிட்டு தனக்குள்ளாகவே ஏதோ முணுமுணுத்தாள். இவள் முணுமுணுப்பதைப் பார்த்த ரேவதி, ''ஏய் என்ன முணுமுணுத்தாய்'' என்ருள்.

''உம் என்னவா? நேற்று சினிமா, டின்னர் என்று போய்விட்டு ராத்திரி பதிஞேரு மணிக்கு வந்தாயே, இன்றும் போய்விட்டு நாளைதான் வருவாயோ என்று நினைத்தேன்''

''கழுதை....நினைத்தாளாமே....பெரிய பாட்டி. இந்த நியூஸ் புலடினை வைக்கிற வழியில்தான் வைக்கவேண்டும். ஏய் மரியாதையாகப் போகிருயா, மண்டையில் ரகு விட்டுவைத்திருக்கிற மீதி பாகத்திற்கும் விருந்து தரட்டுமா?''

''ஒஹோ....தினம் ஒரு விருந்து சாப்பிட்டு என் மண்டைக்கும் விருந்து கொடுக்கலாம் என்று நினைவா!

கொடு தாராளமாய்'' என்றாள். ரேவதியும் ஒரு குட்டு வைத்தாள். இதை ரகு கவனித்தவன் போல காண்பித்துக் கொள்ளவே இல்லை. அப்போதுதான் உள்ளிருந்து வந்த லக்ஷ்மியின் ஆத்திரம் வெள்ளமாக பெருக்கெடுத்தது.

"ஏய் ரேவதி! என் குழந்தையைத் தொடாதே என்று எத்தனை முறை கூறுவது. ரோஷம் இருந்தால் இப்படி இருப்பாயா?....குழந்தை அலறுகிறதே பார்த்துக் கொண்டு நிற்கிறாயே. சரி யார் அவர்கள் என்றாள்.

"சித்தி! அவள் என்னை அவமானப்படுத்தலாம். நான் அடிக்கக்கூடாது. அவர்கள் என் சிநேகிதிகள். அவர்களோடு நான் வெளியே போகப்போகிறேன்''

"வெளியே போகிறாயா? என்ன என்று நினைத்துக் கொண்டு ஆடுகிறாய். நேற்றும் போய்விட்டு பதினோரு மணிக்கு வந்தாய். இன்றும் போகிறேன் என்கிறாய். எங்கும் போகக்கூடாது. உன் அண்ணன் வருகிறவரையில் உன்னை எப்படி காக்கப் போகிறேனோ. இளையாள் சொல்கிறாள் என்ற வார்த்தை வரக்கூடாது என்று இத்தனை நாளாக பேசாமல் இருந்தேன். சொல்வதைக் கேள்"

"ஹூம்...உன் மிரட்டலுக்கு பயப்படுகிறவள் நான் இல்லை. நீங்கள் எல்லோரும் ஒரு நிமிஷம் இருங்கள் இதோ வருகிறேன்" என்றாள் தன் சிநேகிதிகளைப் பார்த்து. அவளது கூச்சல் சரோஜாவின் அலறலையும் மீறி கேட்டது. அவர்கள், "வேண்டாம் ரேவதி! நாங்கள் போகிறோம்." என்று கிளம்பினர்.

தன் சித்தியை ஒருமுறை முறைத்துவிட்டு "அவள் கிடக்கிறாள். இதோ வருகிறேன்" என்று மாடிக்கு ஓடினாள். சிறிது நேரத்தில் லக்ஷ்மியின் வார்த்தையை அலக்ஷியம் செய்துவிட்டு போயும்விட்டாள்.

கட்டுரை போன்ற கடிதத்தை எழுதி முடித்ததும், அதை மேலும் கீழுமாக பார்த்துவிட்டு, "அம்மா! இதில் கையெழுத்து போடு சீக்கிரம்" என்றான். "என்னடா எழுதி யிருக்கிறாய். படித்துக் காட்டு. இல்லாவிடில் என்னிடம் கொடுத்துவை நான் படித்துவிட்டு மாலை அனுப்புகிறேன்" என்றாள் லக்ஷ்மி.

"என்ன எழுதியிருக்கிறேன் என்பதை நீயே பிறகு படித்துத் தெரிந்துகொள். இப்போது கையெழுத்து போடு''என்றுகூறி கடிதத்திலுள்ள விஷயத்தைக் கையால் மூடியபடி மேஜைமேல் வைத்தான். பவாம் நம்மிடம்தானே கடிதத்தைக் கொடுக்கப்போகிறான் என்ற எண்ணத்தில் ஒன்றையும் படிக்க எண்ணாது கையெழுத்து போட்டுவிட்டாள்.

ரகுவா கடிதத்தைக் கொடுக்கிறவன். கடிதத்தைப் படிக்கிறவன்போல் அதைத் தன்னிடம் வைத்துக்கொள்ள சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். வாஸு "அம்மா" என்று கூப்பிடவே உள்ளே சென்ருள். சமயமறிந்த ரகு "சரோ! அந்த மாயாஜாலக்காரன் எங்கே கிடக்கிருன்" என்ருன்.

சரோஜாவிற்கு தெரிந்திருந்தும் "யாரடா அந்த மாயா ஜாலக்காரன். நான் பார்த்ததே இல்லேயே" என்ருள்.

"நீ எங்கே பார்த்திருக்கிருய் போ. அந்த முத்துவை தான் சொன்னேன்."

"அவனுக்கு இப்போது என்ன கேடு வந்துவிட்டது. ஏன் வள்ளியை போதாது அவனேயும் அடிக்க கை ஊறு கிறதா. பாவம், அவன் வீட்டில் சமைத்துக் கொண்டிருப் பான்."

"சரோ! உனக்கு வாய் ரொம்ப அதிகமாய் விட்டது. நாக்கை அறுக்க வேண்டும்" என்று கூறிவிட்டு ஏதோ யோசனே செய்தான்.

"என்ன ரகு யோசனே செய்கிருய். என் நாக்கை எந்த கத்தியால் அறுக்கலாம் என்ரு. இல்லே முத்துவை எப் படி அடிக்கலாம் என்ரு...."

"ஏய் அதிகப்பிரசங்கி! போய் அந்த நல்முத்து, கல்சர் முத்துவைக் கூப்பிடு" என்ருன்.

"நல்ல வேளே முத்து என்பதற்கு வேறு ஏதாவது சொல்லாது நல்முத்து என்ருயே, இதோ கூப்பிடுகிறேன். நீ அவனே என்ன எதிர்த்து திட்டி அடித்தாலும் அவன் தயவுதானே உனக்கு வேண்டியிருக்கிறது" என்றவாறு பின்புறம் சென்று, முத்துவையும் அழைத்து வந்தாள்;

"ஏய்! இதைக் கொண்டுபோய் கொடுத்துவிட்டுவா"- கடிதத்தைக் கொடுத்தான். "யாருக்குங்க" தயங்கியவாறே கேட்டான் முத்து.

"முத்தூ! இது தெரியாது உனக்கு. சதாசிவம் தாத்தா வீட்டிற்குதான் இல்லாவிட்டால் உன்னிடம் ஏன் வருகி றது." என்று தன் குணத்தை விடாமல் பேசினள். சரோஜா.

முத்துவும் கடிதத்துடன் நடந்தான்.

* * *

முத்துவிடமிருந்து கடிதத்தை வாங்கிய சதாசிவம் அதைப் பிரிக்காமலேயே பேச ஆரம்பித்தார்,

"என்ன முத்தூ! எப்படி இருக்கிறது வீடெல்லாம்?" என்ருர் சிரித்துக் கொண்டே.

"நெருப்பு இல்லாமலே பத்தி எரியும் போலிருக்குதுங்க. எள்ளும் கொள்ளும் வெடிக்குது எல்லோரிடமும், "என்ன ஆவப்போவுதோ."

"ஓ! நேத்து அம்மாவோட தம்பி வந்திருந்தாரு. ராவு ரொம்ப நேரம் வரைக்கும் அம்மாளும் அவரும் பேசிக்கிட்டிருந்தாங்க, ரேவதி அம்மா எங்கேயோ போய்விட்டு ராவு ரொம்ப நேரங்கழிச்சி வந்ததுன்னு ஏதோ இரைஞ்சிகிட்டிருந்தாங்க.',

'' என்ன பேசினார்கள்"

"எனக்கென்னங்க தெரியும்! நேத்து இங்கிருந்து போனதும் வேலையை முடிச்சிக்கிட்டு ஒருவாய் கஞ்சியோட, கேட்டண்டெ காவலுக்கு படுத்தவன்தான். வீட்டுக்குள்ளார பேசறது எப்படிங்க காதிலே விழும்."

"இந்த கடிதத்தை யாரு அம்மாவா கொடுத்தாங்க"

"இல்லீங்க ரகுதான் கொடுத்தாரு. கொஞ்ச நேரம் முந்திகூட கலாட்டா.ரேவதி அம்மாவும் எங்கோ போய்விட்டது அம்மா ஏதோகேட்டு அடக்கினதற்கு, அலக்ஷியம் பண்ணிவிட்டு பூட்டதுங்க ரேவதி."

"ஹூம்...எப்படியோ போகட்டும். ரகுவா கொடுத்தான் இதை. அப்படி என்றால் நீ இரு. நான் உரக்கவே படிக்கிறேன், கேள். நீயும் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லதுதானே." என்று கூறிவிட்டு கடிதத்தைப்படிக்க ஆரம்பித்தார்.

"சாதசிவத்திற்கு,

கடிதம் கண்டேன். பழி என நினைக்காது கவனித்து வழிசெய் என்று பெரியதாக எழுதியிருக்கிறீர்களே. நீங்கள் எழுதியது பழி அல்லாது என்ன? ரகுவை இது பற்றி விசாரித்தேன். விவரம் எல்லாம் எனக்குத்தெரியும். எங்கள் பணத்தை பாதுகாப்பது போல்—மிகவும் அன்பாக, எங்களுக்காக இரக்கப்படுவதுபோல்-நடித்து எங்கள் பணத்தை அபகரிக்கச் செய்யும் வழி எங்களுக்குத் தெரியாது என்று நினைத்து ஏமாறவேண்டாம். இந்த சூழ்ச்சியை அறிந்தே ரகு எங்கள் பணத்தை கொஞ்சம் கொஞ்மாக தருவித்துவிட வேண்டும் என்றுதான் வந்தான். வந்தால் நீங்கள் பேசும் தோரணையிலிருந்து உங்கள் சூழ்ச்சி ஒருஅளவு வெளிப்படும் என்று எதிர்பார்த்தோம்....

சதாசிவம் படிப்பதை நிறுத்திவிட்டு பெருமூச்சுடன் முத்துவின் முகத்தைப் பார்த்தார்.

183204
சென்னை 600 0..

ஸௌ. ஆசூரி பத்மாசனி அவர்கள், தான் சென்று கண்டு களித்த அமெரிக்காவை மோகினியின் அன்பர்களுக்கு எழுத்தோவியத்தில் ப்ரதிபலிக்கச் செய்கிறதை, எல்லோரும் பாராட்டி வரவேற்பீர்கள் என்று நினைக்கிறோம்.

வழக்கப்படி உங்கள் அன்பு சந்தாவை அனுப்பி மோகினியை ஆதரிக்க வேணுமாய்ப்ரார்த்திக்கிறோம்.

—வை. மு. வி.

அடுத்த இதழில்....

இந்த இதழுக்காக ஸ்ரீமான் P. M. ஸ்ரீனிவாச அய்யங்கார், B, A., M. L., [Retd Dt Judge.] ஹிந்து விவாகாதிகளைப்பற்றின தர்ம சாஸ்திரங்களும், அவைகளில் இந்தியா தேசத்து பார்லிமெண்டினுல் அமைக்கப்பட்ட மாறுதல்களும் பற்றி எழுதியுள்ள விசேஷ ஆராய்ச்சி தொடர்க் கட்டுரையும், பேராசிரியர் ரா. ஸ்ரீ தேசிகன், M., A., ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன், மற்றும் சிலருடைய கட்டுரைகளும் அவகாச மின்மையால் போட முடியாதது பற்றி மிகவும் வருந்துகிறோம். அடுத்த இதழில் இவற்றை வெளியிடுகிறோம்.


சந்தா நேயர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு.

உங்களது சந்தாவை முன்னதாகவே அனுப்பி; சஞ்சிகையை தொடர்ச்சியாகப்பெற்றுக் கொள்ளுங்கள்!

**உங்கள் ஊரில்**

உள்ள ஏஜெண்டிடம் இந்த இதழின் தொடர்ச்சி கிடைக்காவிடில், சந்தாவை எமக்கு நேரில் அனுப்பினுல் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பி விடுகிறோம்.

**ஜகன்மோகினி,**

34-வது ஆண்டு ஆரம்பம், ஜனவரி 1957.

வருடச் சந்தா ரூ. 3. தனிப் பிரதி அணு 4.

---

**ஒரு நற்செய்தி**

அடியிற்கண்ட **புதிய** வெளியீடுகளும் பலகாலமாகக் கைவசமில்லாதிருந்த புத்தகங்களின் **மறு பதிப்புகளும்** தயாராகயிருக்கின்றன. தங்களது தேவைக்குஎதிர் பார்க்கிறோம்.

**புதிய வெளியீடுகள்:**

**வை. மு. கோ வின்**
**தென்னாட்டுக் கல்யாண முறைகள்** அணு 12

**வை. மு. ஸ்ரீ யின்**
**ஸ்ரீகோதாஹ்ருதயம் அல்லது**
**ஸ்ரீகிருஷ்ணப்ரேமா** அணு 12

**மறுபதிப்புகள் —**

**வீரவஸந்தா** ரூ. 1-4 **மகிழ்ச்சி உதயம்** ரூ. 1-8
**மதுரகீதம்** ரூ. 2-8 **வானக்குயில்** ரூ. 2-8

**வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்**
**ஸ்ரீகிருஷ்ணுர்ப்பணம்** ரூ. 1-8

அருணை
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.
AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மல நீரோடை

ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
மாதுதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்ரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
எழுச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை

பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா.12
பத்மமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்

அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

வை. மூ. ஸ்ரீ
உதய சூரியன்
பெண்மணிக்கனல்
இருளில் ஒளி
தியாகபலி
ஜயந்திசிந்தனைகள்
கோதாஹ்ருதயம்

வை. மூ. பத்ம
ரூ. 1 8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப் .
பாலர் மோகினி
12 சிறு கதைகள்

சுத்தானந்த பா
காந்தி கீர்த்தனம்

ப்ர.ப. அண்ண
ராசார்ய ஸ்வா
ஸ்ரீவிஷ்ணு
ஸஹஸ்ர
நாமஉரை
அபூர்வ
ராமாயணம்

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.